பதிவு இலக்கம் : 105267

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepamtv.asia

விலை 30 ரூபா • தீபம் 206 • 01.12.2019

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
HOTLINE : 077 722 6247
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com

## எங்கே.. எங்கே? ஒரு தரம் உங்கள் விழிகளைத் திறவுங்கள்.. ஒருகணம் உங்கள் திருமுகம் காட்டி மறுபடி துயிலுங்கள்..




சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 7578, 021 221 7678
077 614 0361, 077 722 6247
HOTLINE : 077 722 6247
ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664, 070 301 3016
கே.கே.எஸ் வீதி, மல்லாகம். 021 224 3393, 070 301 3014
வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472, 070 301 3012
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 070 255 4135
இல.281C, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். 021 222 8004, 070 301 5004
பழைய கண்டி வீதி (பிரதான வீதி) காரைநகர். 021 225 2454, 070 510 2484
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com

இது தமிழ் பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை




## வடமாகாணத்தில்..

- பரந்தன் - முல்லைத்தீவு பிரதான பாதை A35.
- மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதை A34.
- முல்லைத்தீவோடு இணைக்கப்பட்ட பிரதேசம் - மணலாறு (வெலிஓயா).
- யாழ் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1933 ஆம் ஆண்டு.
- இலங்கையில் வறுமை கூடிய மாவட்டம் - கிளிநொச்சி.
- யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 1984 பெப்ரவரியில் கிளிநொச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டது.
- யாழ் கோட்டை போர்த்துகேயரால் 1625ல் கட்டப்பட்டது.
- தற்போது காணப்படும் யாழ் கோட்டை ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 1658 யூன் 23ற்கு பின் கட்டப்பட்டதாகும்.
- யாழ்ப்பாண அரசின் நாணயம் - சேது நாணயம்.
- யாழ்ப்பாண அரசின் பழைய சின்னமாக விளங்குவது - நந்தி.
- வன்னி இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1803ம் ஆண்டு.
- ஒல்லாந்தரால் சொத்துரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரித்தான சட்டம் - தேசவழமைச் சட்டம்.
- யாழ் நூலை எழுதியவர் - சுவாமி விபுலானந்தர் 1947.
- சுவாமி விபுலானந்தர் இயற்பெயர் - மயில்வாகனன் 1892.
- சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் - ஆறுமுகநாவலர் (1822 டிசம்பர் 18 ஆறுமுகம்பிள்ளை).
- நாவலர் 1872 இல் முதல் உருவாகிய சைவ ஆங்கிலப் பாடசாலை - வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை.



## குள்ள ராஜா

மங்களபுரம் என்ற ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரியும் இருந்தார். ராஜாவோட உயரம் நாலரை அடிதான். ஆனா அமைச்சரோ ஆறடி உயரம் இருந்தார்.

ராஜா குள்ளமா இருந்தாலும் அது பத்தி கவலையில்லாம இருந்தார். அவர் விருப்பத்திற்கேற்ப மந்திரி நடந்தார்.

ஒருமுறை ராஜாவும், மந்திரியும் மாறுவேஷத்துல நகர்வலம் போனார்கள். அப்போது ஒரு வீட்டில் ஒரு அப்பா, தன் பையனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். "நல்லா குதிச்சு உயரமா ஆகற வழியைப்பாரு. இல்லேன்னா நம்ம ராஜா போல குள்ளமா ஆயிடுவே" என்று கூறினார்.

இதை கேட்டதும் ராஜாவுக்கு கடுங்கோபம் வந்தது. மாறுவேஷத்தை யாருக்கும் காட்டிக்கொடுக்கவும் விரும்பவில்லை. இருவரும் விடுவிடுவென்று அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அன்றைக்கு முழுவதும் ராஜா கோபமாகவே இருந்தார்.

மறுநாள் காலை ஊர் முழுக்க தண்டோரா போடச் சொன்னார் ராஜா.

"இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், நாலரை அடி உயரத்துக்கு மேல ஊருல ஆம்பிளைங்க யாரெல்லாம் இருக்காங்களோ, அவங்க எல்லோரும் உடனடியா ஊரை விட்டு வெளியேறணும்" என்று அறிவிப்பு வெளியிட்டார் ராஜா. அதனால் ஊருல இருந்த எல்லா பெரி யவங்களும் உடனடியா வெளியேறி விட்டார்கள். மந்திரி ஆறடி உயரம் இருந்தாலும், மந்திரி மட்டும் காலி பண்ணாம இருந்தார். ஆனால், ராஜா பார்த்தால் திட்டுவாரேன்னு மறைந்து வாழ்ந்து வந்தார். எல்லா பெரியங்க ளும் வெளியே போய்ட்டதால சின்ன பசங்க சில பேரை ஒற்றர்களாகவும், அமைச்சர்களாகவும் ராஜா நியமிச்சார். ஆனா வீரர்களா இருக்க உயரமும் வேணுமே? அதனால வீரர்கள் மட்டும் கிடைக்கவே இல்ல.

இதெல்லாம் ராஜாவை எப்போ கவிழ்க்கலாம் என்று காத்துக் கொண்டிருந்த எதிரி நாட்டு ராஜாவுக்கு தெரிந்தது. அதனால மங்களபுரம் மேல போர் தொடுக்க போவதாக அறிவிப்பு தந்தார். அத்துடன், தனது வீரர்களோடு ஊரையும் முற்றுகையிட்டார்.

மங்களபுரத்தில் வீரர்கள் இல்லாததால் ராஜாவுக்கு ஒரே கவலை.

இந்த நேரத்தில் ராஜாவின் முன்னால் மந்திரி அரண்மனைக்கு வந்தார். மந்திரியைப் பார்த்ததும் ராஜாவுக்கு சந்தோஷம். ஆனா, வெளியில அதை காட்டிக்காமல் கோபமாக பேசினார்.

"இப்ப ஏன் இங்க வந்தே?" என்று கேட்டார். "மன்னா, என் கால் ரெண்டையும் பாருங்க. நான் குள்ளமா இருக்கணும்கிறதால அப்படியே வெட்டிக்கொண்டேன்" என்றார் அமைச்சர்.

ராஜா அப்போதுதான் அமைச்சரின் காலைப் பார்த்தார். கால் குண்டா இருந்தது. ஆனால், கால் முழங்காலை மடிச்சு சின்னதா இருப்பது போல காண்பித்திருந்தார் அமைச்சர். ராஜாவுக்குப் புரிந்தது. அமைச்சரின் நகைச்சுவையை ரசித்தார். உடனே வேலையில் சேரும்படி அமைச்சருக்கு ராஜா உத்தரவிட்டார். உடனடியாகக் களத்தில் இறங்கிய அமைச்சர், மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்கு சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சியளித்தார். அவர்கள் மூலம் ஊரை காலி செய்து விட்டுப் போன வீரர்களுக்கு தகவல் கொடுத்தார்.

வீரர்கள் எல்லோரும் பின்புறமாக அரண்மனையில் குவிந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அதை தாங்க முடியமால் எதிரி நாட்டுப் படையினர் ஓட்டம் பிடித்தார்கள்.

நாட்டை ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்காக மந்திரிக்கு ராஜா நன்றி தெரிவித்தார்.

நாட்டை ஆள்வதற்குத் தேவை வீரமும், அறிவும்தான். அதை ஒழுங்காகச் செய்வது தான் முக்கியம் என்பதை ராஜா உணர்ந்து கொண்டார். உடனே உயரமானவர்களுக்கு விதித்த தடையை நீக்கினார். எல்லோரும் ராஜாவை வாழ்த்தினார்கள்.


## புதிர் விடுகதைகள்

1. கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?
2. அடிப் பாதை இருக்கும் கால் இருக்காது. அது என்ன?
3. இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?
4. மாடிகளற்ற வீட்டில் எல்லா பொருட்களும் நீல நிற பூச்சு பூசப்பட்டிருப்பின் அதன் படிகள் எந்த நிறத்தில் இருக்கும்?
5. உலகம் முழுதும் சுற்றும் ஆனால் ஒரே இடத்திலேயே இருக்கும். அது என்ன?
6. கைகள் இருக்கும் ஆனால் கைதட்ட முடியாது. அது என்ன?
7. இறக்கையை விட மென்மையானது. ஆனால் உலகின் பலமிக்க மனிதராலும் சில நிமிடங்கள் பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன?
8. சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும். அதை வாசித்தால் அதன் அர்த்தம் முறிந்துவிடும். அது என்ன?
9. கண் உண்டு, ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?

விடைகள்–10 புதிர் விடுகதைகள்

1. மழை
2. நத்தை
3. மெழுகுவர்த்தி
4. படிகள் இருக்காது
5. முத்திரை
6. கடிகாரம்
7. மூச்சு
8. அமைதி
9. ஊசி

## 5 வித்தியாசங்கள் கண்டு பிடிக்கவும்



## வர்ணம் தீட்டுவோம்



வார இதழ்
# தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
01.12.2019 — இதழ் - 206
gmail : newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் : 021 492 7542, 077 198 9445

## எதிர்கால அரசியலுக்கான கட்டியம் கூறல்

ஜனாதிபதித் தேர்தல் முடிவு இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவரின் ஆதரவோ, வாக்குகளோ இன்றி பெரும்பான்மை சமூகத்தவரின் பேராதரவுடன் ஒருவர் அதுவும் பெரும்பான்மை இனத்தவர் நாட்டின் தலைவராக முடியும் என்ற செய்தியை மிகவும் இறுக்கமாகத் தெரிவித்துள்ளது. அதேசமயம், எந்த வகையிலும் இது பௌத்த சிங்கள நாடு என்ற முத்திரையையும் பேரினவாதிகளால் அழுத்தமாக சிந்திக்கவும் வைத்துள்ளது.

அந்நியர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் இந்த நாட்டு மக்களிடையே ஓரளவுக்கேனும் இருந்த நாம் இலங்கையர் என்ற பொதுத்தேசிய உணர்வானது கட்டம் கட்டமாக பெரும்பான்மை, சிறுபான்மை என்ற மொழி சார் அடிப்படையிலான இன உணர்வாக மாற்றமடையத் தொடங்கியது. அதன் பின்னர் இருந்த அரசியல் மிகவும் துல்லியமான உள்நோக்கத்துடன் கூடிய தொலைநோக்குத் திட்டமிடல்களின் அடிப்படையிலானது என்பது எல்லோரும் அறிந்த விடயமேயாகும்.

சுதந்திரத்துக்கு பின்னரான ஒரு தசாப்த கால அரசியல் நகர்வுடன் மொழிகள், இன வேறுபாடுகள் மேலும் பௌத்தமதம் தனது ஆதிக்கத்தை வலுவாக்கத் தீவிரம் காட்டியபோது சிங்களம் - தமிழ் மொழிப்பிரச்சனையை மையப்படுத்தியபடி பௌத்தம் - இந்து - முஸ்லீம் என்ற மதம் சார் கோட்பாடுகள் இனமுரண்பாடுகளை மேலும் மூர்க்கம் கொள்ள வைத்த போது இந்த நாட்டை அரசியல் மேலாதிக்க நோக்கில் ஆட்டிப்படைக்கும் வலுவான சக்தியாக பௌத்த மத பீடங்கள் வலுப்பெற்றன. இந்த இன மொழி மத அடிப்படையிலான வெறித்தனமான, மந்த புத்தியுடன் பதவி அதிகார இலக்கும் கொண்டதான அரசியல் கட்டமைப்புகள் இந்த நாட்டின் மக்கள் அனைவரும் தாம் இலங்கையர்களே என்ற எண்ணக்கருவுடன் ஒருமித்து இயங்குவதற்கான ஒரு ஆரோக்கியமான சூழலை முற்றாக நிர்மூலமாக்கின. மத இன மொழிசார் அடிப்படைவாத சிந்தனை மூர்க்கம் கொள்ள, மனித அடிப்படை வாதம் முற்றாகப் புறந்தள்ளப்பட்டுவிட்டது.

கடந்த ஏழு தசாப்த கால சுதந்திரம் இந்த நாட்டின் மக்கள் அனைவரையும் மதம் மொழி இன ரீதியிலான அடிப்படை வாதத்திற்கு மீளா அடிமைகளாக்கிவிட்டது. கீதை, பைபிள், தம்மபதம், குர்-ஆன் எனும் தத்துவார்த்த தார்மீக சிந்தனை குறித்துப் பேசும் மத வாதிகளும், மதபீடங்களும் அரசியல்வாதிகளையும் அரச பீடங்களை ஆக்கிரமித்து அதிகாரம் செய்ய ஆரம்பித்தமையே அனைத்து அழிவுகளுக்கும் காரணம் என்பது கவலைக்குரிய நிரந்தர அவலமாகிவிட்டது.

அண்மைக்காலமாக இந்த நாட்டின் அமைதியைத் தமது மனித நேயத்தை நிராகரிக்கும் ஆத்திரமூட்டும் செயல்களால் குலைத்து வரும் மதவாதிகளின் செயல்கள் எவ்வளவு ஆபத்தானவை என்பது இந்த அரசியல்வாதிகளுக்குத் தெரியாததல்ல. அவர்களின் தேசப்பற்றும் மனித நேயமும் மிகவும் பலவீனமாகவும், பதிவிப்பற்றே மிக அதிகமானதாகவும் இருப்பதாலேயே அவர்களால் மத வாதத்தை மீறி எதுவும் செய்ய முடியாதுள்ளது. ஆரம்பத்தில் தமிழ் சிறுபான்மை, சிங்கள பெரும்பான்மை என இருந்த விவகாரம் இப்போது மொழி கடந்ததாய் மதரீதியில் மூர்க்கம் கொண்டுள்ளது. இது ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பௌத்த, இந்து, இஸ்லாம் என்ற மத அடிப் படைவாத அதல பாதாளத்துள் வீழ்ந்து விட்டது.

நடந்து முடிந்த் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் அதன் தாக்கம் முழுமையாகவே வெளியிடப்பட்டுள்ளது. பிக்குமார் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்கள் என்பதை இந்தத் தேர்தல் நிரூபித்துள்ளது என்று பொதுபலசேனவின் ஞானசார தேரர் சொன்னதையும், நான் சிங்கள மக்களின் வாக்குகளாலேயே வெற்றி பெற்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய கூறிய வார்த்தைகளினூடாகவும் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தொடரப் போகும் அரசியல் வரலாற்றிற்கான கட்டியம் கூறலாகவே இதனைக் கருதத் தோன்றுகிறது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட இடைக்கால அரசின் அமைச்சர்களில் முஸ்லீம் எவரும் உள்ளடக்கப்படவில்லை. பின்னர் பதவியேற்ற பிரதி அமைச்சர்களில் எந்தவொரு சிறுபான்மை சமூகத்தவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதனை ஒரு வெறும் செய்தியாக மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. இதனூடாக எதிர்கால இலங்கை ஆட்சி அரசியலுக்கான மூலவரிகள் இப்படித்தான் இருக்கும் என உணர்த்தப்பட்டுள்ளதாக அரசியல் தூர நோக்கு சிந்தனை கொண்டோர் கருதுகிறார்கள்.

## சத்திய வேள்வியின் சரித்திர நாயகர்கள்



ஓயாத அலைகளாய்
ஓங்கி அடித்துக் கரைதேடி
உறங்காத விழிகளோடு
ஒவ்வொரு கணமும் உறவாடி
உரிமைகளை வென்றெடுக்க
உத்வேகமுடன் தினம் ஓடி
உள்ளத்தில் மாபெரும்
உறுதி கொண்டு களமாடி
உயிரிதழைக் காற்றிலூதி
உயரிய இலட்சியத்தீயில்
விழிமுடிப் போன எங்கள்
விடுதலைத் தீபங்களே !
உமக்கென ஒரு சுடரேற்றுகிறோம் - எம்
இதயக்கோவிலிலே
ஒரு முறை தரிசனம் தரவேண்டும் - எம்
உதய வேளையிலே.

சுவாசத்தில் சூழலும் காற்றில் - உங்கள்
மூச்சினை உணர்கின்றோம்.
வாசம் வீசும் பூக்களில் - நீங்கள்
வண்ணங்களாய் மிளிர்வதைக் காண்கின்றோம்
வானத்து வெள்ளிகளில் - நீங்கள்
புன்னகைப்பதைப் புரிந்துகொள்கிறோம்
மாவீரரே
எங்கும் எதிலும் பொலியும்
உங்கள் முகம் காணத் துடிக்கும் எங்களுக்காய்
ஒரு முறை வரமாட்டீரோ?
காவலரண்களில் காவல்தெய்வங்களாய் - எதிரிகள்
கதை முடித்த களப்புலிகள் நீங்களெங்கே ?
எறிகணை மழை பொழிய
சுடுகலச் சன்னங்கள் சீறும்
பெருயுத்தக் களம் மீதில்
எரிதணலாய்ப் பொருதி
எமனையும் மலைக்க வைத்த
இமயங்களே!
உங்களுக்காக ஒரு மனப்பட்டுக் காத்திருக்கிறோம்
உள்ளத்தால் உருகி நிற்கிறோம்.
ஒருமுறை கண்திறப்பீரோ?

- கலைமகள் நன்றி : இருப்பு.கொம்

# ஊகங்களின் அடிப்படையில் அரசியல் நடத்தும் தமிழ் அரசியல் தலைமைகள்




தோன்றிய வெளிச்சமும், இருட்டிய நிலையில் தமிழினத்தின் எதிர்காலம் பட்டறிவின் அடிப்படையில் ஏற்படும் நம்பிக்கையிலும், உறுதியான கொள்கைப்பற்றின் நம்பிக்கையிலுமே கட்டி எழுப்பப்பட வேண்டியதாகும். ஆனால் இன்றுள்ள தமிழ் அரசியல் தலைமைகள் வெறும் ஊகத்தின் அடிப்படையில் நம்பிக்கையை ஏற்படுத்தி அரசியல் நகர்த்தல்களை கொண்டு செல்லலாம் என்று எண்ணிக் காரியம் ஆற்றுகின்ற அவலம் தான் இன்று தமிழ் மண்ணில் நடக்கும் அரசியலாகும்.

## சம்பந்தனின் ஊக வெளிப்பாட்டின் மந்திரச் சொற்கள்

தமிழ் மக்களின் உரிமைகள் இவைதான் என்று கூறுகின்ற துணிவு இல்லாத நிலையில் தான் பெரும்பாலான அரசியல் கட்சிகளை நாம் காணக்கூடியதாக, இருக்கிறது. பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத என்ற சொற்களைச் சொல்லியபடி ஒரு அரசியல் கட்சித் தலைவர் இருக்கிறார். இந்தச் சொற்களை இவர் எந்நாளும் சொல்லிக்கொண்டு இருப்பதன் நோக்கம் என்ன? இவ்வாறு திருப்பித் திருப்பிச் சொல்வதால் தான் இவர் பிரிவினை கேட்கவில்லை என்று மற்றவர்கள் நம்புவார்கள் என்று ஊகிக்கிறாரா அல்லது இந்தியாவும் உலகமும் நம்பும் என்று நம்புகிறாரா என்பது புரியவில்லை! "இப்படிச் சொல்லிக்கொண்டே உமது அரசியலை நகர்த்தும்" என்று யாராவது சொல்லிக் கொடுத்து இவர் இப்படிச் சொல்லிக்கொண்டு இருக்கிறாரா என்பதும் தெரியவில்லை.இது அவரது மந்திரச் சொல் ஆகத் தான் இருக்க வேண்டும்.. அதனாற்றான் திரும்பத் திரும்ப உச்சரிக்கிறார் அவற்றை.

இவர் தான் எப்பொழுதும் இவ்வாறு கூறிவருகிறாரே என்றால் மற்றவர்களாவது யதார்த்த அரசியலை பேசுகிறார்களா? அவர்களும் ஊகத்தின் அடிப்படையில் தான் அரசியல் செய்கிறார்கள். இது இன நலன்களை முற்றாகப் பாதிக்கும் ஒரு அரசியலாகும். சனாதிபதித் தேர்தல்களில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது தமிழ் மக்களின் வாக்குகளே என்று ஊகத்தின் அடிப்படையில் மக்களை நம்பவைக்கும் முயற்சிகளில் இவர்கள் நடந்து கொண்டிருந்தது கண்கூடு.. இது எப்பொழுது சாத்தியமாகியது என்று மக்கள் சிந்திப்பதற்கு இவர்கள் இடம் கொடுப்பதில்லை மக்களும் உண்மையான காரணங்களைப் பற்றிச் சிந்திப்பதும் இல்லை.

ஆயுத மௌனிப்பிற்குப் பின்னரான காலம் தான் இத்தகைய நிலையை ஏற்படுத்தியுள்ளது. 2010 இல் நடந்த சனாதிபதித் தேர்தலில் போருக்கான முழுப்பொறுப்பையும் கொண்டிருந்த மகிந்த ராஜபக்சாவும். போருக்குத்தலைமை தாங்கிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் போட்டியிட்டபோழுது, தமிழர்களின் அரசியல் தரப்புத் தமிழர்களே சனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் சக்தியாக இருப்பார் என்று கூறி மக்களை சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கக் கோரியது. இந்த ஊகம் தோற்றுப்போனது. இதில் உண்மை நிலை என்னவென்றால் ரணில் மகிந்தவை எதிர்த்து நின்று வெற்றிபெற முடியாது என்றபடியால் போரை நடாத்திய இராணுவத் தளபதியைக் கொண்டு வந்தார். உண்மையில் ரணிலுக்காகவே தமிழ் அரசியல் தலைமை கொடிய போரின் பங்குதாரரான ஒருவரை விட்டு இன்னொருவருக்கு ஆதரவு கொடுத்தது. இம்முடிவுக்குக் காரணம் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தி என்ற ஊகத்தின் அடிப்படையிலான தவறான கணிப்பு ஆகும்.

அடுத்து வந்த 2015 ஆண்டுச் சனாதிபதித் தேர்தலிலும் ரணில் போட்டியிடவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்தியதன் மூலம் அதன் தலைவர்களில் ஒருவரும் போரை நடாத்திய பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமாகிய மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக்கியதன் மூலம் ஒரு வெற்றியைப்பெற முடிந்தது. இதில் தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றியைத் தீர்மானித்ததில் பங்கு கொண்டது உண்மையே. இது எப்பொழுதும் இருக்கும் நிலையென்று ஊகிப்பது அரசியலில் ஆரோக்கியமான சிந்தனையாக இருக்க முடியாது. அதைத் தான் 2019 சனாதிபதித் தேர்தலும் தெளிவாக்கியிருந்தது.

நாடு விடுதலை அடைந்த சில ஆண்டுகளில்

## இளைஞர்களினால் ஏற்பட்ட சிந்தனை மாற்றம்

தமிழ் அரசியல் தலைமை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசு என்றும் இலங்கைத் தமிழரசு என்றும் இரு கூறுகளாகப் பிரிந்து நின்றது. இப்பிரிவினை சிறிமாவோவின் 1970 தேர்தல் வெற்றியின் பின்னர் ஒரு சிந்தனை மாற்றத்தை இரு கட்சிகளுக்கும் ஏற்படுத்தியிருந்தது. எழுபத்திரண்டில் கொண்டு வரப்பட்ட குடியரசு யாப்பு அரசியலில் ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தியது என்பது மிகை அல்ல. ஆனால் இது தனியே அரசியல் கட்சிகளின் மனதில் எழுந்த மாற்றங்கள் என்று கருத முடியாது.

தரப்படுத்தலால் மாணவர்களிடையே ஏற்பட்ட உளவியல் மாற்றம் ஆட்சியாளர்களின் தமிழினத்தின் மீதான கெடுபிடிகள ஆகியன இன ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி நின்றன. அதனால் தான் இருகட்சிளும் சுயாட்சிக்கழகமும் இணைந்து தமிழர் கூட்டணி தோன்றி அது தமிழர் விடுதலைக் கூட்டணியாக வளர்ந்து வந்தது. அது கூடப் பின்னாளில் உடைந்தாலும், மக்கள் குறிப்பாக இளைஞர்களின் பங்களிப்பால் தமிழர் விடுதலைக் கூட்டணி வலுப்பெற்று வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரை சென்றது எனலாம். ஆனால் இளைஞர்களின் சிந்தனையின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாத உள நிலையில் தான் அரசியல்வாதிகள் இருந்தார்கள். ஆனால் பின்னர் இளைஞர்களுக்கிடையில் கட்சியின் நலன் கருதிப் பிளவுகளை ஏற்படுத்தினர் அரசியல்வாதிகள்..

ஜே ஆர் ஆட்சியில் 1977, 1981, 1983 ஏற்பட்ட இனப்படுகொலைகள் இளைஞர்களை மாற்றியிருந்தாலும் அவர்களில் சில அமைப்புகளும் ஒற்றுமையை மறந்து, ஊகங்களின் அடிப்படையில், தங்களின் அமைப்புகளை வளர்க்கத் தொடங்கினார்கள். அயல் நாடும், ஆயுதப் போராட்டத்தை ஊக்கு விப்பது போல் காட்டிக்கொண்டு நான்கு ஐந்து பிரிவுகளாக இளைஞர்கள் வளர உதவி செய்தார்கள். ஒற்றுமையாக ஒன்றாக இருந்தால் தங்களின் சொல்லுக்கு கட்டுப்படாவிட்டால் தமது கைகளை மீறி இளைஞர்கள் சென்று விடுவது தமது நலன்களுக்கு மாறாக இருந்து விடும் என்பது அவர்களின் நோக்கமாகும். தமிழ் மக்களின் நலன்களிலும் பார்க்க தமது நாட்டின் நலனை முன்னிருத்தியே அவர்களின் செயல்பாடும் இருந்தது. இச்சதித் திட்டத்தை உணர்ந்தும் அந்நாடு உதவி செய்யும் என்ற ஊகத்தில் தமிழினத்தின் ஒற்றுமை உணர்வை சிதைத்தன அவ்வாயுதக் குழுக்கள்.

அரசியல்வாதிகளிலும் பார்க்க மக்கள் தமது இன உரிமைகளில் கூடிய அக்கறையும் ஒற்றுமையும் காட்டியே வந்துள்ளனர். தேர்தல்

## மக்களின் ஒற்றுமையான ஆதரவு


அரசியலில் கட்சிகள் பிளவுண்ட நிலையிலும் ஒரு கட்சிக்குப் பெரும் ஆதரவை எப்பொழுதும் கொடுத்து வந்துள்ளனர். அதே போன்றுதான் ஆயுதப் போராட்டத்தில் தொடக்கத்தில் "பெடியங்கள்" என்று பொதுவாக அழைத்த மக்கள், பின்னர் உண்மையை உணர்ந்துகொண்டு ஒரே அணிக்கு முழு ஆதரவை முள்ளிவாய்க்கால் வரை கொடுத்தனர். இது தான் உண்மை வரலாறாகும். அயல் நாடு உரிமை பெற்றுத் தரும் உதவி செய்யும் அதனை நம்புவோம் தேவை என்றால் அந்நாட்டின் போர்வீரனாகவும் இருப்பதில் பெருமை உண்டு என்று சொல்லியவர்களையும், அவர்களின் ஊகத்தையும் மக்கள் கணக்கில் எடுக்கவில்லை. மக்கள் யதார்த்தத்தை நன்றாக உணர்ந்திருந்தார்கள். அதனாற்றான் ஆயுதக் குழுக்கள் என்றும் ஒட்டுக்குழுக்கள் என்றும் அவை அழைக்கப்பட்டன.

### இன்றைய ஊகங்கள்

சனாதிபதித் தேர்தல் தொடங்கும்போழுதே கோத்தபாய தனக்குச் சிங்கள மக்களின் வாக்குகளே வெற்றியைத் தரும் என்று கூறினார். அவரது கூற்று முற்றிலும் உண்மை எனத் தேர்தல் முடிவுகள் காட்டின. தமிழ் அரசியல்வாதிகள் "தமிழர்களே யார் சனாதிபதி என்பதைத் தீர்மானிக்கும் சக்தி" என்று கூறி வந்தனர். அது முற்றிலும் தகர்க்கப்பட்டு விட்டது. தீர்மானிக்கும் சக்தி என்பது பேரம் பேசும் நிலைமை ஏற்பட்டு முடிவு எட்டப்படுவதற்கு காரணமாக அமையும். ஆனால் இங்கு பல்கலைகழக மாணவர் ஒன்றியம் கட்சிகளை ஒன்றிணைத்து கட்சிகளின் பங்களிப்புடன் தயாரித்த பதின்மூன்று கோரிக்கைகளுக்கு என்ன நடந்தது. அக்கோரிக்கைகளை அதில் கையெழுத்திட்ட எந்தக் கட்சியும் பின்னர் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அக்கோரிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அல்லவென்று கூறினார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். இது முற்றிலும் ஒரு ஏமாற்று அரசியலே. ததே.கூட்டமைப்பில் உள்ள கட்சிகளும் மற்றக் கட்சிகளும் இணைந்து தயாரித்துக் கையெழுத்திட்ட வரைவு கூட்டமைப்பின் கோரிக்கைகள் "ஆகா" என்பது ஏதோ ஒரு ஊகத்தின் அடிப்படையில் கூறப்பட்டது என்று தானே கருத வேண்டும்.

அடுத்துச் சுமந்திரன் கூறினார், "நாம் ஏற்கனவே இவற்றைத் தயாரிக்க முன்னரே வேட்பாளர்களுடன் பேசத் தொடங்கி விட்டோம் எனவே இவற்றை வைத்துப் பேச முடியாது" என்று. இதை மாணவர்களுக்கு முன்கூட்டியே கூறியிருக்கலாமே. இவர்கள் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரிப்பதற்காகவே இவ்வாறு கூறினார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் ரணில் என்ற ஊகம் தவறிப்போய் விட்டது. சஜித் பிரேமதாசாவைத் தமிழ் மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் ரணிலுக்கே ஆதரவு கொடுப்பார்கள் என்று தனது ஊகத்தைச் சுமந்திரன் வெளியிட்டிருந்தார். இங்கே அவரது ஊகம் மொத்தமாக தவிடுபொடியாகிப்போனது. ஆனால் மக்களுக்குத் தெரியும் தங்களின் நிலைப்பாடு. ரணிலும் சஜித்தும் வேறு வேறல்ல என்று. புரிந்துகொண்டவர்கள் கோத்தபாய வரக்கூடாது என்று ஒற்றுமையாக வாக்களித்தார்கள். மக்களின் மனங்களில் உள்ளதை ஊகிக்க முடியாதவர்கள் தங்களின் ஊகங்களை மேலும் மேலும் அடுக்கிகொண்டே போகிறார்கள். மற்றவர்களையும் அயல்நாட்டையும் நம்பி அவர்கள் உதவுவார்கள் என்பது குருட்டு நம்பிக்கையும் இயலாதன்மையும் ஆகும்.

2015 இல் நல்லாட்சி அரசு என்று கொண்டு வந்த அரசுடன் கூடியிருந்து சாதித்தது சுழியமே ஆகும். நான்கு ஆண்டுகளில் எதையும் பெற முடியாதவர்கள் எதிர்க்கட்சித் தலைமை என்ற பெயருடன் ஆட்சிக்கு முட்டுக்கொடுத்த உலக அதிசயம் வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றதில்லை. அப்பொழுது நெருக்கடி கொடுத்துச் சிலவற்றையாவது பெற்றிருக்கலாம். ஆனால் எப்பொழுதும் இந்தியா பெற்றுத் தரும் "மோடி" பெற்றுத் தருவார் என்று கூறிக்கூறியே காலத்தைக் கடத்தியவர்கள் தான் இன்றைய அரசியல் கட்சிகள். இப்பொழுதும் சொல்லுகிறார்கள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கோத்தபாயாவைச் சந்தித்துள்ளார் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுங்கள் என்று கூறியுள்ளார் என்றும் அவ்வாறு தீர்க்க வழி காணப்படும் என்று ஊகம் தெரிவித்துள்ளார் சுமந்திரன். இவ்வாறுதான் ஊகத்தின் அடிப்படையில் அரசியல்வாதிகள் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் இயலாமையின் வெளிப்பாடுதான் ஊகங்களின் அடிப்படையிலான அரசியல் என்பதையும் அழுதும் பிள்ளையை அவளே பெறவேண்டும் என்பதை மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளார்கள்.



# புதிய பாதுகாப்பு செயலாளராக கமல் குணரத்ன நியமனம்!

## - தமிழ் மக்கள் அச்சத்தில்! -

"பிரபாகரன் படிக்காதவராக இருக்கலாம், ஆனால் அவர் தனக்குள்ளேயும், தன்னைச் சுற்றியும், கடுமையான ஒழுக்கத்தை பேணினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர் பெண் போராளிகளை தவறாகப் பயன்படுத்தியமைக்கு எந்தச் சான்றுமே கிடையாது. அவர் ஒரு அன்பான குடும்ப மனிதராக இருந்தார். சிறிலங்கா இராணுவத்தினர், பிரபாகரனினதும், அவரது குடும்பத்தினரதும், விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளினதும், 10 ஆயிரம் ஒளிப்படங்களைக் கைப்பற்றினர். ஆனால் ஒரு படத்தில் கூட மதுபான குவளையுடன் பிரபாகரனைக் காண முடியவில்லை. அவர் ஒரு ஒழுக்கமான தலைவராக இருந்தார். அவர் ஒரு வித்தியாசமான தலைவர். பலரும், கற்க வேண்டிய பல நல்ல பண்புகள் அவரிடம் இருந்தது". மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தனது "நந்திக்கடலுக்கான பாதை" என்ற புத்தகத்தில் தலைவர் பிரபாகரனைப் பற்றி பெருமையாக எழுதியுள்ள வாசகங்கள் இவையாகும்.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளதால் தமிழ் மக்களின் யுத்த வடுவின் கனதியை குறைக்க முடியவில்லை என்பது. மக்களின் மனநிலையில் இருந்து நன்கு தெரிகிறது. இறுதிப் போரில் பட்ட துன்பங்களை நினைவுபடுத்தும் முகமாக கமல் குணரத்னவின் முகம் தமிழ் மக்களுக்கு மீண்டும் வலிகளோடு ஞாபகப்படுத்த வந்துள்ளது எனத் தமிழ் மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இழந்த உயிர்கள் கணக்கில்லை காயப்பட்டவர்களையும் உடலில் குண்டுத்துகள்களையும் தாங்கிக் கொண்டும் நடைப்பிணமாக நடமாடுகிறார்கள். ஒரு இனத்தின் போர் வடுக்கள் மாறாத வடுவாக இருக்கும் போது நாட்டின் ஜனாதிபதி இராணுவ நியமனங்களில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அவர் கவனம் செலுத்தாதால் தான் கமல் குணரத்னவின் தெரிவு இடம்பெற்றுள்ளது.



இறுதிப் போரில் போர்க்கு ற்றச்சாட்டு இவரின் மீது இருக்கிறது. இது வரை இவர் மீதான போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து இவர் விடுவிக்கப்படாமல் இருக்கும் போது இவரை எப்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்க ஜனாதிபதி முன்வந்தார்? என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையும் கேள்வி கேட்கப் போவதில்லை என்பது வெளிப்படை.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜெனிவாவில் இராணுவத்தினரின் மீதான போர்க்குற்றச்சாட்டை நீர்த்துப் போகச் செய்தனர் என்பது எல்லோருக்கும் தெரியும். இதன் ஒரு விளைவு தான் கமல் குணரத்தினவின் நியமனம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மௌனம் காப்பதற்கு காரணமாகும். நாகர் கோவிலுக்குப் பொறுப்பான 55 ஆவது டிவிசனின் ஒரு பிரிகேட்டுக்குப் பொறுப்பாக கமல் இருந்த போது நாகர்கோவில் முன்னரங்க நிலையில் ஒரு பகுதியில், இராணுவம் அமைத்திருந்த புதிய பாதுகாப்பு நிலையை விலக்குமாறு, கண்காணிப்புக் குழு மூலம் விடுதலைப் புலிகள் கோரினர். அரசாங்கமும் அதற்குத் தயாராகவே இருந்தது. ஆனால், அப்போது கேணல் நிலையில் இருந்த கமல் குணரத்ன அதனை நிராகரித்துவிட்டார். இதுவும் இருதரப்பு முரண்பாடுகள் வலுப்பதற்குக் காரணமாக இருந்தது.

இப்போதும் கூட, அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைக்காத அதிகாரிகள் சிலர் இருக்கின்றனர். விதிவிலக்காகச் சில அதிகாரிகள் இருந்திருந்தாலும், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துழைப்பது என்பது, இராணுவத் தளபதிகளின் பொதுவான இயல்பாகத் தான் இருந்து வந்திருக்கிறது. சரத் பொன்சேகாவும் கமல் குணரத்னவும், அரசாங்கத்துடன் முரண்டுபிடித்த காலம், போர் நிறுத்த காலம். இது போர் முடிந்த காலம். இவரின் நடவடிக்கை எப்படி இருக்கப் போகிறது என்பது சில நாள்களிலே தெரிந்துவிடும். 1987ம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இரண்டாவது லெப்டினனாக இணைந்தார். யாழ்ப்பாணம் வடமராட்சி யுத்த செயற்பாடுகளில் முழுமூச்சாக செயற்பட்டு பாதுகாப்பு பிரிவில் பெரிதும் புகழ்பெற்ற இவருக்கு லெப்டினன்ட் கேணல் பதவி வழங்கப்பட்டதோடு, 1991ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் வசம் இருந்த மாங்குளம் முகாமை கைப்பற்றியபோது மேஜர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

அந்த காலகட்டத்தில் தற்போதைய புதிய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவுடன் மிக நெருக்கமான உறவை கமல் குணரத்ன கொண்டிருந்தார். கோட்டாபய பணிக்கும் செயற்பாடுகள் எதுவாக இருந்தாலும் தயக்கம் இன்றி செய்து காட்டினார். அதனால் தானோ என்னவோ தமிழ் மக்கள் புதிய ஜனாதிபதி கோட்டாபய மீது விரோதம் கொண்டதால் தேர்தலில் அவருக்கு வாக்களிக்கவி ல்லை என்பது வெளிப்படை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வழிநடத்திச் செல்லும் வகையில் 53ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக அவர் நியமிக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த பாராட்டும் இவருக்கே உண்டு. இவர் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் ஒரு புறமிருக்க இவருக்கு பதவிகள் வந்து குவிந்தன. பிரேசிலுக்கான இலங்கையின் பிரதி தூதுவராக நியமிக்கப்பட்டார்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின் நாடு திரும்பிய அவர், ஒளி மற்றும் வியத்மக போன்ற கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பாதைக்கு வித்திடும் செயலமர்வுக்ள், மாநாடுகளை நடத்தி வந்திருந்தார். 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை இராணுவத்தின் மீதான யுத்தக் குற்றக் கறையை நீக்க "நந்திக்கடலுக்கான பாதை" என்ற புத்தகத்தை எழுதி அதனூடாக தன்னை ஒரு நிரபராதி என நிரூபிக்கப் பார்க்கிறார். மீண்டும் அண்மையில் "கோட்டாபய" என்ற நூலினை வெளியிட்ட அவர், இராணுவத்தை கோட்டாபய ஏன் விட்டுச் சென்றார் என்ற சர்ச்சைக்கு பதில் வழங்கியிருந்தார்.

துன்னாலைச் செல்வம்

கோட்டாபய இராணுவத்தில் சேவையில் இருந்தபோது அவரது குடும்பம் அமெரிக்கா சென்றது. இராணுவ வீரர் ஒருவர் களத்தில் இருக்கும்போது அடிக்கடி விடுமுறை எடுக்க முடியாது. அதேபோல குடும்ப பிரச்சினைகளை சமாளிக்கவும் வேண்டும் என்ற அழுத்தத்திற்கு மத்தியில்தான் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா சென்றார். மாறாக, பயந்து படையை விட்டு ஓடவில்லை என இவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தின் 53ஆவது படையணி இராணுவத்தின் உயிர்நாடி என 2009ஆம் ஆண்டு கமல் குணரத்ன தெரிவித்திருந்ததாகச் சர்வதேச உண்மைக்கான மற்றும் நீதிக்கான திட்டம் என்ற அரச சார்பற்ற நிறுவனம் தெரிவிக்கின்றது. இந்த உயிர்நாடிப் படையணி தான் இறுதிப் போரில் தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி கொன்றொழித்தது. ஆனையிறவு முதல் முள்ளிவாய்க்கால் வரையில் தமிழர்கள் கமலிடமே சரணடைந்திருந்ததாகவும், அந்த தருணத்திலேயே தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் அல்லது காணாமல் போயிருந்ததாகவும் ஐக்கிய நாடுகள் சபையை மேற்கோள்காட்டி இந்த நிறுவனம் குறிப்பிடுகின்றது.

இப்படி பல விமர்சனங்களைக் கொண்டிருக்கும் கமல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி ஏற்றிருப்பது இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமா என்பது அவரின் இனிவரும் செயற்பாடுகளில் இருந்து தான் தெரியவரும்.



# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான தமிழ் மக்களின் நிலைமை


சனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சா வெற்றி பெற்றுப் பதவியேற்றுப் பதினைந்து நாள்கள் முடிந்துவிட்டன. வெற்றிக்கான உண்மைக்காரணம் என்ன? அவர் றுவான் வெலிசெயாவில் பதவியேற்பு நிகழ்வை வைத்த காரணத்தையும், அங்கு அவர் ஆற்றிய உரையில் இருந்த பொருளையும் தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்துகொண்டனவா? புரிந்துகொண்டும் அதனைக் கண்டு கொள்ளாதது போல் அமைதி காக்கின்றனவா? உண்மையில் அவற்றின் பொருள்புரியாமல் தான் கருத்துகளைத் தெரிவிக்கிறார்களா! என்று பலவாறாக நினைக்கத் தோன்றுகிறது. நடைபெற்றது முக்கியமான தேர்தல். அதில் தமிழ் மக்கள் சஜித்தை ஆதரிக்க வேண்டுழ் என்று குரல் கொடுத்துவந்த தமிழ் அரசியல் தலைமைகள் சஜித்தின் தோல்வியின் காரணத்தை அறிந்திருக்கவேண்டியவர்கள். ஆனால் அத்தேர்தல் தோல்வியைக் கண்டும் காணாத மாதிரி கடந்து போகிறார்களோ என்று தான் பார்வைக்குத் தெரிகிறது

**விக்டர் ஐவனின் பார்வையில் தேர்தல் முடிவு**

இதே நேரம் விக்டர் ஐவன் தேர்தல் முடிவு பற்றிக் கூறியதை உன்னிப்பாகப் பார்க்க வேண்டியது இங்குப் பொருத்தமாக இருக்கும். 1956 இல் பண்டாரநாயக்கா எவ்வாறு பௌத்த சிங்கள அமைப்பின் படிகளில் ஏறி அன்று தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றாரோ அதேபோல் தான் இம்முறையும் ராஜபக்சா குடும்பமும் பௌத்த சிங்கள ஆதிக்கச் சிந்தனையை மக்களிடம் கொண்டு சென்று வெற்றியைப் பெற்றனர் என்று குறிப்பிட்டுள்ளார் அவர். 2015 இல் நடந்த தேர்தலில் சிங்கள பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்தப் போரை நடத்திய மகிந்தாவின் தோல்வி என்பது பௌத்த சிங்கள மேலாண்மையின் தோல்வி என்று சிங்கள மக்கள் நம்பினார்கள். அத்தேர்தலில் தமிழ் இசுலாமிய வாக்குகளால் தான் மைத்திரிபால சிறிசேன வெற்றி அடைந்தார் என்ற மனநிலையில் மக்கள் இருந்தனர். ஆட்சியமைத்த நல்லாட்சி அரசு அதன் பின்னர் ஆக்கபூர்வமான செயல்களை முன்னெடுத்துச் செல்லாமல் இருந்தார்கள் அதனால் நல்லாட்சி அரசு தோல்வி அடைந்தது. அதேநேரம் பௌத்த விகாரைகள் மூலம் சிங்கள பௌத்த மேலாண்மைக்கான கருத்துகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. மகிந்த குடும்பம் அதை நிறைவு செய்யும் என்று மக்கள் நம்பினார்கள். கோத்தபாயா வெற்றி பெற்றார் என்று கூறியுள்ளார் விக்டர் ஐவன். இத்துடன் அவர் மேலதிகமாக இன்னொரு கருத்தையும் மிக அழுத்தமாகக் கூறியுள்ளார். அது தான் இங்கு முக்கியமான கருத்தாகும். இதனைத் தமிழ் தலைவர்கள் எவரும் கூறவில்லை. தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியவில்லை என்று எடுப்பதா அல்லது மறைக்க முயற்சி செய்கிறார்களா என்று தெரியவில்லை. விக்டர் ஐவன் கூறுகிறார் பிரபாகரன் இலங்கைப் படத்தை இரு பகுதிகளாக அடையாளப்படுத்தி இருந்தார். அதில் தமிழர்களும் இசுலாமியர்களும் வாழும் வடக்கும் கிழக்கும் தனியாகவும் இதர பகுதிகள் வேறாகவும் காட்டப்பட்டிருக் கும். ஆனால் இம்முறைத் தேர்தல் முடிவுகள் பிரபாகரன் காட்டிய அப்பகுதிகளுடன் மலையகத்தின் பகுதியையும் சேர்த்துக் காட்டியிருக்கிறது மக்களின் வாக்களிப்பு என்று ஓர் ஆழமான கருத்தை முன்வைத்துள்ளார் தமிழ் மக்கள், இசுலாமியர்கள், மலையகம் வாழ் தமிழ் மக்களின் பகுதிகள் தனியான வண்ணத்திலும் இதர பகுதிகள் வேறு ஒரு வண்ணத்திலும் இருப்பது தெளிவாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சறுக்கல்.**

விக்டர் ஐவனின் இந்தப் பார்வைக்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது கருத்துகளுக் கூறி வருகிறது. தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், தாங்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுபதற்காகவே கட்சியை வைத்திருப்பவர்கள் என்று கூறிக்கொண்டு தேர்தல் நிலைமை பற்றி ஒரு தெளிவான பதிலை அல்லது கருத்தை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியவர்கள் அவ்வாறு இல்லாமல் மழுப்பலான அறிக்கைகளையே விடுகின்றனர். அதிலும் அவர்கள் வெவேறு திசைகளிலே செல்வதாகத் தெரிகிறது.



விக்டர் ஐவன்

சுமந்திரன் கூறியிருந்தார் தாங்கள் அரசில் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பதை மக்கள் விரும்புவதாகவும் அவ்வாறு ஏற்பதைப் பற்றிச் சிந்தக்கவும் தயார் என்று. உடனே சிறிதரன் கூறினார் அமைச்சுப்பொறுப்பு ஏற்பது என்பது இயலாமையின் வெளிப்பாடே என்று. ஆனால் கோத்தபாய சுமந்திரனின் கூற்றைக் கண்டுகொள்ளவில்லை. அவர் அமைச்சரவையை நியமித்து விட்டார். இதே நேரம் சம்பந்தன் சொல்லியிருக்கிறார் சஜித் பிரேமதாசாவை ஆழமாகத் தாங்கள் ஆதரிக்கவில்லையாம். தேர்தல் நேரங்களில் வேட்பாளர்கள் இருவரிடமும் பேச்சு நடத்தியதாகவும் கூறியுள்ளார். இந்த ஆழமான என்பதன் பொருள் தான் என்ன? இதில் புதைந்துள்ள உண்மை என்ன?

தொடக்கத்திலிருந்தே சுமந்திரன், தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றும் ரணிலுக்கே தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கும் என்றும் கூறி வந்தார். அதன்பின்னர் சஜித் தான் என்று முடிவாகியதும் சிங்கள மக்களின் வெற்றி வேட்பாளர் கோத்தபாய என்று கூறியதுடன் தாம் வெற்றிபெற வேண்டும் என்று விரும்பும் வேட்பாளரை வெளியிட்டால் அவரைச் சிங்கள மக்கள் தோற்கடித்து விடுவார்கள் என்றும் கூறியுள் ளார். இதன் பின்னர் மாணவர் ஒன்றியம் தயாரித்த பதின்மூன்று கோரிக்கைகளில் சில சஜித்தின் தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் என்று தேர்தல் அறிக்கை வெளியிட முன்னர் கூறி இருந்தார். ஆனால் சஜித்தும் கோத்தபாயாவும் தமிழர்களின் கோரிக்கைகளையோ நிபந்தனைகளையோ ஏற்கப்போவதில்லை என்று கூறிய நிலையில் சஜித் சிலவற்றை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று கூறியது சிங்கள மக்களிடையே பெரும் வாக்குச் சரிவை ஏற்படுத்தியுள்ளதாக நோக்கர்கள் கூறியுள்ளனர். எனவே சஜித் தனது தோல்வியின் பின்னால் ரணில் இருக்கிறார் என்று கூறுவது உண்மை எனில் ர்ணிலின் அத்திட்டத்திற்கு சுமந்திரனும் உதவி உள்ள தாகவே நினைக்கத் தோன்றுகிறது. சம்பந்தனின் ஆழமான ஆதரவு தாம் கொடுக்கவில்லை என்பதன் பொருளும் அதுவாகத் தான் தெரிகிறது தமிழ் மக்கள் இவ்வாறு தமது கோத்தபாயாவிற்கான எதிர்ப்பை வாக்களிப்பின் மூலம் காட்டுவார்கள் என்று கூட்டமைப்புக் கருதியிருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

**கோத்தபாயாவின் பதவியேற்பும் உரையும்.**

கோத்தபாய தனது பதவி ஏற்பு நிகழ்வை அனுராதபுரத்தில் றுவான்வெலிசெயாவில் வைத்ததும் அங்கு அவர் ஆற்றிய உரையும் நாட்டு மக்களுக்கும் உலகத்திக்கும் ஒரு தகவலைக் கொடுப்பதற்கே ஆகம். நாற்பத்து நான்கு ஆண்டுகள் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த எல்லாளன் துட்டகெமுனுவினால் தோற்கடிக்கப்பட்டு அதன் நினைவாகக் கட்டி எழுப்பிய புத்த கோயிலில் பதவி ஏற்றது இரண்டாயிரத்து ஒன்பதின் மீள் நினைவாகவே கொள்ளப்படுகிறது. இதனை அடுத்த அவர் அங்கு ஆற்றிய உரையும் நோக்கப்பட வேண்டும். ஆனால் கூட்டமைப்பினர் அதனையும் கண்டுகொள்ளவில்லை.

> “கோத்தபாயவின் உரை எவ்வளவு தூரம் தமிழ் அரசி யல்வாதிகளின் காதுகளுக்கு எட்டியதோ தெரியவில்லை. இவ்வுரையைப் பற்றி கூட்டமைப்போ விக்கினேசுவரனோ, பிறேமச்சந்திரனோ டேலோவோ புளொட்டோ கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினை என்பது இந்திய அரசின் பிரச்சினை என்பதுபோல் அறிக்கைகளை சுமந்திரன் சம்பந்தன் விக்கினேஸ்வரன் ஆகியோர் விட்டுத் தமது பொறுப்புகளை முற்றாகக் கைவிட்டுள்ளனர்.”

சனாதிபதி தனது உரையில் தேர்தலுக்கு முன்னரே தான் சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெறுவேன் என்று கூறியதை நினைவுபடுத்தித்தான் மகாநாயக்கர்களின் ஆசீர்வாதத்தினாலேயே வெற்றி பெற்றேன் என்றும் கூறியுள்ளார். தான் பௌத்த குடும்பத்தில் பிறந்து பௌத்த சமயக் கோட்பாடுகளுக்கு அமையக் கல்வி கற்றதையும் குறிப்பிட்டுத் தன்னுள் அது பிரிக்கமுடியாத அளவுக்குள் இருப்பதாகவும் அதனால் பௌத்த மத கலாசாரத்தைத் பாதுகாக்கவும், வளர்க்கவும் தன்னுடைய அரசு முழு ஆதரவை வழங்கும் என்றும் கூறியுள்ளார். தனக்கு தேர்தலில் வாக்களிக்காது விட்டாலும் சிறிலங்காவின் மக்கள் என்ற உணர்வுடன் தன்னுடன் ஒன்றிணைந்து செயல்படுமாறு தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த மக்கள், வாழும் மக்கள் தொடர்ந்து இலங்கையர்களாகவே மதிக்கப்படுவ்ர்கள் என்றும் கூறியுள்ளார்.

இவரது உரை எவ்வளவு தூரம் தமிழ் அரசியல்வாதிகளின் காதுகளுக்கு எட்டியதோ தெரியவில்லை. இவ்வுரையைப் ப்ற்றி கூட்டமைப்போ விக்கினேசுவரனோ, பிறேமச்சந்திரனோ, டேலோவோ, புளொட்டோ, கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவர்கள் அடுத்து வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலை மையமாக வைத்தே தமது கருத்துகளைச் சொல்லிவருகின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினை என்பது இந்திய அர சின் பிரச்சினை என்பதுபோல் அறிக்கைகளை சுமந்திரன் சம்பந்தன் விக்கினேஸ்வரன் ஆகியோர் விட்டுத் தமது பொறுப்புகளை முற்றாகக் கைவிட்டுள்ளனர். ஆட்சியில் அமைச்சுப்பதவிகள் வரை சிந்தனை செய்தவர்களுக்கு சனாதிபதி தனது உரையில் கூறிய வரிகள் காதுகளில் ஏறாதது புதினமல்ல. இப்பொழுது கூறுகிறார்கள் அடுத்த தேர்தலில் இருபது உறுப்பினர்களைத் தெரிவு செய்து தந்தால் தாங்கள் சாதித்துக் காட்டுவார்களாம். இதுவரை நல்லாட்சி என்று கூறிக்கொண்டு ஆட்சியில் அனைத்து வசதிகளையும் அனுபவித்தார்கள். எதையாவது இனத்திற்குச் சிறிதளவாது செய்தார்க்ளா? என்றால் நம்பினோம்! “நம்பிக்கை இழந்து விட்டோம்” என்கிறார்கள் எதிரணியில் இருந்து இருபது பேருடன் சாதித்துக் காட்டுவார்களாம். அல்லது ஆட்சியினருடன், இணைந்து சாதிப்பார்களா என்று கூறவேண்டும்.


இதே நேரம் புத்தி ஜீவிகள் என்று கூறுமொரு தரப்பினர் சனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு என்ன கூறினார்கள் என்று தெரியவில்லை. மக்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் என்று கூறவில்லை. இப்பொழுது புதிய சனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டு தனது முதலுரையை அனுரதாபுரத்திலிருந்து ஆற்றியுள்ளார். அவ்வுரையில் இருக்கும் பொருள் என்பதைக் கூடப் புரிந்துகொண்டார்களா? என்பதும் தெரியவில்லை. அதனைப்பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் புதிய அணி ஒன்றை வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக தேடித் திரிவதாகக் கூறியுள்ளார்கள். அப்படி என்றால் தேர்தல் தான் நோக்கமா, அல்லது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு? முக்கியமா? என்று அந்த புத்திஜீவிகள் கூற வேண்டும்.

கோத்தபாயாவின் உரைக்கு கஜேந்திரகுமார் மட்டுமே பதில் கூறியிருக்கிறார். சனாதிபதியின் கடந்தகாலச் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டு சிங்கள தேசத்துடன் தமிழ்த் தேசம் இணைந்து பயணிப்பதில் எந்தவிதமான தடைகளும் இருக்கக் கூடாதெனில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்த் தேசம் பாதுகாப்பாக இத்தீவில் இருக்கலாம் என்ற விடயம் உறுதிப்பட்டால் மாத்திரம் தான் அந்தப் பயனம் நேர்மையானதும் உண்மையானதுமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

இது ஒரு ஆழமான பார்வையின் பின்னரான தெளிந்த கருத்தாகும். ஆக தேர்தல் அரசியலைப் பின்னுக்குத் தள்ளி விட்டு தமிழினம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை முன்னெடுக்க வேண்டியது தான் இன்றைய முக்கியமான தேவையாகும். இதை விடுத்து கூட்டமைப்புக்கு இருபது தாருங்கோ! என்பதும் புதிய அணியைத் தோற்றுவிப்போம்! என்பதும் என்றுமே விடிவைத் தரப்போவதில்லை.

செம்பருத்தி

# ஹங்கொங் போராட்டம் தொடர்பாக சீனாவின் புதிய அணுகுமுறை..!




லக்ஷனா பாலகுமாரன்

ஹாங்காங் நிர்வாகத்தில் அதீத தலையீடு செய்து வரும் சீன அரசுக்கு எதிராக ஜனநாயகச் சீர்திருத்தங்களை வலியுறுத்தி கடந்த 6 மாதங்களாக அங்கு கடும் மக்கள் போராட்டம் நடைபெற்று வருகின்றது. ஹாங்காங் குற்றவாளிகளை சீனாவிற்கு அழைத்துச் செல்லும் அரசின் முடிவை எதிர்த்து மக்களின் போராட்டம் தொடங்கியது. இதனை அடுத்து அரசு இந்த முடிவை திரும்பப் பெற்றது. எனினும் ஹாங்காங்கில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

1898 ஆம் ஆண்டு சீனாவின் குவிங் (Qing) பேரரசுடன் பிரித்தானியா மேற்கொண்ட 99 ஆண்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் ஹாங்காங் நகரம் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இந்த நிலையில் அந்த ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஹாங்காங்கை, சீன அரசிடம் பிரித்தானியா 1997ம் ஆண்டு ஒப்படைத்தது. அதனையடுத்து ஹாங்காங் சீனாவின் சிறப்பு நிர்வாகப் பகுதிகளில் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்பட்டது. அதாவது சீனா "ஒரு நாடு இரு அரச முறைகள்" என்ற அடிப்படையில் ஹாங்காங்கை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அதற்கு திருப்பி வழங்கப்பட்டது. இதன்படி அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு சீனா ஹாங்காங் மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்க வேண்டும். வெளி நாட்டு மற்றும் பாதுகாப்பு விவகாரங்களைத் தவிர்ந்த ஏனைய விடயங்களில் ஹாங்காங் மக்கள் அதிக அளவில் சுயாட்சியை அனுபவிக்க உரித்து உடையவர்கள் என்றவாறு கொள்கை வகுக்கப்பட்டு இருந்தது.

இதன் மூலம் சீனர்களுக்குக் கிடைக்காத சுதந்திரம் ஹாங்காங் மக்களிற்கு கிடைத்தது. அதாவது எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை, பத்திரிகைகளுக்கான கருத்துரிமை மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றோடு ஹாங்காங்கிற்கு அதன் ஜனநாயகத்தை வளர்த்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. மேலும் சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தாலும் ஹாங்காங் நாட்டுக்கென தனி நாணயம், சட்டம், அரசியலமைப்பு என்பவற்றை அது கொண்டுள்ளது.

ஹாங்காங்கின் பெரும்பாலான மக்கள் சீனர்கள். ஆனால் அவர்கள் யாவருமே தங்களைச் சீனர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்வதுமில்லை, அதை விரும்புவதும் இல்லை. ஹாங்காங் பல்கலைக்கழகத்தின் ஆய்வு முடிவுகளின்படி ஹாங்காங்கின் பெரும்பாலான மக்கள் தங்களை ஹாங்காங்கர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். 11 சதவீத மக்கள் மாத்திரமே தங்களைச் சீனர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர்.

இதன் காரணமாகவே சீனா கடந்த 20 வருடங்களில் பல முறை ஹாங்காங்கிற்கு கொடுத்துள்ள சிறப்பு அதிகாரத்தை நீக்கிவிட்டு ஹாங்காங் முழுவதையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயன்று வருகின்றது. அதிலும் கடந்த சில வருடங்களாகச் சிறப்புச் சட்ட மசோதாக்களைக் கொண்டு வரத் தீவிரமான முயற்சிகளை எடுத்திருக்கிறது. இதன் ஒரு பகுதியாக ஹாங்காங்கில் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கும் நபர்கள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவைச் சீன அரசின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஹாங்காங் நிர்வாகம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொண்டு வந்தது. இந்த மாசோதாவின் மூலம் ஹாங்காங்கில் உள்ள யாரை வேண்டுமானாலும் ஹாங்காங் ஆட்சியாளர் அனுமதியின்றி சீனா உள்ளிட்ட எங்கேயும் நாடுகடத்த முடியும்..

அதாவது கடந்த ஆண்டு ஹாங்காங்கைச் சேர்ந்த ஒரு காதல் ஜோடி தாய்வானுக்குச் சுற்றுலா சென்றிருந்தனர். சென்ற இடத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக காதலன் அக்காதலியை கொலை செய்து ஆற்றில் வீசிவிட்டு நாடு திரும்பியுள்ளான். இதனிடையே பெண்ணைக் காணவில்லை எனப் பெற்றோர் புகார் அளித்த போது விசாரணையில் அப் பெண்ணின் கொலைச் சம்பவமும், அப் பெண்ணின் கிரெட்டிக் கார்டை தவறாகப் பயன்படுத்தியமையும் வெளிவந்தது. இந்தச் சம்பவத்தால் கிரெடிட் கார்டை தவறாகப் பயன்படுத்தியதற்கு மட்டுமே காதலனைத் தண்டிக்க முடியுமே தவிர கொலைக்கு ஹாங்காங் நீதிமன்றத்தால் தண்டிக்க முடியாது. காரணம் கொலை நடந்தது தைவானில் என்பதாகும். ஹாங்காங் - தைவான் இடையே extradition எனப்படும் குற்றவாளியை அயல் நாட்டிடம் ஒப்புவிக்கும் உடன்பாடு இல்லை. இதனால் இரு நாடுகளுக்கிடையே அதற்கான ஒப்பந்தம் நிறைவேற்ற முடிவானது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் சீனாவும் தன்னை இணைத்துக் கொண்டது. இங்கு தான் போராட்டத்திற்கான கரு உருவானது. அதாவது இந்த ஒப்பந்தத்தில் சீனா இணையும் பட்சத்தில் ஹாங்காங்கில் கைது செய்யப்படுபவர்கள் சீனாவிற்கு நாடு கடத்தப்படலாம் என்ற சூழ்நிலை உருவானது. சீனாவின் அடக்குமுறையினை அறிந்த மில்லியன் மக்கள் வீதியில் இறங்கினார்கள். ஆரம்பத்தில் அமைதியாக சென்ற போராட்டம் பின்னர் போலீஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே வன்முறையாக வெடித்தது. போலீஸ் அடக்குமுறையைக் கையாண்டதுடன் பல ஆயிரம் போராட்டக்காரர்களை அதிரடியாக கைது செய்தனர். ஹாங்காங் போலீஸ் உடையில் சீனா தனது இராணுவத்தை அனுப்பியதாக கூட மக்கள் நம்புகிறார்கள். தொடர் போராட்டத்திற்கு பிறகு இந்தத் தீர்மானத்தை நிறுத்தி வைப்பதாக அரச அறிவித்தது. ஆனாலும் போராட்டம் நின்றபாடில்லை.




இந்த மசோதாவுக்கு எதிராகவும் வேறு பல அம்சக் கோரிக்கைகளையும் முன்வைத்து இப்போது ஹாங்காங்கில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஹாங்காங் நிர்வாகத் தலைவர் உட்பட சீன ஆதரவு அதிகாரிகள், உடனடியாகப் பதவி விலக வேண்டும். ஹாங்காங்கில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்று மக்களாட்சி நடைபெற வேண்டும், பொலிஸாரின் வன்முறைகள் குறித்து விசாரணை நடக்க வேண்டும், போராட்டத்தின் போது கைதானவர்களை விடுவிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் முன்வைக்கின்றனர். எனினும் போராட்டக்காரர்கள் பயங்கரவாதிகள் போலச் செயல்பட்டு வருவதாகச் சீனா குற்றச்சாட்டி வருவதுடன் ஹாங்காங் போராட்டத்தினை வலுவிழக்கச் செய்யும் வகையில் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றது.

அவ் உத்திகள் தொடர்பாக நோக்கும் போது முதலாவதாக சீனாவின் அரச நாளிதழலான "குளோபல் டைம்ஸ்" இல் தியானன்மென் சம்பவத்தை குறிப்பிட்டு மறைமுகமாக போராட்டக்காரர்களை சீனா எச்சரிக்கும் உத்தியை கையாண்டது. இவ் இதழில் "1989ம் ஆண்டு யூலை 4ஆம் திகதி நடைபெற்ற அரசியல் குழப்பச் சம்பவம் ஹாங்காங் விவகாரத்தில் மீண்டும் நடைபெறாது. அப்போது இருந்ததைவிட சீனா இப்போது அதிக வலிமையாகவும், பக்குவம் கொண்டதாகவும் ஆக்கியுள்ளது. சிக்கல் நிறைந்த சூழல்களை எதிர்கொள்வதற்கான சீனாவின் திறமை பெரிதும் மேம்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சர்ச்சைக்குரிய இச்சம்பவத்தைச் சீனா குறிப்பிட்டுப் பேசுவது அபூர்வமானது என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக ஹாங்காங்கில் இடம்பெற்று வரும் போராட்டங்களுக்கெதிராக பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்களைச் சீனா பயன்படுத்தி வருகின்றது. அத்துடன் ஹாங்காங்கில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சீனா இரண்டு பாடல்களை வெளியிட்டுள்ளது. பாடல்கள் மூலம் கருத்துக்களை பரிமாறுதல் என்பது இலகுவானதும் வேகமானதும், மக்களின் சிந்தனைகளில் அதிகளவில் செல்வாக்கும் செலுத்தும் என்பதனால் போராட்டம் பற்றிய தனது நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் பதிய வைக்கவும், அதன் மூலம் சிறந்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்பதனால் இவ் உத்திகளைக் கைக் கொண்டுள்ளது.

இவ்விரண்டு பாடல்களில் மேற்கத்திய நாடுகளே ஹாங்காங்கில் போராட்டங்களைத் தூண்டி விடுவதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது. ஹாங்காங்கில் போராட்டத்தை தூண்டிவிடும் வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்னும் கருத்து அந்தப் பாடலில் இடம்பெற்றுள்ளது. மேலும் இந்தப் பாடலின் வீடியோவில் ஹாங்காங் போராட்டக்காரர்கள் காவல் துறையினரைத் தாக்கும் காட்சிகளும், ஹாங்காங் அரச அலுவலகங்களைப் போராட்டக்காரர்கள் தாக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. மற்றொரு பாடலில் ஜனநாயக ஆட்சி கோருகிறீர்கள், ஆனால் உங்களின் வன்முறையால் நாடே போர்க்களம் போலக் காட்சியளிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாடல்களை சீன அரசு தனது சமூக வலைத்தளங்களின் பக்கங்களிலும் பகிர்ந்தும் உள்ளது.

மூன்றாவதாக இலங்கை அரசாங்கம் போன்று விடுதலை உணர்வு உள்ள போராட்டக்காரர்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்கும் உத்தியைச் சீன அரசு கைக்கொண்டது. ஹாங்காங் போராட்டக்காரர்களை கரப்பான் பூச்சிகள் எனவும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் போன்றவர்கள் எனவும், ட்விட்டர், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் பல்வேறு கணக்குகளை உருவாக்கி விமர்சித்தது.

நான்காவதாக ஹாங்காங் போராட்டத்தில் பல வெளிநாட்டு நிறுவன ஊழியர்களும் பங்கேற்று இருந்தனர். இதனால் சீனா அந்நிறுவனங்களுக்கு கடுமையான அழுத்தத்தைக் கொடுக்கும் உத்தியைக் கையாள்வதன் மூலம் போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களின் பங்குபற்றலை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஊடாக ஹாங்காங் போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு நெருக்கடியை கொடுக்க முற்படுகின்றது.

## ஹங்கொங் போராட்டம்....

ஐந்தாவது உத்தி சீன இராணுவம் ஆகும். போராட்டத்தின் ஆரம்பத்தில் ஹாங்காங் எல்லைப் பகுதியில் 10 ஆயிரம் பேர் அடங்கிய இராணுவப்படையை நிறுத்தி வைத்திருந்தது. ஆனால் பல்கலைக்கழக கலவரத்தை அடுத்து சீன இராணுவம் ஹாங்காங்கிற்குள் நுழைந்துள்ளது. ஹாங்காங் சீன அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் இதுவரையில் சீன இராணுவம் ஹாங் காங் நகருக்குள் நுழைந்தது இல்லை. ஆனால் முதன் முறையாக ஹாங்காங் நாட்டினுள் போராட்டத்தை ஒடுக்க சீன இராணுவம் களம் இறக்கப்பட்டுள்ளது. இது குறித்து சீன ஜனாதிபதி கூறுகையில் "நாங்கள் இச்செயலை முன்னெடுத்துள்ளோம். வன்முறையை நிறுத்தி குழப்பத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவது எங்கள் பொறுப்பு எனக் குறிப்பிட்டுள்ளார்.

சீன இராணுவம் போராட்டத்தையும், போராட்டக்காரர்களையும் அணுகும் முறை வித்தியாசமாகவே காணப்படுகின்றது. அதாவது போராட்டத்தின் போது செங்கற்கள், தீக்குண்டுகள், வில் மற்றும் அம்புகள் போன்ற மேம்பட்ட ஆயுதங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் பயன்படுத்துகின்றனர். அவர்களை அங்கிருந்து விரட்ட, போலீசார் கண்ணீர்புகை குண்டுகளை வீசுகின்றனர். இதனால் ஹாங்காங்கில் ஏற்பட்ட தடைகளைச் சீன இராணுவ வீரர்களே சுத்தம் செய்கின்றனர். இது பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.


ஆறாவது உத்தியாக **Anti Mask Law** வினை குறிப்பிட முடியும். போராட்டத்தில் ஈடுபடும் நபர்கள் போலீசார் தங்கள் அடையாளங் களை கண்டுபிடித்துவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் முகமூடி அணிந்து போராடி வருகின்றனர். அதனால் ஹாங்காங்கில் முகமூடி அணிவதை தடை செய்யும் விதமாக அதன் நிர்வாகம் கடந்த அக்டோபர் மாதம் அவசர சட்டத்தை கொண்டு வந்தது. ஹாங்காங் போராட்டத்திற்குத் தலைமை தாங்குபவர்களை சீனாவால் அடையாளம் கண்டுகொள்வதற்கு தடையாக இருப்பது முகமூடி. எனவே அதனை தடுப்பதற்கு இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இந்த சட்டத்திற்கு போராட்டக்காரர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவி வரும் நிலையில், இந்த தடை தொடர்பாக ஹாங்காங் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ் வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஹாங்காங்கில் மக்கள் முகமூடி அணிய தடை விதிக்கும் விதமாக நிர்வாகத்தால் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் அரசியலமைப்பிற்கு புறம்பானது மட்டுமல்லாமல் அடிப்படை உரிமைக்கு எதிரானது என கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனை மறுத்த சீனா ஹாங்காங் அடிப்படைச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு, அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதா என்பது பற்றித் தீர்ப்பளிக்கும் அதிகாரம், ஹாங்காங் உயர். நீதிமன்றத்திற்கு இல்லையெனச் தெரிவித்துள்ளது. மேலும் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் சட்ட விவகார ஆணையப் பேச்சாளர் "ஹாங்காங் சிறப்பு நிர்வாக வட்டாரத்தின் சட்டம், ஹாங்காங்கின் அடிப்படைச் சட்டத்தோடு ஒத்துப் போகிறதா என்பதை நிலைக்குழு மட்டுமே தீர்மானிக்க வேண்டுமென" கூறினார். வேறு எந்த அமைப்புக்கும் அது பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை என்றார் அவர்.

ஹாங்காங் பிரச்சனையைச் சீனா தனது மென் அதிகார கொள்கை மூலம் சட்டப்படி கையாளும் உத்தியில் தீவிரமாக உள்ளது. இதனை தற்போதைய ஹாங்காங் சூழ்நிலை தொடர்பாக சீன அரசுத் தலைவர் ஜின்பிங் ஊடக அறிக்கை உறுதிப்படுத்துகிறது. அதாவது வன்முறைச் செயல்களைத் தடுத்து நிறுத்தி ஒழுங்கை மீட்பது, தற்போது ஹாங்காங்கின் அவசரக் கடமையாகும், ஹாங்காங் அலுவல் சீன உள் விவகாரத்தைச் சேர்ந்தது. அரசுரிமை, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி நலன்களைப் பேணிக் காப்பதில் சீனத் தரப்பின் மன உறுதியை எவரும் தவறாக மதிப்பீடு செய்யக் கூடாது என்று குறிப்பிட்டார்.

ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பிரதேச அரசு சட்டப்படி ஹாங் காங் பிரச்சனையைக் கையாள்வதைக் சீன மத்திய அரசு ஆதரிக்கும் நிலைப்பாட்டை இது சர்வதேச சமூகத்திற்குத் தெளிவாக காட்டுகின்றது. ஹாங்காங்கில் சட்டவரைத் திருத்தம் ஒன்றுக்கு எதிரான போராட்டம் தொடங்கிய பின், மேலை நாடுகளைச் சேர்ந்த சிலர் வெளிப்படையாகப் பேச முடியாத அரசியல் நோக்கத்தை நனவாக்கும் வகையில், ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பிரதேசத்தின் தலைவர் மீதும் ஹாங்காங் காவல் துறையினரின் செயல்பாடுகள் மீதும் அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர். இந்நிலையில் சீன மத்திய அரசின் தெளிவான நிலைப்பாடு, சட்டப்படி ஹாங்காங் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முக்கியப் பங்காற்றும்.



# வெற்றியாளனின் ஆளுமை

அது இங்கிலாந்தில் இருக்கிற கிராமம். அங்கிருந்த விவசாயி ஒருவரிடம் குதிரை ஒன்று இருந்தது. "பட்டீ" (Buddy) என்று அதற்குப் பெயர் வைத்திருந்தார் அவர். அவருடைய நில வேலைகளுக்கு உதவுவது பட்டீ தான். ஒரு மாலை நேரத்தில், தன் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தார் அந்த விவசாயி. அவரைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். வெகுதூரத்திலிருந்து வருகிறார் என்பதை அவருடைய கலைந்த தலையும், கசங்கிய ஆடைகளும் உணர்த்தின. வந்தவர், "வணக்கம்" சொன்னார்.

விவசாயி, அவர் அமர்வதற்கு ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார்.

அவர் உட்கார்ந்ததும், "சூடாக டீ குடிக்கிறீங்களா?" என்று கேட்டார்.

வந்தவர், அவசரமாக "வேண்டாம்" என்று சொன்னார்.

"சொல்லுங்க, என்ன விஷயம்?" விவசாயி கேட்டார்.

"ஒண்ணுமில்லை. நான் லண்டன்லிருந்து வர்றேன். இது எனக்குப் பழக்கமில்லாத பாதை. வழியில கன்ட்ரோல் பண்ண முடியாம நான் வந்த கார் ஒரு பள்ளத்துல இறங்கிடுச்சு. அதை வெளியே எடுக்கணும். உங்ககிட்ட ஒரு குதிரை இருக்குன்னு சொன்னாங்க. அதைக் கொண்டு காரை வெளியே எடுத்துடலாம் என்று சொன்னாங்க. அதான் உங்ககிட்ட உதவி கேட்கலாம் என்று...

"ரொம்பப் பெரிய காரா?" என்று கேட்டார் விவசாயி.

"இல்லை, இல்லை. சின்ன கார்தான்" என்றார் வந்தவர்.

விவசாயி கயிறு உட்பட சில உபகரணங்களை எடுத்துக்கொண்டார். குதிரையின் கட்டை அவிழ்த்து, அதையும் நடத்தியபடி அவருடன் சென்றார். விவசாயி, கார் விழுந்திருக்கும் பள்ளம், அதன் நிலை எல்லாவற்றையும் பொறுமையாகப் பார்த்தார்.

கார் சிறியதாகத்தான் இருந்தது. ஆனால், காரை வெளியே எடுக்கும் முயற்சியில் ஒருவேளை அவருடைய குதிரைக்குக் காயம் ஏற்படலாம் என்றும் அவருக்குத் தோன்றியது. விவசாயி ஒரு கயிற்றை எடுத்து காரில் கட்டி, குதிரையோடு இழுப்பதற்குத் தோதாகப் பிணைத்தார்.

கொஞ்ச நேரம் எதுவும் செய்யாமல் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

பிறகு, "எங்கடா கேஸி (Casey) இழு பார்ப்போம்!" என்று சத்தமாகக் குரல் கொடுத்தார்.
குதிரை அசையாமல் அப்படியே நின்றிருந்தது.

"பெய்லி (Bailey) இழுடா ராஜா!" இன்னும் சத்தமாகச் சொன்னார் விவசாயி.

குதிரை நகரவேயில்லை.
"டேய் மேண்டி (Mandy) வேகமா இழு!" ம்றுபடியும் உரத்த குரலில் சொன்னார்.

குதிரை ஒரு இஞ்ச்கூட நகரவேயில்லை.

"என் செல்லம் பட்டீ நீயும் சேர்ந்து இழுடா!" என்றார்.

அவ்வளவு தான் குதிரை கயிற்றை இழுக்க ஆரம்பித்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடம் கார், பள்ளத்திலிருந்து மேலே ஏறிவிட்டது.

வெளியூர்க்காரர் விவசாயிக்கு நன்றி சொன்னார்.

ஐயா, நீங்க ஏன் உங்க குதிரையை விதவிதமான பேர்ல கூப்பிட்டீங்க?
அதுதான் எனக்குப் புரியலை."

"என் பட்டீக்கு கண்ணு தெரியாது.


தான் மட்டும் கஷ்டமான வேலையைச் செய்யப் போறோம்னு அது நினைச்சுடக் கூடாது இல்லியா? அதான் அதுகூட இன்னும் மூணு குதிரைகள் இருக்குற மாதிரி நம்ப வெச்சேன். அதுக்கும் நம்பிக்கை வந்துடுச்சு,
காரை வெளியே இழுத்துடுச்சு!"

அன்பான வார்த்தைகளைச் சொல்வதற்கு நாம் காசு எதுவும் செலவழிக்க வேண்டியதில்லை. ஆனால், அவை சம்பாதித்துக் கொடுப்பவையோ ஏராளம்". இதை பிரெஞ்ச் கணிதவியலாளரும் தத்துவவியலாளருமான பிளெய்ஸ் பாஸ்கல் (Blaise Pascal) அற்புதமாகச் சொல்லியிருக்கிறார். வார்த்தைகளின் மகிமை அபாரமானது. அதனால் தான் நல்ல சொற்களைப் பேச வாய்ப்பு இருக்கும்போது, கடுஞ்சொற்களை ஏன் பேச வேண்டும் என்பதை "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்கிறார் வள்ளுவர்.

வெற்றிக்கு தன்னையும், தோல்விக்கு பிறரையும், அடையாளம் கூறாதவனே சிறந்த வெற்றியாளன்...

**ரவிகுமார் குணரட்ணம்**

# பாபர் மசூதித் தீர்ப்பும் இந்திய மதச் சார்பின்மையும்




**இந்தியா தன்னை ஒரு மதச் சார்பில்லாத நாடு என்று கூறிக்கொண்டிருந்தாலும் உண் மையில் அங்கு சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. காங்கிரசு கமுக்கமாக இதற்கு ஒத்துழை ப்புக் கொடுக்கிறது. இப்பொழுது ஆளும் ஆட்சி வெளிப்படையாகவே இந்துத்துவத்தை வலியுறுத்து வருகிறது. அக்கட்சி தனது வேலைத்திட்டத்தில் அதற்கே முன்னுரிமை கொடுத்துள்ளது.. தொடக்க காலத்தில் இருந்தே ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஓர் அங்கமான பாரதிய சனாதாக் கட்சி இசுலாமியர்கள் கிறித்துவர்கள் மீது வெறுப்பை வளர்த்தேஅரசியலை வளர்த்து வந்துள்ளனர்.**

1949-12-23 இல் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் நேருவின் அமைச்சரவையில் இருந்தவர். இராமர் சிலையை பாபர் மசூதிக்குள் கொண்டு சென்று வைப்பதற்கு முழு ஒத்தாசை புரிந்தார். பிரதமர் நேருவிற்குத் தெரியாமல் தான் இது நடந்தது. அன்று இரவு களவாகக் காவல்துறை உதவியுடன் மசூதிக்குள் நுழைந்தவர்கள் இராமர் சிலையை அங்கு வைத்து விட்டுச் சில படங்களையும் வரைந்து விட்டு வந்தனர். பின்னர் இராமர் சிலை அங்கு தானாக வந்ததாகவும், அங்கு சுவர்களில் படங்கள் இருப்பதாகவும் கூறி அந்த இடம் இராமர் பிறந்த இடம் என்றும் கூறினார்கள். இதே வல்லபாய் படேலுக்குத் தான் இந்தியாவிலேயே மிக உயரமான சிலையை பல கோடி செலவில் இன்றைய மோடி அரசு நிறுவியுள்ளது. போற்றுதலுக்கு உரிய பெரும் தலைவராகவும் அவரை கொண்டாடி வருகிறது.




இதன் பின்னர் இந்த இடம் பற்றிய உரிமையால் இந்து அமைப்புகளும், சங்பரிவார் அமைப்புகளும் இந்துத்தவத்தை ஊதி ஊதி வளர்த்து வந்தன. இந்துக்களுக்கும், இசுலாமியர்களுக்கும் மோதல்களும் இடைக்கிடையே இடமபெற்றன. இந்தப் பிரச்சினையை மையமாக வைத்தே அரசியல் நகர்வுகளைப் பாரதிய ஜனதாக் கட்சி மேற்கொண்டு வந்தது. இதன் தாக்கம் தான் அயோத்தி இருக்கும் உத்தரபிரதேச மாநிலத்தின் ஆட்சியை இந்துத்துவ கொள்கை கொண்ட பாஜக பெற்றுக்கொண்டது. அயல் மாநிலங்களிலும் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வந்தது. பின்னர் ரத யாத்திரை மேற்கொண்டு மசூதியின் உரிமை தங்களுக்கு உரியது என்று கூறி அங்கு இராமர் கோயில் கட்டுவதாக உறுதி எடுத்தது. இதன் பின்னர் ஆயிரக்கணக்கான பா.ஜ.க தொண் டர்கள் இந்து மகாசபைத் தொண்டர்கள், சங்பரிவார் தொண்டர்கள் குழுமியிருந்தனர்.

பாஜகவின் தலைவர்களான லால் கிருஷ்ண அத்வானி, உமா பாரதி போன்ற பலர் ரத யாத்திரையை 1992-09-25 குஜராத் மாநிலத்தில் தொடங்கி பாபர் மசூதி இருந்த இடத்தை 1992-12-06 ஆம் நாள் அடைந்தனர். அங்கு பெரும் திரளாகக் குழுமியிருந்த தொண்டர்கள் பாபர்மசூதியை இடிப்பதற்காகக் கரசேவை என்ற பெயரில் திரண்டு இருந்தனர். ரத ஊர்தியை மத்தியில் ஆட்சி செய்த காங்கிரசு அரசும் கண்டுகொள்ளாமல் இருந்தது உத்திரப் பிரதேச மாநிலத்தில் பாஜக ஆட்சியில் கல்யாண் சிங் அங்கு முதலமைச்சர் ஆக இருந்து மசூதியை இடிப்பதற்கு உதவினார். அன்று மசூதி இடிக்கப்பட்டது. அதன் காரணமாகப் பெரும் இன, மத மோத ல்கள் நடைபெற்று இரண்டாயிரத்துக்கு மேலானவ ர்கள் இறந்தனர் இலட்சக்கணக் கான சொத்துகள் அழிக்கப்பட்டன.




இக் கலவரத்தை அடுத்து அத்வானி உமாபாரதி போற பலரின் மேல் குற்றவியல் வழக்குப் போடப்பட்டது. அந்த வழக்கு இன்னமும் முடிவடையாத நிலையிலேயே இருக்கிறது. காணி வழக்கில் நீதிமன்றம் தலையிட்டதால் அங்கு இன்னமும் இராமர் கோயில் கட்ட முடியாமல் தான் இருந்தது. ஆனால் பாரதிய ஜனதாக் கட்சி அங்கு இராமர் கோயில் கட்டுவது தமது இலட்சியம் என்று தேர்தல் அறிக்கைகளில் கூறி வந்து கொண்டே இருக்கிறது. இது சிறுபான்மை மக்களின் மனதில் ஓர் அச்ச உணர்வையே ஏற்படுத்தி வந்துள்ளது. அயோத்தி பாபர் மசூதியின் காறிக்காகவும் அங்கு இராமருக்கு வழிப்பாடு நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி ஏராளமான வழக்குகள் உத்தரபிரதேசத்தில் தாக்கல் செய்யப்பட்டன. குறிப்பாக பரமஹம்ச ராமசந்திரதாஸ் என்பவர் ஒரு வழக்காளியாகவும் நிர்மொஹி அகோரா என்ற அமைப்பு ஒரு வழக்காளியாகவும் சன்னி வக்பு வாரியம் மூன்றாவது வழக்காளியாவும் உரிமை கோரியதன் அடிப்படையில் இவ் வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்று பாபர் மசூதி இருக்கிற காணியை இம்மூன்று தரப்பினருக்கும் மூன்றாகப் பிரித்து வழங்குமாறு தீர்ப்பளி த்தது. இதனை மூன்று பகுதியினரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அது உச்ச நீதி மன்றுக்குச் சென்றது. அங்கு இந்த வழக்கு இழுபட்டுப் பின்னர் முதலில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஆனால் அவர்கள் வாதங்களைக் கேட்டறிந்து விட்டு ஐந்து நீதிபதிகள் கொண்ட இருக்கைக்கு வழக்கைப் பாரப்படுத்தினர். இந்த ஐந்து நீதிமன்ற நீதிபதிகள் இவ்வழக்கை எடுத்து விசாரித்துத் தான் தற்பொழுது இறுதித் தீர்ப்பை வழங்கி உள்ளனர். இவர்கள் விசாரித்த வழக்குக் காணி பற்றிய குடிமையியல், அதாவது சிவில் வழக்கு. அத்வானி, உமாபாரதி போன்றோருக்கு எதிரான குற்றவியல் வழக்கு அதாவது கிரிமினல் வழக்கு இன்னமும் விசாரித்து முடிக்காமல் இருக்கிறது.

**உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறுவது என்ன?**

இந்த வழக்கின் தீர்ப்பை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தான் ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் வழங்கியிருந்தார். நாடே பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த தீர்ப்பு இது. அது சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பா? நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பா? என்ற பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இத்தீர்ப்புப் பற்றி பல வாதப் பிரதிவாதங்கள் பல்வேறு தரப்பிலிருந்தும் வெளி வந்துகொண்டிருக்கிறது. சட்டம் என்ன சொல்கிறது சட்டத்தைக் கவனியாது வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகப் பல சட்ட மேதைகள் கூறியுள்ளனர். குறிப்பாக முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியாக விளங்கிய கங்குலி என்பவர் இத்தீர்ப்பு சிக்கல்களைச் சட்டத்துறையில் ஏற்படுத்தி விட்டுள்ளது என்று எழுதியுள்ளார் வருங்காலத்தில் வரும் வழக்குகளுக்கு இதை முன்னுதாரணமாக எடுக்கும் நிலை ஏற்பட்டால் சட்டம் என்னவாகும் என்ற வினாவை அவர் எழுப்பியுள்ளார்.

குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய காணி இந்திய அரசுக்குரிய காணியாகத் தீர்ப்பு கூறுகின்றது. அடுத்து அக்காணியில் இராமர் கோயில் கட்டுவதற்கு ஓர் அமைப்பை மூன்று மாதத்திற்குள் ஏற்படுத்தி, அவர்களிடம் இராமர் கோயில் கட்டும் பொறுப்பை ஒப்படைக்கும் படியும் தீர்ப்பில் கூறியுள்ளனர். இங்கே வழக்கு இராமர் கோயில் கட்டுவதா என்பதல்ல, அந்தக் காணி யாருக்குச் சொந்தமானது என்பதே! ஆனால் அரசு காணியை அரசின் சொத்தாக அறிவித்துவிட்டு அதை ஓர் அமைப்பிடம் இராமர் கோயில் கட்டுவதற்கு ஒப்படைக்கு மாறு கூறுவது ஏன் என்பதைத் தான் பலரும் வினாவாக எழுப்பியுள்ளனர?

பாபர் மசூதி இருந்த இடம் அவர்களுக்குச் சொந்தம் இல்லை என்று கூறியுள்ள நீதிமன்றம் பாபர் மசூதியை இடித்தது சட்ட விரோதம் என்றும் கூறியுள்ளது. மேலும் அந்த இடத்தில் இராமர் கோயில் இருந்ததற்கான சான்றுகள் எவையும் தொல்லியல் அகழ்விலும் இருக்கவில்லை என்றும் கூறியுள்ளது. ஆனால் இடிக்கப்பட்ட இடத்தில் நல்லெண்ண அடிப்படையில் இராமர் கோயில் கட்டும்படி கூறியுள்ளது. அத்துடன் சன்னி வக்பு வாரியத்துக்கு அயோத்தியில் ஐந்து ஏக்கர் காணியை வழங்குமாறும் கூறியுள்ளது தீர்ப்பில்.

இங்கு எழும் கேள்வி என்னவெனில் பாபர் மசூதியை அவர்கள் சட்டவிரோதமாக் இடித்திராவிட்டால் அது இப்பொழுதும் இருந்திருக்கும். அவ்வாறு மசூதி இருக்குமானால் இராமர் கோயிலை எவ்வாறு கட்டுவது என்பதே ஆகும். அதாவது இராமர் கோயில் கட்டவேண்டும் என்ற பிரச்சினைக்கு ஒரு முடிவை அறிவித்து நீதிமன்றத் தீர்ப்பு என்றும் அதை அனைவரும் ஏற்கவேண்டும் என்ற ரீதியிலேயே தீர்ப்பு நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

**அசோக்குமார் கங்குலியின் கருத்துகள்.**

அசோக்குமார் கங்குலி ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி. அவர் கூறிய கருத்துகள் ஆழமான பொருள் பொதிந்த சட்ட நுணுக்கங்கள் நிறைத்தவையாகும். பல தலைமுறைகளாக பாபர் ஆண்ட காலத்திலிருந்து சிறுபான்மையினர். அதாவது இசுலாமியர்கள் வழிபட்ட மசூதி அது. இடிக்கப்பட்டுள்ளது. பாபர் மசூதியை அரசியல் தலைவர்களும், இந்து அமைப்புகளும் இடித்துவிட்டதால் அங்கு கோயில் கட்டலாமாம். இது பெரும் ஐயத்தை ஏற்படுத்துகிறது. மசூதியை இடித்தவர்களின் மேல் உள்ள வழக்கு இன்னமும் நிலுவையில் தீர்ப்புக் கூறப்படால் இருக்கிறது. இந்நிலையில் அரசியலுக்குள் மதவாதமாக இதை ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. அங்கு தொழுகை அன்று தொட்டு நடந்து வந்துள்ளது. 1856,57 தொழுகை நடந்துள்ளதற்குச் சான்றுகள் உள.

►

## பாபர் மசூதி...

அதை விட அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தபொழுது தொழுகை நடந்துள்ளது. அது மஜ்லிஸ் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது சிறுபான்மை இனத்தவரின் மத சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓர் அடிப்படை உரிமை என்று கூறியுள்ளார் நீதிபதி. அத்துடன் இராமர் யார்? என்று கேள்வி எழுப்பியுள்ள நீதிபதி கங்குலி, வரலாற்று ரீதியாக அது நிறுவப்பட்டுள்ளதா? என்றும் கேட்டுள்ளார்.

வெறும் நம்பிக்கையை வைத்து தீர்ப்பு வழங்கலாமா? என்று தனது ஐயத்தை எழுப்பியுள்ளார். இவ்வாறு தீர்ப்புகள் வழங்கினால் பல மசூதிகளும், பள்ளிவாசல்களும், கோயில்களின் தேவைகளுக்காக இடிக்கப்படலாம் என்ற அச்சத்தையும் எழுப்பி யுள்ளார் அவர்.

அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பிருந்த வகையில் இது உச்ச நீதிமன்றப் பொறுப்பிற்குள் வராது. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் என்ன இருந்தது என்ற நீதிமன்றம் நிலம் இசுலாமியர்களுக்குச் சொந்தம் என்ற ஆவணம் இல்லை என்று கூறுகிறது.

அதே நிலை தானே சங்பரிவார் அமைப்புகளுக்கும் என்று கூறியுள்ளார் கங்குலி. 1949 இராமர் சீதை சிலைகளை அத்துமீறி வைத்ததும் 1992 இல் மசூதியை இடித்ததும் சட்ட விரோதம் அது தண்டனைக்குரிய குற்றம் என்று கூறியிருக்கிறார் நீதிபதி தனது கட்டுரையில்.

இங்கே ஒரு வேடிக்கை என்ன வென்றால், தீர்ப்பு வருவதற்கு முன்னரே அந்த இடத்தில் கோயில் கட்டுவதற்கான கட்டுமானப் பொருள்கள் கொண்டுபோய் பெருமளவு இறக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதேயாகும் எனக் குறிப்பிட்டுள்ளார் முன் னாள் நீதிபதி.

**தகர்க்கப்பட்ட மதச் சார்பின்மை**

இந்தியா தன்னை ஒரு மதச் சார்பில்லாத நாடு என்று கூறிக் கொண்டிருந்தாலும் உண்மையில் அங்கு சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. காங்கிரசு கமுக்கமாக இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறது.

இப்பொழுது ஆளும் ஆட்சி வெளிப்படையாகவே இந்துத்துவத்தை வலியுறுத்து வருகிறது. அக்கட்சி தனது வேலைத்திட்டத்தில் அதற்கே முன்னுரிமை கொடுத்துள்ளது. தொடக்க காலத்தில் இருந்தே ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஓர் அங்கமான பாரதிய ஜனதாக் கட்சி இசுலாமியர்கள், கிறித்துவர்கள் மீது வெறுப்பை வளர்த்தே அரசியலை வளர்த்து வந்துள்ளனர்.

தங்களின் தேர்தல் அறிக்கையில் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது, முத்தலாக் முறையை நீக்குவது, காஷ்மீரின் சிறப்பு அதிகாரத்தை நீக்குவது ஆகிய மூன்றும் அவர்களது முதல் வேலைத்திட்டமாகும். அதன்படி இசுலாமியப் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான முத்தலாக் முறையை நீக்கும் சட்டத்தைக் கொண்டுவந்து இசுலாமியருக்கு எதிரான முதல் சட்டத்தை நிறைவேற்றினர்.

அடுத்து காஷ்மீருக்குரிய சிறப்பு தகுதியை நீக்கிச் சட்டம் கொண்டு வந்து அந்த மாநிலத்தை இரண்டு துண்டுகளாக்கி இரண்டையும் யூனியன் பிரதேசங்கள் ஆக்கினர். சிறப்பு தகுதி உடைய மீசோராம் நாகலாந்து ஆகிய மாநிலங்கள் இருக்கும்பொழுது இசுலாமியர்களின் மாநிலமான காஷ்மீரின் சிறப்புத் தகுதியை நீக்கியுள்ளது அரசு. அதில் பிரிக்கப்பட்ட காஷ்மீரின் ஒரு பகுதியை நேரடியாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளனர்.

தற்பொழுது "அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவோம்" என்றதை நீதிமன்றத் தீர்ப்பு மூலம் நிறைவேற்றி உள்ளனர். பொருளியல் சிக்கலுக்குள் உள்ள நாட்டின் கவனத்தை இசுலாமியர்களுக்கு எதிரான நிலையையும், இந்துத்துவ மேலாண்மையையும் வைத்து திசை திருப்பும் வகையில் அரசு நடந்துகொள்கிறது.

இசுலாமியர்கள் தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனு கொடுத்துள்ளனர். எனவே கோயில் கட்டும் பணிகள் தாமதம் அடையலாம். முற்றாக நீங்கும் என்று கூற முடியாதுள்ளது. சட்டத்திற்கு அப்பால் நம்பிக்கையின் அடிப்படையில் தீர்ப்பு வந்துள்ளது இது சரியானதிர்ப்பு என்று சீராய்வு மனுவை விசாரிப்பவர்களும் ஏற்றுக்கொண்டால் இசுலாமிய, கிறித்தவர்களின் நிலை மேலும் மோசமடையும்.

எனவே இந்தியா மதச்சார்பின்மையை விட்டு வெகு தூரம் இந்துத்துவ வெறியோடு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பில்லாத நாடாக

## நம்பிக்கை ஊற்று: தேவைப்படும் பெண்கள்

# லக்ஷ்மியின் ஏன் இந்த வேகம்.

"வாழ்க்கை வாழ்வதற்காகத்தான் - சாவதற்கல்ல. உனக்கு எங்கள் பள்ளியில் மூலம் அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். இது ஊனமுற்றோர் ஆண்டல்லவா.. ஒருவருக்கு உடம்பில் எந்த பாகத்தில் ஊனம் இருந்தாலும் அதைத் திருத்தியமைத்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ளஒவ்வொரு நபரின் கடமையாகும்.

பாவிகள் புண்ணியம் செய்தவர்கள் என்று மனிதர்கள் மனிதர்களைக் கணிப்பு செய்ய முடியாது. ஆண்டவனின் கருணைக்கு முன்னால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் அது.

பாதிக்கப்படுதலும் பாதிக்கப்பட்டதிலிருந்து விடுபடுதலும் மனிதர்களுக்குத் தேவையான ஒன்று. இதில் ஆண் பெண் பாகுபாடுகள் தேவையில்லை. ஆனால் இந்திய சமூகம் தொடர்ச்சியாகப் பெண்களுக்குப் பாகுபாடுகள் காட்டுவதையே தனது நிலைபாடாகக் கொண்டுள்ளது. பாகுபாடுகள் காட்டுவதை அந்நிய ர்களே செய்கிறார்கள் என்பதில்லை.

குடும்ப கௌரவம், சமூகச்சூழல் போன்றவற்றை முன்வைத்துப் பெண்ணின் இருப்பு எப்போதும் கேள்விக்குள்ளா க்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இத்தகைய சூழலில் பெண்ணுக்கு நம்பிக்கை ஊட்டும் ஒரு குரல் அல்லது கைப்பிடித்து உதவும் ஒரு கரம் தேவைப்படுகிறது என்பதைச் சொல்லும் எழுத்தும் பெண்ணெழுத்தின் பாற்பட்டதாகவே அமையும்.

# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் – 21



லக்ஷ்மி

தாரணி என்னும் பெண்ணுக்கு உதவும் கரமாகவும், அவள் வாழ வேண்டியவள் என்பதைச் சொல்லும் மனமாகவும், அமைப்பாகவும் இருக்கும் அவள் முன்பு வேலை பார்த்த பள்ளியையும் அதன் முதல்வரையும் முன்வைக்கிறார் லக்ஷ்மி. பெண்கள் மற்றும் பாதிக்கப்படுவோர் நலனில் அக்கறை கொண்ட உலகமாக மாறிக் கொண்டிருந்த மனிதநேய உலகமாக மாறிக் கொண்டிருந்த உலகம் 1980 களின் உலகம். உலகப் பெண்கள் ஆண்டைப் போலவே ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான ஆண்டொன்றை முன்வைத்து அமைப்புகளும் கொடையாளிகளும் பலருக்கும் உதவினார்கள்.

அப்படியான உதவியைத் தாரணிக்கு வழங்க முன்வந்தது அந்தப் பள்ளி. அதனால் தாரணி மறுவாழ்வு பெற்றாள் எனக் கதையை அமைத்துள்ளார் . இதற்காகவே இதனை முன்வைக்கவே கதை நிகழ்வுகளை அமைத்திருந்தால் அது கதையாக இல்லாமல் ஒரு கட்டுரையாகவோ, உண்மைச் சம்பவ விவரிப்பாகவோ முடிந்து போயிருக்கும்.

அதை உணர்ந்த புனைகதையாளரான லக்ஷ்மி தாரணி ஏன் பாதிக்கப்பட்டாள் எப்படிப் பாதிக்கப்பட்டாள் பாதிக்கப்பட்டதில் அவருடைய பங்களிப்பு என்ன? மற்றவர்களின் நோக்கங்கள் என்ன என்பதை எழுதுவதின் மூலமே புனைகதையின் நுட்பங்களைத் தருகிறவராக மாறுகிறார். கதை தாரணியின் அன்றாடப் பாடுகளை முன் வைப்பதாகத் தொடங்குகிறது:

ஒரு மூட்டைத் துணி. அப்பா, அம்மா, பெரிய அண்ணன், சின்ன அண்ணன், அண்ணி அத்தனை பேரும் காலைக் குளியலுக்குப் பின்னர் களைந்து போட்டுவிட்டுப் போன அழுக்குத் துணிகள்.

சோப்புத் தூள் போட்டு இரும்பு வாளிகளில் நனைத்து நனைத்து வைத்துவிட்டு வீட்டைப் பெருக்கி, துடைத்து எல்லோருக்கும் மதிய உணவு தயாரித்துவிட்டு கிணற்றடியில் தோய்க்கத் போனவள், அவைகளைத் தோட்டத்து வேப்ப மரங்களுக்கிடையே கட்டப்பட்டு இருந்த கொடியில் பிரித்து உலர்த்திவிட்டு உள்ளே வருவதற்குள் பொழுது உச்சியை எட்டி விட்டிருந்தது. தாகம் நாக்கை விரட்டியது

அ. இராமசாமி

இந்தப்பாடுகள் படும் தாரணி அந்த வீட்டின் வேலைக்காரியோ வீட்டிற்கு மருமகளாகவோ வந்தவள் அல்ல. அந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்து திருமணத்திற்குக் காத்திருந்தவள். அவள் உடலில் கடுமையான வேலைகளைச் செய்வதைத் தடுக்கும் இதய நோய் இருந்தது. அதனாலேயே வீட்டு உறுப்பினர்களின் வெறுப்புக்கு ஆளானவளாக ஆகியிருந்தாள். அத்தோடு அந்த நோய் காரணமாகவே அவள் மனம் தவறான முடிவொன்றை எடுத்தது. தனது நோயினால் இறந்துவிடக்கூடும் என்ற அச்சத்தில் அவள் திருமணமான ஒருவனோடு நட்பு கொள்கிறாள்.

நட்பாகப் பழகியவளைத் தன் இச்சைக்குப் பயன்படுத்துகிறான் அந்த ஆண். அது வெளிப்படும்போது இனி எதற்காக வாழவேண்டும் என்ற கேள்வி அவள் முன் நிற்கிறது இந்நிகழ்வுகளை அவளது நினைவோட்டமாகச் சொல்லும் லக்ஷ்மியின் கதை கூறல் முறை வாசிப்புச் சுவையுடையதாக இருக்கிறது:

"நான் செய்தது தவறுதான் அதுக்காக வீடே கூடி எனக்கு தானே சாவு வரும் முன் மரண தண்டனை வழங்கிட்டீங்களே? மாசம் என் செலவுக்குன்னு கொஞ்சம் உதவி வந்த சம்பளத்தில் மண்ணைப் போட்டு- அந்தப் பள்ளிக்கூடத்து வேலையிலிருந்து என்னை நிறுத்தி இப்படி வீட்டில் அடைச்சு வெச்சிருக்கீங்களே..? நான் யார் கிட்ட போய் முறையிட முடியும்

சிட்டுக் குருவிக்கும் - காற்றில் தலையசைக்கும் போகன்வில்லாவிற்கும் நீண்ட காலம் வாழ உரிமை இருந்தது. அவளுக்கு..?

மேலே பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு உணவுப் பாத்திரங்களை மேசை மீது வைத்து விட்டு வந்து ஒதுங்கிக்கொண்டாள்.

அவள் விரும்பிய கேசவனும் அவளை விரும்பிய கேசவனும் ஒருநிலைப்பட்டவன் அல்ல. இவள் விரும்பிய கேசவன் கவிஞன் ஆங்கிலப்புலமையில் வசீகரம் கொண்டவன்.

ஆனால் அவளை விரும்பிய கேசவன் காமத்தை உடலை நோக்கிய வசீகரம் கொண்டவன் என்பதையும் தாரணியின் சொற்களாலேயே முன்வைக்கிறார்



# ஆடைத் தொழிற்சாலையின் தற்போதைய நிலையும் மக்களின் எதிர்பார்ப்புகளும்..

மஸ்கெலியா செ.தி. பெருமாள்

நாட்டில் இளைஞர் யுவதிகள் அதிகளவு வேலை இல்லாது இருந்த காலமான 1992 காலப்பகுதியில், அப்போதைய ஜனாதிபதியான மறைந்த ஆர்.பிரேமதாசவினால் இலங்கைத் தீவில் பல்வேறு இடங்களில் ஆடைத் தொழிற்சாலைகளை நிர்மாணித்து அங்கு இளைஞர் யுவதிகளுக்கு வேலை வழங்கினார்.

இக்காலகட்டத்தில் மஸ்கெலியா சென். ஜோசப் தமிழ் வித்தியாலய உயர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட காணி 3 ஏக்கருக்கும் அதிமான இப்பகுதியில் கல்வி கற்று பணி இல்லாது இருந்த இளைஞர் யுவதிகளுக்காக, சௌமிய மூர்த்தி தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க, அவ்விடத்தில் ஆடை தொழிற்சாலையை அமைக்க அப்போதைய சென்.ஜோசப் வித்தியாலய அதிபர் எஸ்.நடேசன் விட்டு கொடுத்து அவ்விடத்தில் ஆடைத் தொழிற்சாலை சகல வசதிகளுடன் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு 1994ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. 1994ஆம் ஆண்டு அதன் உரிமையாளர் டேன் திசாநாயக மற்றும் மறைந்த அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆகியோர் பங்குபற்றுதலுடன் ஆடை தொழிற்சாலையின் திறப்பு விழா வெகு விமர்சையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அப்போது அத்தொழிற்சாலையில் சுமார் 1500க்கும் மேற்பட்டோர் பணிபுரிந்தனர். அவ்வாறு கடமை புரிந்தவர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் தளபாடங்கள் அக்கட்டிடத்தில் காணப்பட்டது. இதனால் அங்கு பணிபுரிவோரின் எண்ணிக்கை அதிகளவாகத் காணப்பட்டதுடன் தமது கல்வி நடவடிக்கையை முடித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பும் காண ப்பட்டது. ஆகையால் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடை த்தமை மட்டுமல்லாது மஸ்கெலியா நகரிம் வியாபாரத்தில் முன்னேற்ற மும் காணப்பட்டது.

இத்தொழிற்சாலை நிர்வாகத்தை 10 ஆண்டு காலம் சிறப்பாக முன்னெடுத்து வந்த டேன் திசாநாயக 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆடை தொழிற்சாலையை வேறு ஒருவருக்கு கை மாற்றினார்.

அதன் பின்னர் அங்கு பணிபுரிந்தோருக்கு முறையாக வேதனம் மற்றும் சேமலாப நிதி வழங்காமையால் பலர் வேலையைவிட்டு வேறு இடங்களுக்கு பணிக்கு சென்றதுடன் பலர் வேலையை இழக்கவும் நேரிட்டது.



அக்காலகட்டத்தில் அங்கு இருந்த விலை மதிப்பான அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்பட்டதுடன் அவற்றை விற்றபணத்தோடு அவற்றை ஆடை தொழிற்சாலையை முற்றிலும் மூடிவிட்டு சென்றுவி ட்டார். அந்த தொழிற்சாலை 2006ம் ஆண்டு முதல் மூடப்பட்டு இருந்தது.

அக் கால கட்டத்தில் பாதுகாவலர் யாரும் இல்லாததால் விசமிகள் அந்த கட்டிட தொகுதியில் இருந்த பெறுமதியான தகரங்கள் கண்ணாடிகள் மின் குமிழ்கள் சகலவற்றையும் சூறையாடிவிட்ட நிலையில் "கூடு" மட்டும் மிஞ்சியுள்ளதுடன் அது பெரும் பற்றை காடாகவும் மாறிவி ட்டது.

கடந்த 2015ம் ஆண்டில் அந்த உரிமையாளர் திசாநாயக வந்து அவ்விடத்தை துப்பரவுசெய்து மாட்டு பண்ணை ஒன்றை வைக்கும் நோக்குடன் பல வேலைகளை மேற்கொண்ட போது அந்த இடம் மாட்டு பண்ணைக்கு உகந்த இடம் அல்ல எனவும், அதன் கழிவுகள் மவுசாகலை நீர்த்தேக்கத்திற்கு செல்லும் எனவும் அதனால் சுற்றுசூழல் மாசு ஏற்படும் எனவும் கூறப்பட்டதால் அம்முயற்சி கைவிடப் பட்டது.





ஆறுமுகம் தொண்டமான்

அந்த காணியையும், அதனுடன் சேர்ந்த தற்போது கூடாக உள்ள பகுதியையும் அரசு பொறுப்பேற்று அந்த காணியில் மஸ்கெலியா உதவி அரசு அதிபரின் காரியாலயம் என்பனவற்றை மற்றும் அரசகாரியாலயம், கிராம சேவகர் காரியாலயம் அமைத்து இப்பகுதி மக்களின் சிறப்பான வாழ்கைக்கு உகந்த விடயத்தை மேற்கொள்ள இன்றைய அரசு முன்வர வேண் டும்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சு ஆகியவை இதில் கவனம் செலுத்தி இதனை நடைமுறைபடுத்த வேண்டும். தற்போது மஸ்கெலியா பிரதேசசபை இயங்கும் இடம் மிகச்சிறிதாக உள்ளதால் அதனையும் அந்த இடத்தில் அமைக்க முன்வருவதுடன் அந்த காணியை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும். இன்று பதவி ஏற்றுக் கொண்ட ஆறு முகம் தொண்டமான் அவர்கள் அந்த இடத்தை அரசாங்கத்தால் பொறுப்பேற்று அவரின் தாத்தாவான சௌமியமூர்த்தி தொண்ட மானின் நினைவை யொட்டி அந்த காணியில் உதவி அரசு அதிபரின் காரியாலயமும், மஸ்கெலியா பிரதேசசபை கட்டிட தொகுதியும் அமைப்பதுடன் ஏனைய அரச அலுவலகங்களாகவும் செய்து கொடுத்து மஸ்கெலியா நகருக்கு ஒரு விடிவு காலத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கி ன்றனர்.




# மயிலுச்சாமி கோயில்

ஐ. சாந்தன்





ஆற்றைக் கண்டது அதுதான் முதல் தடவை. ஆறு அலுங்காமல் ஓடிக்கொண்டிருந்தது. அகன்று கிடந்ததாய் அப்போதைய ஞாபகம். பிறகு, இருபது வருடங் கழித்துப் பார்த்தபோது, அந்த அகலமும் அமைதியும் ஒடுங்கி, பாறைகளில் குதித்தோடி, கிளைகள் தவழவும், தழுவவும் ஓடிக்கொண்டிருந்தது, ஆறு.

அதுதானா என்று வியப்பாக இருந்தது. இடங்கள் வெவ்வேறாக இருக்கலாம். என்றாலும் இருபது வருடமென்பது இலேசா, என்ன?

இப்போது இன்னும் முப்பது வருடம்!...

அந்த - முதலிற் கண்ட - ஆற்றில் தோய்ந்து விட்டு எல்லோருமாய்க் கோவிலடி நோக்கி நடந்துகொண்டிருக்கிறார்கள். காலையின் அமைதி. கூதலோட விடும் குளிர்காற்றில் கலந்து பரவும் கற்பூரவாசம்... இந்தப் புல்லரிப்பெல்லாம் இல்லாதாக்குவதே போல அந்தச் சத்தம் திரும்பினார்கள். ஆளரவங் குறைந்த மூலை.

மல்லுக்கட்டியபடி, தாடி மீசையுந் தலைமுடியுமாய், இருவருமே சாமிக்கோலம். ஒருவனை மல்லாத்தி அவன் மேல் ஏறிக் குந்தி அவனின் தாடியைப் பிய்க்க முயன்று கொண்டிருந்தான், மற்றவன். கீழே கிடந்தவனின் அலறலும் முக்கலும் அமைதியைக் குலைத்தன. என்ன செய்ய முடியும்? விலகி நடந்தார்கள்.

"கோவிலடியிலை இதென்ன அநியாயம்?" அம்மா சொன்னா.

"கீழே கிடந்து கத்தினது ஆர் தெரியுமோ?" திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்த சோதியண்ணன், சற்றுத் தள்ளிப் போனதும் மெல்லக் கேட்டான்.

"ஆரடா? எனக்கென்னெண்டு தெரியும்?"

"மயிலுச்சாமி!"

"எங்கட மயிலுச்சாமியா?"

"மயிலுச்சாமிதான்!"

"இருக்கும், மயிலுச்சாமி ஒவ்வொரு வருடமும் கதிர்காமம் வாறதுதானே!"

"மயிலுச்சாமியேதான் என்பது அன்று மாலை நிச்சயமாயிற்று. மடத்தடியில் ஐயாவைச் சந்திக்க நேர்ந்த சாமி, அன்று காலை தன்னை யாரோ தள்ளிவிழுத்தி அடித்தது, கிடந்த காசெல்லாம் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகச் சொல்லி அழுததாம். ஐயா ஏதாவது கொடுத்துவிட்டுத்தான் வந்திருப்பாரோ, தெரியவில்லை.

"சாமியின்ர கதையை நம்ப முடியாது" பொன்னையாம்மான் பிறகு சொன்னார்.

"ஏன்?"

"சாமிதான் அவன்ர காசை எடுத்துக்கொண்டு ஓட, அவன் கலைச்சுப் பிடிச்சு அடிச்சுப் பறிச்சானோ, ஆருக்குத் தெரியும்?"

ஒருவரும் இதற்கொன்றும் சொல்ல முடியாமலிருந்தது.

மயிலுச்சாமிடயிடம் ஒரு கார் கூட இருந்தது. கொஞ்சக் காலந்தான். துணிக் கூடாரம். ஓஸ்ரின். சிவப்புக்கும் பழுப்புக்கும் இடையில் என்னவென்றில்லாத ஒரு நிறம். அந்தக் காரில் சாமி வேட்டைக்குப் போய் வருவதாகச் சிங்கராசன் சொன்னான். வேட்டைக்குக்கு காடு எங்கே இருந்தது, யாழ்ப்பாணத்தில்?

"வன்னிக் காட்டுக்குத்தான்," என்றான் சிங்கன். முனியடிச்ச சுப்பையாவின் மகன் சாமிக்குச் சொந்தக்காரன்.

மாதத்திற்கு இரண்டு தரம் முறிகண்டிக் காட்டுக்குப் போய் வந்ததாம், சாமி. ஒருக்கால் போனால் திரும்ப இரண்டு மூன்று நாளாகும்.

"காட்டுக்குள்ளை இரவிலைதான் போய் சாமி வேட்டையாடும்"

"பயமில்லையே?"

"என்ன பயம்...? ஐஞ்சாறு பேர் போவினம். துவக்குமிருக்கு! பிறகென்ன?"

"சிங்கம், புலி, கரடி எல்லாம் சுடுவினமோ?" சின்னத் தம்பி கண்கள் விரியக் கேட்டான்.

"இலங்கையிலே சிங்கம் இல்லையடா!" என்றதோடு சின்னண்ணை நிறுத்திக் கொண்டான். புலி, கரடி பற்றி அவனுக்கும் வடிவாகத் தெரிந்திருக்கவில்லை.

"அதுகளில்லை," சிங்கன் விளக்கினான்.

"மான், மரை, முயல், பண்டி இதுகள் தான்" "நரி?"

"அது ஆனைக்காடு... ஆனைக்குத் தான் பயம்"

சிங்காராசனுக்கு வயதும் இவர்களிலும் ஏழெட்டுக் கூட.

ஒரு மத்தியானம், பள்ளியால் வரும்போது தெருக்கரையோடு அரசடி நிழலில் சாமியின் கார் தனியே நின்றது. புழுதி அப்பி எழுதினால் கரும்பலகை தோற்கும். காரின் பின்பக்கம், கூடாரத்தோடு சேர்த்து உயரமாய், வேறெந்தக் காரிலும் காணாத விதமாய், ஒரு பெரிய விளக்கு. ஹெட் லைற் போல ஒன்று, பின்புறம் பார்க்கப் பூட்டியிருந்தது. காரைத் தாண்டிய போது சிணியடித்தது. எட்டி மெள்ள உள்ளே பார்த்தால், பின் வக்கெல்லாங் காய்ந்து கட்டியான இரத்தம். வயிற்றுக்குள் ஏதோ செய்தது. மயக்கம் வரும் போலிருந்தது.

அரவிந்தனின் சரித்திரப் புத்தகம் "நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்", அதிசயமாய்த் தொலைந்து போயிற்று, பள்ளியில்.

"மயிலுச்சாமி இழை கட்டுமா?" அரவி சிங்கனை விசாரித்தான்.

"அது தெரியாம?... எங்கட ஐயாவுக்கு முனியடிச்சதுக்கு, சாமி தான் பார்வை பார்த்தது. ஒரு மாதத்திலை முனி சரி", என்ற சிங்கன் தொடர்ந்து கேட்டான்.

"உம்மைக் கூட்டிக்கொண்டு போகட்டே, சாமியிற்ர?"

அரவி ஏதோ யோசிப்பவனாய்ப் பேசாதிருந்தான்.

சாமியைப் பார்த்தாலே பயமாயிருக்கும், அதுவும் இந்தக் கதையைக் கேட்ட பிறகா?...

சாமி கட்டைதான். கறுவல் என்று சொல்ல முடியாத நிறத்தை மறைத்து மேலெல்லாம் பூசிய திருநீறு. நுரைத்து வழியும் சடாமுடி, இரு பக்கத்துத் தாடி மீசையோடும் சேர்வது தெரியாமல் சேர்ந்த முகம். இடுப்பில் சிவத்த நாலு முழத் துண்டுக்கு மேல் வரிந்த பச்சைத் துண்டு. தோளில் ஒரு துணிப்பை.

"சாமி எண்டா, சன்னியாசி தானே?" கொஞ்சம் பொறுத்து அரவி கேட்டான்.

"பின்னை?"

"ஆனா, மயிலுச்சாமிக்குப் பிள்ளையளிருக்கெல்லோ?"

இப்போது சிங்கன் பேசாதிருந்தான்.

"பெண்சாதி?"

"செத்துப் போச்சு"

"எத்தினை பிள்ளையள்?"

"இரண்டு ஆம்பிளை, இரண்டு பொம்பிளை"

"மூண்டு பொம்பிளை!" பரமலிங்கம் திருத்த முயன்றான். கோவில் வளவுக்கு அடுத்தாற்போல இருண்டு அடர்ந்து கிடக்கும் உடையார் வடலிக்குத் தினசரி போகிறவன் அவன்.

"மூண்டோ?" சிங்கன் சிரித்தான்.

"எடே பேயா. அது சாமின்ரை பெண்சாதி!"

"செத்துப் போச்சு எண்டாய்?" எல்லோருங் கேட்டார்கள்.

"அது முதலாந் தாரம்..." சிங்கன் ஒரு நிமிடம் மூச்சு இழுத்து விட்டு விட்டு, விளக்குவது போல் சொன்னான்.

"இவ, சாமீற்றை பேய் கலைக்க வந்தவ..."

மயிலுச்சாமி கோவில் மணி ஒருநாளைக்கு இரண்டு தரம் கேட்கும். புலரியில் ஒருதரம் - பறவை குருவிகளெல்லாம் பாடி ஓய்ந்து, ஊர்ச்சத்தங்கள் கிளம்ப முதல் கிடைக்கிற இடைப்போதில் அந்த நாளின் கட்டியமாய் - அது ஒலிக்கும். அநேகமாக கிணற்றடியில் பல் துலக்குகையில், கமுகம் பூ வாசமும் காலைக் குளிரும் போல் காற்றோடு அதுவுங் கலந்து வரும்,

பொழுதுபட, வான் நீலம் சாம்பல் பூக்கும் மைம்மலில், முகம் கழுவி சாமியறையில் கை கூப்பி நிற்கையிலோ, பாடப்புத்தகங்களை மேசையில் பரவுகிற போதோ கணீரிடும். கன சத்தமில்லை. அடக்கமாய், அந்த வட்டாரத்திற்கு உயிர்ப்பூட்டும் அளவான ஓசை, ஐந்தாறு தரம் மட்டும் அடித்தோயும். இன்னும் நாலுதரம் ஒலிக்காதா என்றிருக்கும்.

யார் மணி அடிப்பார்கள், சாமி எப்படிப் பூசை செய்தது, என்று பெடியன்கள் யாரும் போய்ப் பார்க்கத் துணிந்தது கிடையாது. வீடுகளிலும் விட்டிருக்க மாட்டார்கள். சிங்கன் பார்த்தானோ, ஒருவேளை?

கோவில் வளவு, வடிவான இடம். ஆலும் அரசுமாய் மூடிக் கவிந்து அமைதியை அடை காக்கிற இடம். கிழக்குப் பார்த்த சின்னக்கோவில். கோவிலுக்கு முன்னால் சற்றுத் தள்ளி சாமி வீடு. இடப்பக்கம் உடையார் வடலி, பொன்னுத்துரையருக்குச் சீதனமாய் வந்த காணி. ஒரு பொல்லாப்புக்கும் போகாத அப்பாவி மனிதர். சாமியோடு எல்லை வழக்காட எத்தனையோ நாள் லீவு போட்டுவிட்டுக் கோடேறி இறங்கினார்.

சாமி கோவிலின் அமைதி குலைகிற நாள் ஒன்று ஆண்டுக்கொரு முறை வந்தது, ஆடியில். விளக்கு வைத்து ஆறாவதோ ஏழாவதோ இரவு, சாமி கோயில் சாமி தீவட்டியோடு தப்பட்டையும் குழலும் சங்குஞ் சேமக்கலமுமாய் ஊர்கோலம் வரும். அடுத்த நாள் மயிலுச்சாமி கதிர்காமம் புறப்படும். தீர்த்தத்துக்கு அங்கு நிற்கும்.

படிப்பு, வேலை என்று இருபது இருபத்தைந்து வருடம் சுற்றிவிட்டு ஊருக்கு வந்தபோது போரும் வந்து விட்டிருந்தது. சாமி கோவில் மணி கேட்பதில்லை. சாமியின் காலமும் ஆகிவிட்டிருந்தது. பிள்ளைகள் எங்கே போனார்கள்? கோவிலை யார் பார்த்தார்கள்? ஒன்றுமே தெரியவில்லை. கோவிலை யாரும் கவனித்ததாகவும் தெரியவில்லை.

இந்தியன் ஆமிக் காலத்தில் ஒரு மத்தியானம், ஒரு நாளும் அடியாத சாமி கோவில் மணி அடித்தது. என்ன அதிசயம் என்று பார்க்கப்போன சின்னம்மாச்சியை ஒளித்திருந்த ஆமி பிடித்து ஒருநாள் முழுக்க விசாரித்தது. நல்ல காலம், வேறெவரும் போகவில்லை.

தொண்ணூற்றைந்தில் இடம்பெயர்ந்து, தொண்ணாற்றாறில் திரும்பியபின், இலங்கை ராணுவம் சுற்றி வளைத்துக்கொண்டு போகிற சனத்தை இருத்த இடம் போதாதிருந்தது, ஆலுக்கும் அரசுக்கும் அடியில். என்றாலும் சாமி கோவிலைத் திருத்துகிற எண்ணம் எவருக்கோ வந்ததும் இந்த நாட்களில்தான். கேட்க நிறைவாய்த்தானிருந்தது. திருப்பணிச் சபையும், திரைகடலோடிய ஊர்ப் பெடியளும்...

கும்பாபிஷேகத்தின் பிறகு இந்த வருடம் இரண்டாவது. அலங்காரத் திருவிழாதானென்றாலும் காலையில் ஐந்துக்குத் தொடங்கினால் இரவு பதினொன்று வரை ஓயாத ஒலிபெருக்கி. பதினைந்து நாளுமே.

இரவு ஒன்பது மணிக்கு தொடர் பிரசங்கம்.

இந்த ஒரு கிழமைபோல, இன்னும் ஒரு கிழமை!

மேசையில் ஊன்றிய கைகளைத் தலைக்கு முட்டுக் கொடுத்து, இரண்டு பெருவிரலாலும் இரு காதுகளையும் பொத்தியபடி, அடுத்தநாள் பாடத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தவர், தண்ணீர் குடிக்க எழுந்தார் காவலகன்ற காதில் தாராளமாகவே நுழைந்தது பிரசங்கம்.

"மகான் மயிலுச்சாமியின் பாதார விந்தங்கள் படிந்த புண்ணிய மண் இது..."

"... அந்த அருள் வன்மை இன்னும் நின்று இங்கே அருளாட்சி புரிவது தெரிகிறது... எத்தனையோ ஞானிகளும் சித்தர்களும்..." ●

நன்றி : சிட்டுக்குருவி (தொகுதி)
மல்லிகை ஆண்டு மலர்



# தரிசனம்..

இரவு வந்தது.
உறக்கம், தனது ஆடையை
உலகின் முகத்தின் மேல் போர்த்தது.

நான் படுக்கையை விட்டு எழுந்து
கடலை நோக்கி நடந்தேன்.

கடல் என்னைப் பார்த்துச் சொன்னது:
"கடல் உறங்காது.
உறக்கமிழந்த ஆத்மாக்களுக்கு
அதன் முழக்கமே ஆறுதல்."

கடற்கரையில்,
மல்லையிலிருந்து இறங்கி வந்த
மூடுபனி,
இளம் பெண்ணின் முகத்திரை போல,
அந்தப் பிரதேசத்தை மூடி மறைத்தது.

நான் சீறி எழும் அலைகளைக்
கவனித்தேன்.
அவை இறைவனைப் போற்றிப் பாடின.
தடிக்குள்ளிருக்கும் ஆற்றலை
ஆழ்ந்து கவனித்தன -

அந்த ஆற்றல்தான் -
புயலுடன் கை கோத்துச் செல்வது
எரிமலையுடன் பொங்கி எழுவது
ரோஜா இதழ்களில் புன்னகை பூப்பது
நீரோடைகளில் பண்பாடிச் செல்வது.

அப்போது அங்கே, மூன்று பூதங்கள்
ஒரு பாறைமேல் அமர்ந்திருப் பதைக்
கண்டேன்.

ஏதோ ஒரு சக்தி, என்னை,
அவற்றை நோக்கித் தள்ளிவிட,
என் விருப்பத்திற்கு மாறாக, நான்,
அவற்றை நோக்கித் தள்ளாடிச்
சென்றேன்.

சில காலடிகள் எடுத்து வைத்தபின்,
அவற்றிற்கு முன், சற்று தூரத்தில்,
நான் நின்று விட்டேன். ஏதோ ஒரு
மந்திர சக்தி
என்னைத் தடுத்து நிறுத்தியது போல.

அப்போது, ஒரு பூதம் எழுந்து நின்றது.
பேசியது.
அதன் குரல் கடலின்
அடியாழத்திலிருந்து
வந்தது போல் இருந்தது.

"காதல் இல்லாத வாழ்க்கை
பூப் பூக்காத மரம் போன்றது.
அழகு இல்லாத காதல்
மணமில்லாத மலர்
விதையில்லாத கனி...
வாழ்க்கை, காதல், அழகு
ஒன்றில் ஒடுங்கிய மும்மூர்த்திகள்
அவர்களைப் பிரிக்கவோ, மாற்றவோ
முடியாது"
அடுத்த பூதம் எழுந்து நின்றது.
அதன் குரல், பேரருவியின் முழக்கமாய்
ஒலித்தது:
"கலகம் செய்யாத வாழ்க்கை
இளவேனில் இல்லாத காலம்
போன்றது.

உரிமை இல்லாத கலகம்
பாலை வனத்து வசந்தம் போன்றது...
வாழ்க்கை, கலகம், உரிமை
ஒன்றில் ஒடுங்கிய மும்மூர்த்திகள்.
அவர்களைப் பிரிக்கவோ, மாற்றவோ
முடியாது"

மூன்றாவது பூதம் எழுந்து நின்றது.
இடியின் குரலில் முழங்கியது இப்படி.

"சுதந்திரம் இல்லாத வாழ்க்கை,
ஆத்மா இல்லாத உடலைப் போன்றது.
சிந்தனை இல்லாத சுதந்திரம்,
குழம்பிப்போன உயிரைப் போன்றது.
வாழ்க்கை, சுதந்திரம், சிந்தனை
ஒன்றில் ஒடுங்கிய மும்மூர்த்திகள்.
அவை என்றும் இருப்பவை
என்றும் மறையாதவை"

அதன் பிறகு,
மூன்று பூதங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து,
பயங்கரமான குரலில் முழங்கின.

"காதல் பெற்றெடுப்பது எதுவோ,
கலகம் படைப்பது எதுவோ,
சுதந்திரம் தூண்டுவது எதுவோ -
எல்லாம் கடவுளின் வெளிப்பாடு
கடவுள்-
அறிவார்ந்த பிரபஞ்சத்தின்
வெளிப்பாடு."

அப்பொது மௌனம்,
கண்களுக்குப் புலப்படாச் சிறகடிப்போடு
கலந்தது வானத்து உடல்களுடன்
நடுங்கியது.
பிறகு அவற்றுடன் போரிட்டு வென்றது.

நான் கண்களை மூடிக் கொண்டேன்.

நான் சற்று முன் கேட்ட குரல்களின்
எதிரொலிகளைக் கேட்டேன்.
நான் என் கண்களைத் திறந்த போது,
ஒன்றையும் காணோம்.
மூடுபனித் திரையில் கடல் மட்டுமே
தெரிந்தது.

அந்த மூன்று பூதங்கள் அமர்ந்திருந்த
பாறையை நோக்கி நடந்தேன்.
அங்கே யாருமில்லை.

ஊதுவத்திப் புகை மட்டும்
வானை நோக்கிச் சுழன்று சுழன்று
சென்று கொண்டிருந்தது.

-கலீல் ஜிப்ரான்-
தமிழில் கவிஞர் புவியரசு

## • புதுவரவு




நூல் : தூறல்
கவிதைத் தொகுதி
ஆசிரியர் : எ. ஜெனாத்

இளம் கவிஞன் எ.ஜெனாத் அவர்களின்
அருமையான கவிதைகள் அடங்கிய
கவித்துவ அழகுடன் கூடிய
தொகுப்பிலிருந்து சுவைக்க ஓர் கவிதை...

### பார்வையும் பாதையும்

காண்பவையெல்லாம் வளமையென்று காணும்
ஊமைக் கண்களை பிடுங்கியெறிந்து விட்டு
புதிதாய் இரு கண்களைப் பூட்டிக் கொண்டு
அதிகாலை வேளை தெருவிலிறங்கி நடக்கத் தொடங்கினேன்


வெண்சீருடையணிந்த மாணவர்கள்
புத்தகங்கயோடு அறிவையும் மூட்டைகட்டி
தோள்களில் சுமந்தபடி பள்ளி செல்லக் கண்டேன்
திறந்து கிடந்த வகுப்பறை யன்னல்களூடே
மாணவர்களின் மதிப்பெண்களைக் கொண்டு
அவர்களின் அறிவிற்கு மதிப்பெண் போடும்
சில முட்டாள் ஆசிரியர்களையும் கண்டேன்

மனிதநேய போதனைகள்
புனித நூல்களில் தடித்த எழுத்துக்களாயிருக்க
மதத்தின் பெயரில் மதம்பிடித்தலையும்
ஆறறிவு மிருகங்களை தெருக்களெங்கும் கண்டேன்
காவிகளும் வெண்ணாடைகளும் காவலிருக்க
காமத்திற்கும் பேராசைக்கும் தூபம் காட்டும்
மதத்தலைவர்கள் சிலர் வழிபாடுகளில் ஈடுபடக் கண்டேன்

கதிரைப் பந்தயத்தில் வட்ட மேசைகளில்
பிள்ளைக் கறியுடன் விருந்து பரிமாறி
கோடான கோடி தலைகள் மேல் நடந்து
நாடாளப் போகும்
போலி அரசியல் வாதிகளை நம்பி
மக்கள் வரிசையிட்டு வாக்களிக்க கண்டேன்

உழுது விதைக்கும் விவசாயிகள்
தற்கொலை செய்து கொண்டு சாக
வாங்கி விற்கும் வியாபாரிகள்
உண்டு கொழுத்திருக்கக் கண்டேன்.

பகலில் பொருட்களை பதுக்கி வைத்தும்
இரவானதும் கறுப்புச்சந்தையில் விற்பனை செய்தும்
முதலாளிகள் கோவில்களில் அன்னதானம் போடக் கண்டேன்
மருத்துவர்கள் அப்பாவி உயிர்களோடு விளையாடுவதையும்
பிணங்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்
பணக்கூத்து நடிப்பதையும் கண்களால் கண்டேன்



பொருள் புரியாத வேற்று மொழிப் பாடலொன்றை
தேசியகீதமென்று உதடுகளில் உச்சரித்துக்கொண்டு
அடிமைத் தனத்தையே அருமையான சுதந்திரமெனக் கொண்டாடும்
அடிமட்ட முட்டாள்களின் அகராதியில்
கோழைத்தனத்தை பொறுமையெனவும்
பயத்தை மரியாதையெனவும்
பொருள் கொடுத்திருக்கக் கண்டேன்

சோர்ந்து போன கால்களை
திடப்படுத்திக் கொண்டிருக்கிறேன்
பேராற்றல் கொண்ட கைகளை சேர்த்துக்கொண்டு
நாளை செயலில் இறங்கப் போகிறேன்
என்னோடு வரப் போவது யார்?

## •குமாரதேவன் குறித்து...




**1970 களின் பிற்பகுதி,**
ஒரு நாள் நண்பகல். சிரித்திரன் ஆசிரியர் வீட்டின் முன்னில் ஒரு இனந்தெரியாத நபரின் நடமாட்டம் இருப்பதாக அவர் மைத்துனர் அவருக்குச் சொல்லுகிறார்.

போய் வீட்டுப்படலையைத் திறந்து பார்த்தால் அவரை அங்கு காணவில்லை. மீண்டும் சிறிது நேரத்தின் பின்னர் அதேநபர் வந்து நிற்பதாக அறியப்பட்டு ஆசிரியரின் மனைவி போய் பார்க்கிறார். அங்கே சாரம் சேட்டுடன். ஒரு சாதாரண மனிதனாக நின்ற அவர் இவரைக் கண்டதும் மலங்க மலங்க விழிக்கிறார்.
"என்ன விசியம். ஆரைத் தேடிறியள்" ஆசிரியர் மனைவி கேட்கிறார்.

".... " வந்தவர் மௌனிக்கிறார்.

".... " வந்தவரிடமிருந்து எதுவித பதிலையும் பெற்றிராத ஆசிரியரின் மனைவி படலையை மூடப் புறப்பட ..

"சிரித்திரன் ஆசிரியற்றை வீட்டைத்தேடி வந்தனான். இந்தப் பக்கம்தான் அவர் இருக்கிறதாச் சொல்லிச்சினம்.. உங்களுக்குத் தெரியுமோ?"
என்ற அவரைப் பார்த்துப் புன்முறுவலோடு ஆசிரியரின் துணைவியார் தன்னை உள்ளே அழைத்துச் சென்றதாக சிரித்திரன் ஆசிரியருக்கும் தனக்கும் ஏற்பட்ட ஆரம்ப உறவு பற்றிப் பின்னாளில் ஒரு சமயம் என்னிடத்தில் விவரித்திருக்கிறார் குமாரதேவன்.

"ஒரு மனிதன் வாசிப்பினூடாகத் தனது அறிவைப் பெருக்கலாம்" என்று பல இடங்களில் எழுதியதை வாசித்திருக்கிறோம். அந்த எழுத்துக்களில் பலரை உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள்.
அவற்றை வாசிப்பின்போது வெறும் எழுத்துக்களாக மட்டும் பார்த்தோம். வாசிப்பதால் ஒரு மனிதன் ஒரு அறிவுசார் உலகத்தையே கட்டிப்போடலாம். தன் காலடிக்குக் கீழ் அவர்களைக் கொண்டு வரலாம் என்றதை நிஜத்தில் எமக்கு அறியத்தந்தவர் குமாரதேவன்.
குமாரதேவனிடமிருந்த அறிவுத்தேடலுக்கு ஆயுதமான வாசிப்பின் நேசிப்பு பற்றி வடக்கிலுள்ள இலக்கியவாதிகள் பலர் அறிந்திருப்பார்கள் என்று சொல்லலாம். ஏனெனில் அவர் கலை. இலக்கியம் தொடர்பான எல்லாக் கூட்டங்களுக்கும் சமூகமளிப்பதோடு, சந்தர்பம் வரும்போது மிகவும் ஆணித்தரமாகத் தனது கருத்தை முன்வைத்துப் பேசுவார். சில சந்தர்பங்களில் பார்க்க "இவரா, இப்படி? என மிகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்.

அவர் வாசிக்காத பத்திரிகைகள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தான் படித்த கட்டுரைகள் பற்றி அதை எழுதியவரைத்தேடி விவாதிக்கின்ற பழக்கம் அவரிடம் இருந்தது. புதியவர்களாயின் அவர்களைச் சந்திக்கின்றபோது மிகவும் ஆர்வத்தோடு அவர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாப்படுத்திய ஒரு வாசகனாகவும் குமாரதேவன் பேசப்படுகிறார்.

கடைசிவரைக்கும் அவரிடமிருந்த கவலை தான் ஒன்றையும் எழுதுவதில்லை என்பதே.. இறப்பதற்கு 5நாட்கள் முன் என நினைக்கிறேன் .
அவர்அதுபற்றிப்பேசினார். இந்த உலகத்துக்குத் தான்சொல்ல வேண்டிய விடயம் தனக்குள் ஏராளமாக இருப்பதாகவும் யாராவது முன்வந்து தன்னோடு இருந்து அவற்றை எழுதி எடுப்பார்களேயானால் தான் அவற்றைப் பத்திரிகைகளில் கட்டுரையாகவோ அல்லது நூலுருவாகவோ கொண்டு வரலாம் என்று சொல்லி இருந்தார். அதனைக் கேட்டுக் கொண்டு ஒரு நண்பர் அதற்கான ஆயுத்தங்களைச் செய்திருந்தார் என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம். இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால் அவர் எண்ணங்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், விமர்சனங்கள் என்று பல விடயங்கள் எழுத்துருப் பெற்றிருக்கும். ஏன்? நூலுருவாகவும் வந்திருக்கும். அதற்கான முயற்சி ஒன்று நடைபெற்றது.

இருந்தும் புதிய சொல். உதயன். நூலக நிறுவனத்தினர் அவரைப் பயன்படுத்தி இருக்கின்றனர். அவர் சார்ந்த விடயங்கள் எழுத்துக்களிலும், ஒலி வடிவாகவும், ஒளி வடிவாகவும் சில வெளிவந்திருக்கின்றன. அவரின் முழுஆளுமையையும் அறிந்தவர்களாக "புதியசொல் " இதழ் சார்ந்த அவர் நண்பர்கள் வட்டமே அவரை அதிகம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர்கள். அவர்களுடன் கைகோர்த்து அதிகம் பயணித்தவர்கள். குமாரதேவன் யாழ்.நூலவாசகர் வட்டத்திலும் தனது முழுமையான பங்களிப்பைச் செய்தவர்.

அவர் எழுத்துக்களை அதிகம் நேசித்தவர். சதா வாசித்துக் கொண்டே இருந்தவர். அவர் தனது இறுதித் தருணங்கள் வரையும் வாசித்தவர். அதனை நேசித்தவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் சார்ந்த துறையில் ஒரு வெற்றிடம் நிரப்பப்படாமலே பலகாலம் இருக்கப் போகிறது. அந்த வெற்றிடத்தை உடன் நிரப்பக் கூடிய ஆளுமையுள்ள ஒரு வாசகன் எம்மத்தியில் இருப்பதாக எனக்குத் தென்படவில்லை. அப்படிப் பட்ட குமாரதேவன் போன்ற தொரு வாசகனை உருவாக்கிய இயற்கையே அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான இன்னுமொரு இரசனைவெறி பிடித்த வாசகனையும் எமக்குத் தந்துதவும் என்ற நம்பிக்கையோடு பயணிப்போம். இந்த

---

## நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



இனிப் புதுசா ஒரு தந்தி ரோபாயத்தை வகுக்க வேண்டிய நேரம் வந்திட்டுது. இனிக்கண்டபடி விளையாடேலாது. ரணிலை வைச்சு விளையாடின மாதிரி. அவரை வைச்சு சனத்தைப் பேய்க் காட்டின மாதிரி. இனி ஒண்டும் வாய்க்காது. கோத்தா வந்திட்டார். இனி அவர் அடிக்கிற தெல்லாம் சிக்ஸரும். பவுண்டறியுமாத்தான் இருக்கப் போகுது. ஆனபடியாலை புதுசா ஒரு வியூகத்தை அமைக்கிறது தான் சரியான வழி. ஆனபடியாலை என்னை ஒருத்தரும் குழப்பாதையுங்கோ" எண்டு அறிக்கை விட்டிருக்கிறார் மாவை.

தன்ரை மக்களிலை, தான் இருக்கிற மண்ணிலை எந்த விதமான அக்கறையும் இல்லாமல், அவை எக்கேடு கெட்டுப்போகட்டும் எண்டு அபிவிருத்தி எண்ட சாட்டிலை ரணிலிட்டைக் காசை வாங்கி அரைவாசியைச் செலவழிச்சுக் கொண்டு, அரைவாசியை திரும்ப விட்டுக்கொண்டிருந்த நீங்கள் ஒரு யூகமில்லாத அரசியலைச் செய்து போட்டுத் தோத்துப் போட்டீங்கள் எண்ட உடனை வியூகம் அமைக்கிறன் எண்ட விசர்க்கதையைக் கதைக்கிறீங்கள் எண்டு சனம் பேசேல்லை. சனம் திட்டுது.

நீங்கள் வெளியாலை சொல்லாட்டிலும் உங்கள் எல்லாருக்கும் வடிவாத்தெரியும் சஜித் தோற்பர் எண்டு. சஜித்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவதாறம் எண்டு சொல்லி, அதுவும் கிட்டுப் பூங்காவிலை வைச்சு அறிவிக்கிறியள். அதை நீங்கள் வேணுமெண்டு சொன்னதாத்தான் தமிழ்ச்சனம் இப்ப நம்புது.

அப்பிடி நீங்கள் தமிழ்சனத்திட்டைச் சொன்னால், அதை வைச்சு மஹிந்தா வின்ரை கட்சிக்காரர் பெரிய பிரச்சாரம் செய்து சிங்கள மக்களின்ரை வோட்டைத் திருப்புவினம் எண்டு உங்களுக்கு வடிவாத் தெரியும். நீங்கள் சஜித்துக்கு ஆதரவுதாறம் எண்டு அறிக்கை விட்டதாலை அந்தக் கடைசித் தருணத்திலைதான் கோத்தாக்கு பத்து இலட்சம் வாக்குக் கூடின தெண்டு சனம் கதைக்கத் துவங்கிவிட்டுது. அதுக்காக நீங்கள் மஹிந்தாட்டை வேண்டிப் போட்டியள் எண்டும் சனம் நினைக்கிது. ஒருதனுக்கு ஆதரவு குடுத்தும் கெடுக்கலாம் எண்டதை இவ்வளவு நாளும் தமிழ்சனம் கேள்விப்பட்டிருக்கிது. ஆனால் குடுத்துக் கெடுத்தான் என்றதை இப்பதான் நேரடியாகச் சனம் பாத்திருக்கினம்.

ஆனால் சனம் இன்னுமொண்டையும் கதைக்கிது. ஐ.தே.க விலை இருந்த சஜித்தை விழுத்த வேணும் எண்டசாதி வெறிக்கு நீங்கள் சப்போட் பண்ணிப் போட்டியளாம். ஆனால் சஜித் விட்ட கண்ணீர் உங்களைச் சும்மாவிடாது. மாவைக் கந்தன் மாவையை மாவாவாப்போடுவராம் எண்டும் சனம் கதைக்கிது.

அரசியலை வடிவா ஆராஞ்சு, என்ன நடக்கும் எண்டு யூகிச்சு தங்களை நம்பின தன்ரை இனத்தையும், இடத்தையும் பாதுகாக்கக் கூடிய மனுசனோ அல்லது அமைப்போ தான் அந்த மக்களுக்கு உரியது. இது அதை விட்டிட்டு வந்தாப்பிறகு பாப்பம் எண்டு சில கட்சியள் சொல்லுற மாதிரிச் சொல்லிக்கொண்டு குறிசுடநினைச்சுக் கொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்புக்குக் காலம் ஒரு குறிசுட்டிருக்கு. அதுவும் இடம், வலம் எண்டு பாராமல் எங்கும் குறிசுட்டிருக்கிறார் கடவுள். சஜித் வந்தால் எப்பிடி அரசியல் செய்யிறது? கோத்தா வந்திட்டால் எப்பிடிச் சமாளிக்கிறது? எண்டு ஏதாவதொரு திட்டம் கூட்டமைப்பிட்டை இருந்ததோ? இருக்கோ? இனியும் திட்டத்தைப் போடுவினமோ? எண்டதை ஒருக்காக் கேட்டுச் சொல்லுங்கோ பாப்பம்.

இது அதை விட்டிட்டு மாவை திரைப்படத்துக்குக் கதை எழுதிற ஆக்கள் மாதிரி மாவிட்டபுரத்து வீட்டிலை அறைக்கதவைப் பூட்டிப் போட்டிருந்து அடுத்த தேர்தலிலை எப்பிடித் தமிழ் சனத்தின்ரை காதிலை பூச்சுத்தலாம் எண்டு வியூகம் அமைக்கிறாராம். வருசம் வருசம் வாற மாவீரர் தினத்திலை சனம் ஒண்டை மட்டும் கட்டாயம் நினைச்சு வேதனைப் படும். ஒரு நல்ல தலைவனை, ஒரு நல்ல சந்தர்பத்தை இழந்து போனம் எண்டதை. எல்லாம் எப்பவும் கூடிவராது எண்டதைச் சனம் நல்ல விளங்கிக் கொண்டுது.

கூட்மைப்பு ஒண்டை மட்டும் நல்லா விளங்கிக்கொள்ள வேணும். போன ஜனாதிபதித் தேர்தலிலை சனம் ஆருக்கு வாக்களிக்கப் போகுது? ஆருக்கு வாக்களிகத் தீர்மானிச்சிருக்கு? எண்டதை நல்லாத்தெரிஞ்சாப் பிறகு தான் அவசர அவசரமாக கிட்டுப் பூங்காவிலை கூட்டம் போட்டு "சஜித்துக்கு வாக்களியுங்கோ எம் தமிழ் உடன் பிறப்புக்களே" எண்டு கத்திக் குளறிக் கூச்சல் போட்டனியள். ஆனால் நீங்கள் சொல்லாட்டிலும் சனம் சஜித்துக்குத்தான் வாக்களிச்சிருக்கும். ஏனெண்டால் யுத்தத்தை அனுபவிச்ச நேரம் சின்னப் பிள்ளையாளாயிருந்த ஆக்கள் தான் இப்ப வாக்காளர்.

அப்ப அவைக்குத் தான் யுத்தத்தின்ரை வேதனை அதிகம் தெரியும். யுத்தத்தின்ரை அகோரம் அதிகம் தெரியும். அப்ப அவை கோத்தாக்கு வாக்களிக்கமாட்டினம். சஜித்துக்குத்தான் வாக்களிப்பினம் எண்டதை ஒரு தமிழனாப் பிறந்த சின்னப் பிள்ளையும் சொல்லும். இதைத் தீர்மானிக்க எங்களுக்கு ஒரு கூட்டமைப்புத் தேவை இல்லை. கட்சி தேவை இல்லை. அதை கூட்டமைப்பு சரியா விளங்கிக் கொண்டால் சரியா எல்லாம் நடக்கும். இது அதை விட்டிட்டு அரசியல் ஞானம் அடிச் சட்டியிலே கூட இல்லாத ஆக்களைக் கொண்டு வந்து வைச்சுக் கொண்டு அரசியல் செய்து எங்களுக்கும் உங்களைப் போலை மூளை இல்லை எண்டு காட்டுறது அவ்வளவு புத்தியான ஒரு செயற்பாடாத் தெரியேல்லை.

அப்புக்காத்து அப்புக்காத்தா இருந்து வேணுமெண்டால் வழக்கிலை ஆருக்கும் காதிலை பூவைக்கலாம். அவர் இப்ப கிட்டியிலை வந்து நிண்டு கொண்டு, ஆற்றையேன் எடுபிடியாவும், ஏஜென்டாவும் இருக்கிறதுக்குத் தமிழ்சனத்தைப் பாவிக்கிறதை அனுமதிக்கேலாது. அவ்வளவுதான். அப்புக்காத்தைக் கலைச்சுப் போட்டுக் கூட்டமைப்புத் தன்னையும் திருத்தாட்டில், தமிழ்சனம் ஆரையேன் புதசாத் தான் தேடவேண்டி வரும். நினைவிலை வைச்சிருங்கோ?

# பலவீனங்கள்



ஒரு மனிதனின் பலவீனமே அவனுடைய தோல்விக்குக் காரணம் என்பது பெரும்பாலான நேரங்களில் பொருந்தாது.

வேறு சில நேரங்களில் ஒருவனது பலவீனமே அவனது பலத்துக்குக் காரணமாகி விடுகிறது.

சிறுவயதில் பசியினால் ஏற்பட்ட பணத்தேவை என்னைத் திருடத் தூண்டியிருக்கிறது.

நான் பயத்தினால் திருடாமல் இருந்திருக்கிறேன்.

அங்கே பலவீனமே எனது பலம்.

நீண்ட நாட்களுக்குமுன் நான் விரும்பிய ஒரு பெண், அவளும் என்னை விரும்பினாள்.

இருவருக்குள்ளும் உடலுறவில்லை.

இப்போது அவளுக்குத் திருமணமாகி வயது வந்த குழந்தைகளும் இருக்கின்றன.

ஒரு நாள் இரவு முழுவதும் அவளும், நானும் தனியாக இருக்கக் கூடிய சந்தர்ப்பம் அண்மையில் எனக்கு வாய்த்தது.

வெகுநேரம் எண்ணங்கள் அலைமோதியும் இருவரும் பயத்தினால் தொடாமலேயே இருந்து விட்டோம்.

அங்கும் பயம் என்ற பலவீனமே எங்கள் பலமாகி விட்டது.

தன்னுடைய பலவீனத்தை அறிந்த ஒருவன், பிறரோடு சண்டைக்குப் போவதைத் தவிர்த்துக் கொள்கிறான்.

அதன் விளைவாக துயரங்கள் உருவாகாமல் போய்விடுகின்றன.

ஆகவே, பலம் என்பது ஒருவனுடைய துணிச்சலில்லை. அவனது பயத்திலும் இருக்கிறது.

ஆண்மையாளனுள் அடக்கம் பலவீனமானாலும் அதுவே அவனது பயம்.

பெண்மை பலவீனமானது.
அந்த பலவீனம் அவளது பெண்மைக்குக் களங்கத்தை உண்டாக்குகிறது.

ஆனால் அதே பலவீனம் அதிகப்பட்டு பயமாகி விட்டால், அதுவே அவளது பலமாகி விடுகிறது.

சீவக சிந்தாமணியில் வரும் சீவகன் ஒரு முறை காட்டு வழியே சென்று கொண்டிருந்தான்.

அப்போது அழகான பெண்ணொருத்தி அவனைச் சந்தித்தாள்.

அவன் மீது காதல் கொண்டு கட்டறுந்து நின்றாள்.

சீவகன் அவளுக்கு புத்திசொல்லி விட்டு, மேலே நடந்தான்.

கொஞ்ச தூரத்தில் அந்தப் பெண்ணின் கணவனைச் சந்தித்தான்.

அந்தக் கணவன் சீவகனைப் பார்த்து,

"வரும் வழியில் எங்காவது என் மனைவியைப் பார்த்தீர்களா?" என்று கேட்டான்.

"பார்க்கவில்லை" என்று நேரடியாகப் பதில் சொல்லாத சீவகன், பெண்மையின் பலவீனத்தைப் பொதுவாக விளக்கினான்.

பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை உடைய அல்ல
ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப்பத் தாங்கை யிட்டால்
இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க்குன் றெரியுற்றாற்போல்
மெலிந்துபின் மீளு மன்றோ.

"ஐயா, பெண்மை என்பது பெருமையுடையதல்ல் நல்ல சமயங்களில் அது தன் குடிப்பிறப்பைக் கூட கருதுவதில்லை.

உள்ளத்தில் நிறைவுடையதுமல்ல. ஓராயிரம் எண்ணங்களுடையதாகும்.

எண்ணிப் பத்து அள்ளிக் கொடுத்தால், அவள் இந்திரன் மகளானாலும், நெருப்பிலே பட்ட வெண்ணெய் போல உருகித்தான் மீளுகிறாள்" என்றான் சீவகன்.

பொதுவாக எல்லாப் பெண்களைப் பற்றியும் பேசுகிற இந்தச் சீவகன் கருத்து, இயற்கைக்குப் புறம்பானது உண்மைக்கு மாறானது.

பேரழகனைக் கண்டாலும், பெரும்பணமே கிடைப்தென்றாலும் அலட்சியப் படுத்தக்கூடிய பத்தினிப் பெண்களை இன்னும் இந்நாடு கண்டு கொண்டு தானிருக்கிறது.

உடல் அமைப்பில் பெண்மையையே பலவீனமாகப் பெற்ற பெண்மை, உள்ளத்தால் பலமாகவும் இருக்கிறது.

தனக்கு விதிக்கப்பட்டுள்ள நியதிகளில் எந்தப் பலவீனமும் குறுக்கிடுவதை அவள் அனுமதிப்பதில்லை.

அவளுக்கு பெண்மைதான் பலவீனமே தவிர, அந்தப் பலவீனத்தைத் தோற்கடிக்கக் கூடிய பலம் உள்ளத்தில் இருக்கிறது.

சரித்திரம் மன்னர்களின் பலவீனத்தையே பேசுகிறது.

அந்த மன்னர்களை இயக்கிய விதி பல நேரங்களில் அந்தப் பலவீனத்தின் மூலமே அவர்களை உயர்த்தியிருக்கிறது.

சோழ - சாளுக்கிய யுத்தம் ஒரு கட்டத்தில் முடிந்ததற்குக் காரணம், சோழர்கள், சாளுக்கியர்களிடத்தில் பெண்ணெடுத்ததுதான்.

அங்கே பலம் யுத்தத்திற்குக் காரணமாயிற்று.

பலவீனம் சமாதானத்துக்குக் காரணமாயிற்று.

முட்டாள் தனமான பலத்தை விட பலவீனம் உயர்ந்தது என்பதை வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

சோவியத் யூனியனுக்குள் ஹிட்லர் நுழைந்தது அவனுடைய முட்டாள் தனமான பலத்தைக் காட்டிற்று.

தன்னுடைய எதிரி இன்னார் என்று அறியத் தெரிந்த ஹிட்லருக்கு, அந்த எதிரியின் வசதி இவ்வளவு என்பதை அறியும் திராணி இல்லை.

நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

போலந்தைப் பிடித்தபோது ஹிட்லரைப் பற்றி உலகத்திலிருந்த பயம், உலக சரித்திரமே மாறப் போகிறது என்பதைத்தான் குறித்தன.

அவன் சொவியத் யூனியனுக்குள் நுழையாமல் இருந்திருந்தால், பத்தே நாட்களில் அகில ஐரோப்பாவையும் பிடித்திருக்கலாம்.

அத்தோடு ஐரோப்பிய நாடுகளின் காலனிகளாக இருந்த அறுபதுக்கும் மேற்பட்ட ஆப்ரிக்க -ஆசிய நாடுகளும், தீவுக் கூட்டங்களும், வெடி மருந்துச் செலவில்லாமலே அவனுக்குக் கீழ் வந்திருக்கும்.

ஆனால் ஹிட்லர், தான் பலசாலி என்று நினைத்த ஒரு காரணத்தினால், பலவீனனானான்.

அந்த பலவீனத்தாலேயே சோவியத் யூனியனுக்குள் நுழைந்தான்.

சோவியத்தின் பனிக் காலமே அவனது சமாதி காலம் ஆகிவிட்டது.

ஆகவே, ஒருவனது பலம் என்பது அவனது பயத்திலும் இருக்கிறத் பயத்தின் விளைவாகத் தோன்றும் பலவீனத்திலும் இருக்கிறது.

அஞ்ச வேண்டிய விஷயங்களுக்கு அஞ்சாமல் நடப்பது பலமாகாது. ஆங்கே அஞ்சுவது பலவீனமாகாது.



பதினாலாவது லூயியின் பலம், எந்த நேரமும் எதிரிகள் தன்னை அழித்து விடலாம் என்ற பயத்தால் எழுந்த பலம்.

பதினாறும் லூயியின் பலவீனம், தன்னை யாரும் அழிக்க முடியாது என்ற துணிச்சலால் எழுந்த பலவீனம்.

ஆகவே, பலமும் பலவீனமும், விளைவின் நியாயத்தைப் பொறுத்தனவே தவிர, அசட்டுத் துணிச்சலிலும் இல்லை அஞ்சி அஞ்சி நடுங்குவதிலும் இல்லை.

**கண்ணதாசன்**
**நன்றி : தோட்டத்துப்பூக்கள்**



வைத்திய கலாநிதி. சி.எஸ். நச்சினார்க்கினியன்

# இறையம்சத்தின் வடிவமே மனிதநேயம்..

1980களின் நடுப்பகுதியைக் கடந்த ஒருநாள் இந்திய அமைதிப்படை வருகைக்கு முற்பட்ட காலம்.

இலங்கை ராணுவத்தின் "பொம்மர்கள்" என்று சொல்லப்பட்ட விமானங்கள் யாழ். நகர்மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதல்களை நடத்தியதில் யாழ். நகரே வெறிச்சோடிக் கிடந்தது.

இரண்டாம் நாளாக அன்றும் பகல்வேளை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தது.
விடுதலைப்புலிகளின் கலிபர் ரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட பிக்கப் வாகனங்கள் ஓரிரண்டு மட்டும் வீதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது தென்பட்டுக் கொண்டு இருந்தன. அதைவிட எந்தவொரு தனியார் வாகனங்களின் நடமாமட்டமும் வீதியில் இருக்கவில்லை.
வானை நோக்கி வெள்ளைக் கொடிகளை வீசிக்காட்டிய வண்ணம் சில அவசர நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போதைய நாட்களில் யாழ். வைத்தியசாலை பாதுகாப்பு வலயமெனச் சட்டப்படி பிரகடனப் படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால், வைத்தியசாலை மீது குண்டுகள் வீசப்படமாட்டாது என்ற பெயரளவு நம்பிக்கை மட்டும் இருந்தது.

இப்படியான சூழ்நிலையில் வைத்தியசாலைக்குள் பிரசவ விடுதியில் சற்றுப்பரபரப்பு.

மகப்பேற்றுக்காகச் சேர்க்கப்பட்டிருந்த ஒரு தாயின் அவலக்குரல் வைத்தியசாலை முழுவதிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

வயிற்றிலுள்ள குழந்தையின் இருப்பு நிலை மாற்றம் காரணமாகத் தாயையும் சேயையும் உயிருடன் காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம். வெளியில் உறவினர்கள் கலங்கி நின்ற பொழுது ஒரேயொரு வைத்தியரின் குரல்மட்டும் அவர்களை சமாதானப்படுத்தியதோடு மட்டும் நின்றுவிடாது துரிதமாகச் செயற்பட சில அறிவுறுத்தல்களை உத்தியோகத்தர்களிடம் பரிந்துரை செய்கிறது.

அந்தக்குரலுக்குச் சொந்தக்காரர் அப்போதைய வைத்தியசாலைப் பணிப்பாளரான டாக்டர். நச்சினார்க்கினியன் அவர்களே.

டாக்டர் சபாரட்ணம் அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வந்தால் இந்தத்தாயையும் சேயையும் நிச்சமாகக் காப்பாற்றி விடலாம் என்கிறார் டாக்டர் நச்சினார்க்கினியன். ஆனால் இந்தக் கடும் குண்டுத் தாக்குதல்களுக்கு நடுவில் எந்த வைத்தியராலும் வைத்தியசாலைக்கு வர வாய்ப்பே இல்லை. ஆனாலும் அவர் தளர்ந்து விடவில்லை.
வாடகை வாகன சாரதிகள் எவரும் அச்சமயம் உதவிசெய்யும் சூழ்நிலை இருக்கவில்லை.
பகல்வேளை ஊரடங்கு அமுலில் இருந்ததால் வீதியில் தலைகாட்ட எவரும் தயாராக இல்லை.

எதைப்பற்றியும் சிந்தியாமல் உடனடியாக அம்புலன்ஸை அனுப்பி அதில் டாக்டர் சபாரட்ணம் அவர்களை ஏற்றி வரும்படி டாக்டர் நச்சினார்க்கினியன் கட்டளையிட அம்புலன்ஸ் புறப்படுகிறது. சட்டநாதர்சிவன் கோவிலடியில் வசித்த டாக்டர் சபாரட்ணம் அவர்களை ஏற்றிக் கொண்டு ஒரு மணி நேரத்துக்குள் அம்புலன்ஸ் வைத்தியசாலையை மீண்டும் அடைந்து விடுகிறது.

நம்பிக்கையுடன் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சத்திரசிகிச்சை அறையில் உடனடியாகச் சிகிச்சை ஆரம்பிக்கப்படுகிறது.

குண்டுச் சத்த அதிர்வுகளில் கூட கைகளில் நடுக்கம் சிறிதும் இல்லாமல் சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கையாளும் வல்லமை இலங்கைத் தமிழ் வைத்தியர்களுக்கு மட்டுமே உண்டு என்பது இந்த உலகம் அறிந்த உண்மை.

வெற்றிகரமாக நடந்து முடிந்தது ஒரு மிகப்பெரும் சவால் நிறைந்த விடயம். பூரணநலம் பெற்றன தாயும் சேயும். கண்ணீர் கலந்த நன்றிகளைத் தெரிவித்தன சுற்றி நின்ற உறவுகள்.

டாக்டர் நச்சினார்க்கினியன் அவர்கள் ஒரு வைத்தியராக மட்டும் தன் கடமைகளை, அதுவும் சட்டத்துக்கு அமைவாகச் செய்ய நினைத்திருந்தால், அன்று ஒரு அம்புலன்ஸ் இன்னொரு வைத்தியரைத்தேடிப் புறப்பட்டிருக்காது. இத்தனை பிரயத்தனம் எடுத்து என்ன காரணத்துக்காக அன்று அந்தக் கர்ப்பிணித்தாய் காப்பாற்றப்பட வேண்டுமென டாக்டர் நச்சினார்க்கினியன் இத்தனை கரிசனை காட்டியிருந்தார் என்று ஆராயும் போது ஒரு திடுக்கிடும் காரணம் அகப்பட்டது.

ஒருவேளை ரத்த உறவினராய் இருந்திருக்குமோ? இல்லவே இல்லை.
பெண் எடுத்த, பெண்கொடுத்த திருமணத் தொடர்புகள்? சத்தியமாக இல்லை.
சிலவேளை நட்பு? நிச்சயமாய் இல்லை.
முன்பின் தெரிந்தவர்களோ? கண்டிப்பாய் இல்லை.
குறைந்தபட்சம் அயலவர்களாக இருந்திருக்கலாம்? நல்லூரான் ஆணையாக எதுவும் இல்லை.
இவற்றையெல்லாம் கடந்த அந்தத் திடுக்கிடும் காரணம் ஒன்றே ஒன்று தான்.

ஆம்! அதுதான் "மனிதநேயம்"

அறிமுகமே இல்லாத ஒருவனின் மோட்டார் சைக்கிள் "ஸ்ராண்ட்" சரியாகத் தட்டியிருக்கவில்லை என்பதற்காக அந்த மோட்டார் சைக்கிளைத் துரத்திப்பிடிக்க வெறும் சைக்கிளில் வியர்க்க விறுவிறுக்க ஓடி அந்த மோட்டார் சைக்கிள்காரனை நிறுத்தி, அவனிடம் அறிவுறுத்தல் கொடுக்கும் ஒவ்வொரு மானிடர்களுக்கும் "மனிதநேயத்தின்" அர்த்தம் கண்டிப்பாய்த் தெரிந்திருக்கும். டாக்டரின் அதே போன்றதொரு மனிதநேயம் தான் அந்தக் கர்ப்பிணித் தாயின் உயிரை அன்று காப்பாற்ற உதவியது.

அன்று டாக்டர் நச்சினார்க்கினியன் அவர்கள் காப்பாற்றிய அந்தப் பெண் வேறுயாரும் அல்ல, அது என் தாய் காப்பாற்றப்பட்ட அந்தக் குழந்தை என் கடைசித் தங்கை.

இன்றுவரை என் பெற்றோர் மனதார வாழ்த்திக் கொண்டிருக்கும் இந்த வைத்தியரை ஒரு தடவை கூட நான் நேரில் கண்டது கிடையாது.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் என் சிறிய தந்தை ஒருவர் டாக்டர் நச்சினார்க்கினியன் அவர்களின் வீடியோப் பதிவொன்றைக் காட்டிய பொழுது, டாக்டர் பற்றிய இந்தப் பழைய நினைவுகளை என் பெற்றோர் நேற்றிரவு மீண்டும் நினைவுபடுத்திக் கூறியிருந்தனர்.

டாக்டரின் நீண்ட ஆயுளுக்கும் நோய் நொடியற்ற வாழ்வுக்கும் இறைவன் அருள்புரிய வேண்டும், மேலும், டாக்டர் சபாரட்ணம், மற்றும் அம்புலன்ஸ் சாரதியான அந்த முகம் தெரியாத நபர், மற்றும் அச்சமயம் சேவையில் இருந்த தாதியர் எனப் பலரும் காலங்கடந்த நன்றியறிதலுக்கு இன்றும் உரித்துடையவராகின்றனர்.




ரஞ்சித்தவராஜா (கனடா)

இது என் குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு சின்ன உதாரண சம்பவம். இதைப்போல நாட்டில் பல்வேறு இக்கட்டான சம்பவங்களில் பல உயிர்கள் காப்பாற்றப்பட இதேபோலப் பல டாக்டர் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

சாதாரண மனிதருக்கும் கடவுளுக்கும் இடையில் தூரம் மிக அதிகம். ஆனால் வைத்தியர்கள் மட்டும் கடவுளுக்கு மிக மிக அருகில் இருப்பவர்கள். போற்றப்பட வேண்டியவர்கள்.

"அன்னையர் தினம்", "தந்தையர் தினம்", "காதலர்தினம்" என்றெல்லாம் கொண்டாடுகின்ற நாம் "வைத்தியர் தினம்" (Doctors Day) என்று ஒருநாளைக் கண்டிப்பாக உருவாக்கி இருந்திருக்க வேண்டும்.

உயிர்களைக் காப்பாற்றும் எல்லா வைத்தியர்களுக்கும், அவர்களது புனித சேவைகளுக்கும் நன்றி கூறும் நாளாக அது அமைந்திருக்க வேண்டும்.



# சிங்கமே ஆனாலும் தனியாக எதிர்க்காதே! மிரட்டும் கழுதைப் புலிகளின் கதை



— ராஜேஸ்

"உன் பார்வையில் நான் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகிறேன். என்னுடைய பார்வையில் நீ என் எதிரி அவ்வளவு தான்! உன் அடுத்த தலைமுறையும் என் இனத்தை அழிக்கத் துணியுமென்றால் இப்போதே உன் அடுத்த தலைமுறையையும் கொல்வேன். என்னையும் என் இனத்தையும் பாதுகாக்க உன் பிள்ளைகளை மட்டுமல்ல உன்னையும் கொல்வேன்" இது நம் நாட்டின் இனமோதலின் கருத்து வெளிப்பாடு போலிருந்தாலும், காட்டின் இரு உயிர்களுக்கும் பொருந்தும். இந்த இரு உயிர்களின் முக்கிய நிகழ்ச்சி நிரலே ஒரு இனத்தை இன்னொரு இனம் அழிப்பதில்தான் இருக்கிறது. ஒன்று சிங்கம், இன்னொன்று கழுதைப்புலி.

சிங்கங்களை விடாது எதிர்த்து நிற்பது பெண் கழுதைப் புலிகள்தான். பெண் கழுதைப்புலிகள் ஆக்ரோஷமான உயிரினம். அந்தக் குழுவில் ஆண்கள் பெண்களைச் சார்ந்தே வாழ வேண்டியிருக்கும். இனப்பெருக்கத்துக்கு மட்டுமே அவை பயன்படுகின்றன. ஆண் கழுதைப்புலிகளுக்கும் பெண் கழுதைப்புலிகளுக்கும் உடலளவில் எந்த வேறுபாடுகளும் கிடையாது. ஆண் கழுதைப்புலிகளுக்கு இருப்பதைப் போன்ற ஆண் குறி பெண் கழுதைப்புலிகளுக்கும் உண்டு. இதற்குப் போலி ஆண் குறி என்று பெயர். பெண் கழுதைப் புலிகள் சிறுநீர் கழிப்பது, பிள்ளைகளை பெற்றுக் கொள்வது வரை எல்லாமே அந்தப் போலி ஆண்குறி மூலமாகத்தான். உடலோடு ஒட்டியிருக்க வேண்டிய பெண்குறி, ஓமோன் குளறுபடிகளால் சில அங்குலம் வெளியே நீண்டு காட்சி தருகிறது. இதைத்தான் போலி ஆண்குறி என்கிறார்கள். இந்தப் போலி ஆண் குறியின் சிறிய துளை வழியாகக் குட்டிகள் வெளிவரும்போது குட்டிகள் மட்டுமல்லாது தாயும் மிகப்பெரிய மூச்சுத் திணறலை எதிர்கொள்கிறது. இதனால் குட்டிகளில் 60 வீதமானவை இறந்தே பிறக்கின்றன. சில நேரங்களில் காயம் ஏற்படுகின்றன. இனப்பெருக்க நேரத்தில் மூன்றிலிருந்து நான்கு குட்டிகள் வரை ஈனுகின்றன. குட்டிகள் ஈன்ற நாளிலிருந்து 4 வாரங்கள் வரை அவை மண்ணுக்குள் வளை தோண்டி வசிக்கின்றன. வேறு யாரையும் அங்கு அவை அனுமதிப்பதில்லை.

யாருக்காகப் போராடுகிறோமோ அவர்களுடனேயே போராட வேண்டிய நிலை ஒவ்வொரு உயிரினத்துக்கும் வரும். கழுதைப்புலிகளும் விதிவிலக்கல்ல. குட்டிகளில் யார் பெரியவன் என்கிற சண்டை சிறு வயதிலேயே இவற்றுக்குள் வந்து விடும். தாய் கழுதைப்புலிகளுக்கு குட்டிகளுக்கு பாலூட்ட இரண்டு முலைக் காம்புகள் மட்டுமே உண்டு. இதனால் யார் முதலில் பால் குடிப்பது என்பதில் நான்கு குட்டிகளுக்குள் சண்டை தொடங்கிவிடும். இதில், பலம் பொருந்திய பெண் குட்டிகள் ஆண் குட்டிகளுடன் சண்டையிட்டு வெற்றி பெற்று விடுகின்றன. சில நேரங்களில் சண்டையின் முடிவில் ஆண் குட்டிகளைப் பெண் குட்டிகள் கொன்றுவிடுகின்றன. தப்பிப் பிழைக்கும் ஆண் குட்டிகள் பருவம் அடைகிற வரை தாயுடன் இருக்கின்றன. பருவம் வந்ததும், குழுவில் இருந்து பிரிந்து வேறு குழுவுடன் இணைந்து கொள்கின்றன. கழுதைப்புலிகள் ஒரு குழு வாக வாழ்பவை. ஒரு குழுவில சுமாராக 80 கழுதைப் புலிகள் இருக்கும். இந்தக் கூட்டத்துக்கு பெண்ணே தலைமை தாங்கும். குழுவை ஒருங்கிணைப்பது, வேட்டையாடுவது எல்லாமே பெண்தான். கழுதைப் புலிகளின் குழுவுக்கென்று தனி எல்லைகளை வரையறுத்துள்ளன. அதற்குள் சிங்கம், சிறுத்தை, இன்னொரு கழுதைப்புலி கூட்டம் என்று எந்த உயிரினங்களும் வந்து விடவே கூடாது. அதில் அவை உறுதியாக இருக்கின்றன. தங்களின் உடலில் சுரக்கும் ஒருவித வெள்ளைத் திரவத்தைக் கொண்டு தங்களின் எல்லைகளை அவை தீர்மானிக்கின்றன. அதற்குள் எந்த உயிரினத்தையும் அவ்வளவு எளிதில் அவை அனுமதிப்பதில்லை. பல சண்டைகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் இதுவே ஆரம்ப காரணமாகவும் அமைந்து விடுகிறது.

கழுதைப்புலிகளின் ஒவ்வொரு சத்தத்துக்கும் ஒரு அர்த்தத்தை வைத்துள்ளன. அவற்றின் எல்லைக்குள் ஏதேனும் உயிரினம் வந்துவிட்டால் ஒருவிதமான வித்தியாச ஒலியை எழுப்புகின்றன. "எல்லைக்குள் புதிதாக ஒருவன் வந்திருக்கிறான் இரை காத்திருக்கிறது" என்று அர்த்தம். சிங்கமாக இருந்தாலும் சிறுத்தையாக இருந்தாலும் மொத்த கழுதைப் புலிகளும் ஒன்றாகச் சேர்ந்து விரட்டி விடுகின்றன. பெண் கழுதைப்புலிகள் எதற்கும் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும். சில நேரங்களில் மிகப் பெரிய சண்டைகளே நிகழும். கழுதைப்புலிகளின் எதிரிகளில் ஒன்று சிங்கம். ஆனால், சிங்கத்துக்கு இருக்கும் ஒரே எதிரி கழுதைப்புலிதான்.

சிங்கங்கள் வேட்டையாடுவதற்கென்று தனி அடையாளத்தை வைத்திருக்கின்றன. ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் எடுத்து வைக்கும். இந்த நேரத்தில் கழுதைப்புலிகளின் வேலையே சிங்கத்தை வேவு பார்ப்பதுதான். சிங்கம் இரையைத் துரத்துவதில் இருந்து, அதை வேட்டையாடுவதை மறைந்திருந்து பார்த்துக்கொண்டேயிருக்கும். சிங்கம் இரையை வேட்டையாடியதும் கழுதைப்புலிகளின் வேலை ஆரம்பமாகும். அதுவரை சிங்கத்தைப் பின் தொடரும் கழுதைப்புலிகள் சிங்கம் இரையை வேட்டையாடியதும், தன்னுடைய மொத்த குழுவையும் சத்தம் எழுப்பி வரவழைக்கும். சிங்கத்துக்குக் அவை கொடுக்கும் முதல் எச்சரிக்கை ஒலி அதுதான். அந்த ஒலியைக் கேட்கிற மொத்த கழுதைப்புலிகளும் சிங்கம் இருக்கும் பகுதிக்கு வந்து விடுகின்றன. சிங்கம் பொதுவாக தனியாக வேட்டையாடும், வேட்டையை முடித்ததும் அந்த இடத்திலேயே இரையை உண்ண ஆரம்பிக்கும். இரை சிக்கியதும் அதை உண்பதிலேயே சிங்கம் கவனம் செலுத்தும். அந்த நேரத்தில் மொத்த கழுதைப் புலிகளும் சிங்கத்தைச் சுற்றி வளைத்து விடுகின்றன. என்னதான் சிங்கம் காட்டு ராஜாவாக இருந்தாலும் 80 கழுதைப்புலிகளிடம் சிக்கினால் அச்சமடையும். அதனால், முடிந்தவரை தன் எதிர்ப்பைக் காட்டலாம். ஆனால், அவற்றுடன் சண்டை போட முடியாது. "கழுதைப்புலிகளிடம் சிக்கி உயிரை விட்ட சிங்கம்" என்கிற அவப்பெயரை சுமக்க அவை தயாரில்லை. எனவே, துரத்திப் பிடித்து வீழ்த்திய உணவை வேறு வழியின்றி கழுதைப்புலிகளிடம் விட்டு விட்டுச் சென்று விடுகின்றன. கடைசியில் கழுதைப்புலிகளின் சூழ்ச்சி வென்று விடுகிறது. இங்கிருந்து தான் சிங்கங்களுக்கு கழுதைப்புலிகளுக்கும் இடையேயான போர் தொடங்குகிறது.

ஆனால், இதன் பிரதிபலிப்பு வேறு விதமாக இருக்கும். இரையைப் பறிகொடுத்த சிங்கங்கள் தனியாக இருக்கும் கழுதைப்புலிகளை கொன்று விடுகின்றன. சிங்கத்தை எதிர்த்து நிற்க முடியாத கழுதைப்புலிகள் தனியாக இருக்கும் சிங்கங்களின் குட்டிகளை வேட்டையாடி விடுகின்றன. இதே நிலைதான் சிறுத்தைகளுக்கும். எவ்வளவு தான் பலவீனமான விலங்காகக் கழுதைப்புலி இருந்தாலும் கூட்டமாய் சேரும்போது அசுர பலம் பெற்று விடுகின்றன. சிறுத்தைகளும் சிங்கங்களும் இன்றளவும் பயப்படும் விலங்கு என்றால் அது கழுதைப்புலிகளுக்கு மட்டும்தான்.

கழுதைப்புலிகளாக இருப்பது சுலபம், இங்கே சிங்கமாய் இருப்பது தான் பிரச்சினையே!



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

வைரமுத்தர் தான் பேசுகிறேன். நேற்று ஒரு செய்தியைப் பார்த்தேன். குமுழமுனையிலுள்ள பாடசாலை ஒன்றின் மதில் மழைக்கு இடிந்து வீழந்து விட்டதாக அச் செய்தி காணப்பட்டது. அந்த மதில் சுவரானது அண்மையிலே தான் கட்டப்பட்டதாம். அதுவும் "கம்ரெலிய" திட்டத்தில் அரச நிதி ஒதுக்கீட்டில் நாடாளுமன்ற உறுப்பினராகிய சாந்தி, ஶ்ரீதரன், றிசாட் ஆகியோருக்குக் கிடைத்த ஒதுக்கீட்டில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உண்மையாவென நானறியேன்.

தற்போது அந்த மதில் உடைந்து வீழ்ந்து கிடக்கிறது. கட்டட ஒப்பந்தக்காரனும் தனக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை வசூலித்துக் கொண்டு போயிருப்பான். அப்போ இதற்கு யார் பொறுப்பு? அரச பணத்தை செலவு பண்ணும்போது அந்தப் பொறுப்பை யார் எடுக்க வேண்டியது? அல்லது கவனிக்க வேண்டியது?

இது போல கோடிக்கணக்கான பணம் கம்ரெலியாவினூடாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை மதில்களும், கட்டடங்களும் இது போல இடிந்து வீழப்போகின்றனவோ? அந்த நிதி மூலம் போடப்பட்ட எத்தனை தெருக்களில் குழிவிழப் போகின்றனவோ தெரியாது!

ஆனால் கம்ரெலியா பலரைப் பணக்காரர்கள் ஆக்கியிருக்கிறது என்று மட்டும் தெரியும். "சும்மா கிடைத்தால் பிரசாதத்தை எங்கோ எங்கெல்லாம் பூசுவார்களாம்." என்று எம் ஊர் கோயில் பிரசாத மேசையடியில் அடிக்கடி சொல்லுவார்கள். அது போல கம்ரெலியாத் திட்டத்தில் கிடைத்த நிதியை பல இடங்களில் அநாவசியமாகச் செலவிட்டிருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தில் சேதமடைந்த கூரைக்கு என ஒரு ஒதுக்கீடு இருந்தது. சொன்னால் வெட்கம். அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பக்கூடாது என்ற கோதாவில் நல்ல கூரைகளை எல்லாம் பிரித்துப் புதியதாக இட்டிருப்பது வேதனையல்லவா?

பாருங்கள் அரசியல் படுத்தும் பாட்டை மக்களே! இந்த வைரமுத்து வாத்தியார் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறேன். பல சத்தியங்களைச் செய்து கொண்டு பதவிக்கு வருகிறார்கள். பதவி கிட்டியதும் அவர்கள் வாய் சொல்லுகள் எங்கு போகின்றன என்பது அறியாத புதிர். அரச பணம் என்றால் அது மக்கள் சொத்தல்லவா? மக்கள் பொதுச் சொத்தை எப்படிப் பயனளிக்கும் விதத்தில் உபயோகிப்பது என்று நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கும் தெரியவில்லை. அதனைப் பெற்றுக் கொடுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தெரியவில்லை.

புதிய ஜனாதிபதி வந்துவிட்டார். பல அரசியல்வாதிகளின் பொட்டுக் கேடுகள் எல்லாம் புறத்தில் வரப்போகிறதே! ஐயகோ! மன வருத்தமாக இருக்கிறது. வினை விதைத்தவர்கள் வினை அறுக்கப் போகிறார்கள். தற்போது கடந்த அரசில் பல பதவிகளில் இருந்தவர்கள் நாட்டைவிட்டு ஓடிப் போய்விட்டதாகவும் தகவல் உண்டு. எமது அரசியல்வாதியான அம்மா ஒருவரும் ஓடியதாகச் செய்திகள் உண்டு. உண்மையோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போமே!

# கலைத்து விடுங்கள் கனவுகளை! தகர்த்தெறியுங்கள் கற்பனைக் கோட்டைகளை!



ஏறத்தாழ எல்லா மனிதர்களும் கனவுகளையும், கற்பனைக் கோட்டைகளையும் நெஞ்சில் சுமந்தவர்களாய்த் திரிந்து கொண்டிருக்கின்றனர்.

கனவு காண்பதே வாழ்க்கை வளர்ச்சிக்கு அடிப்படை என்று இன்று பரவலாகப் போதிக்கப்படுகிறது. அந்த உபதேசத்தைக் கேட்டு அவர்கள் மேலும் மேலும் கனவுச்சுமைகளைத் தங்களுக்குள் அடுக்கிக் கொள்கிறார்கள்.

பாவம், அதனால் அவர்கள் ஓர் அந்தகாரமான பள்ளத்தில் அமிழ்ந்து கொண்டிருப்பது அவர்களுக்கும் தெரிவதில்லை. அவர்களுக்குப் போதிப்பவர்களுக்கும் புரிவதில்லை.

எதிர்காலத்தில் அப்படி ஆக வேண்டும் இப்படி ஆக வேண்டும் என்று கனவு கண்டு, அக்கனவை நிறைவேற்றுவதற்காக நிகழ்காலத்தைப் பலி கொடுத்து விடுகிறார்கள். நிகழ்கால வாழ்வை வாழாமலேயே தவறவிட்டு விடுகிறார்கள். ஒட்டுமொத்த வாழ்க்கையும் ஒரு கனவாகப் போய்விடக் கூடியது என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே" என்று மானுட வாழ்வைக் குறித்துப் பட்டினத்தார் பகர்கிறார்.

பாரதி, மனித வாழ்வைக் கனவுக்குள் கனவு என்கிறான்!

"உலகெ லாம்ஓர் பெருங்கன(வு) அஃதுளே
உண்(டு) உறங்கி இடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கைஓர்
கனவினும் கனவு ஆகும்..."

கனவுக்குள் கனவாகிய வாழ்க்கைக்குள் மீண்டும் "கனவு காணுங்கள்" என்று கூறுவது வேடிக்கையாய்த் தெரிகிறது. வாழ்வைக் கனவென்று புரிந்து கொண்டவர்கள், ஒரு கட்டத்தில் சட்டென்று ஆன்ம விழிப்பைப் பெற்றுவிட முடியும்.

ஆனால், கனவாகிய வாழ்க்கைக்குள் கனவு கண்டு கொண்டிருப்போர் ஆன்ம விழிப்பு பெறுவதற்குரிய அத்தனை சாத்தியக் கூறுகளையும் இழந்தவர்களாகிறார்கள். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு கனவுகளால் நிரம்பியிருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கையின் சிக்கல்களுக்குள் சிக்குண்டவனாகிறான் சிதறுண்டு போகிறான்.

இவர்களைத்தான் வள்ளுவன், "ஒரு போதும் வாழ்வ(து) அறியார் கருதுப கோடியும் அல்ல பல" என்று கூறுகிறான்.

ஆம், இவர்கள் ஒரு போதுகூட வாழ்ந்தறியாதவர்கள் ஆனால் வாழ்க்கையை எப்படியெல்லாம் எதிர்காலத்தில் வாழ வேண்டுமென்று கோடிக்கணக்கான எண்ணங்களால் மனத்துக்குள் கோட்டை கட்டி வைத்திருப்பர்.

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடிநினைந்(து) எண்ணுவன

என்று ஔவை கூறுவது போல் வாழ்க்கை "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்பதாக மிக எளிதாகவே அமைந்துள்ளது. மனிதன் தன் எண்ணங்களாலேயே அதில் சிக்கலைத் தோற்றுவித்துச் சாகும் வரை சஞ்சலப்படுபவனாக, சங்கடம் நிறைந்தவனாக மாறிப்போகிறான்.

கனவு ஏதும் இல்லாமலேயே உலகியல் வாழ்வில் உயர்நிலை எய்த முடியும், எய்தியிருக்கிறார்கள். தன் கடமையாக வந்து சேர்ந்தவற்றையெல்லாம் நிறைவுடன் ஆனந்தமாகச் செய்பவன் இயல்பாக அடுத்தடுத்த நிலைக்குப் போவான்.

அப்படி ஒருவேளை போக முடியாவிட்டாலும் அதற்கான தவிப்பு அவனிடம் இருக்காதென்பதால், அவன் எப்போதும் தன் ஆனந்தநிலை பாதிக்கப்படாமல் வாழ்வை முழுமையாக வாழ்வான்.

ஆனால், கனவுகளைச் சுமந்துகொண்டிருப்பவனோ தன் கனவு நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் சிக்கலிலேயே மாட்டிக் கொள்கிறான். கனவு நிறைவேறிவிட்டது என்று மனம் திருப்தி கொள்வதில்லை. மேலும் புதிய கனவுகள் தோன்றும்.

"அண்டமெல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செல்லவே நினைவார்" என்று தாயுமானவர் சொன்னது சரியான உளவியல் கூற்று. கனவு கண்டு பழக்கப்பட்ட மனம் நிச்சயம் புதிய கனவை உருவாக்கி அதனை நிறைவேற்றுவதற்காக அடுத்த போராட்டத்தில் குதித்துவிடும்.

இப்படிப் போராட்டமாகவே வாழ்க்கை போய்க் கொண்டிருப்பதால் உண்மையான வாழ்க்கையனுபவத்தை இவர்கள் ஒரு போதும் அறியாதவராகவேயிருக்கிறார்கள்.

நிறைவேறாத கனவுகள் வாசனைகளாகச் சேர்ந்து சேர்ந்து பிறவிக்குக் காரணமாகின்றன. எத்தனையோ பேர் வாழ்க்கையில் தங்கள் கனவுகளை நிறைவேற்ற முடியவில்லையே என்னும் ஏக்கத்திலேயே இறுதியாகக் கண் மூடுகிறார்கள். இந்த ஏக்கமே அவர்களை மறுபடியும் பிறவிக்குள் செலுத்துகிறது.

நான் கூறுவதைச் சற்று ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். கனவு என்ற வார்த்தையையும் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

"உயர்ந்த விஞ்ஞானப் படைப்புகளெல்லாம் அந்தந்த விஞ்ஞானிகள் கண்ட கனவுகளால்தானே நிறைவேறியிருக்கின்றன் கனவுகளே கூடாதென்றால் உலகத்தின் வளர்ச்சி பாதிக்கப்படாதா" என்று நீங்கள் கேட்கலாம். விஞ்ஞானிகள் போன்ற படைப்பாளிகளின் கனவுக்கும் மற்றவர்களின் கனவுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

விஞ்ஞானிகளின், கவிஞர்கள் போன்றோர் தாங்கள் காணும் கனவில் தங்களைக் கரைத்துவிடுகிறார்கள். அவர்களின் அகங்காரம் அங்கே இருப்பதில்லை. அதைக் கனவு என்று கூறுவதைவிடத் "தேடல்" என்று சொல்வதே சாலப் பொருந்தும். அது அவர்களின் இயல்பு நிலை.

அதனால் அவர்களின் ஆனந்தம் மேலும் மேலும் பெருகுமே தவிர குறைவதில்லை. அந்தக் கனவில் போராட்டம் இருக்காது ஒருவிதத் தியானத் தன்மையே மிளிரும்.

ஆனால் மற்றவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் கனவோ பெரும்பாலும் அவர்களின் இயல்புத் தன்மைக்கு விரோதமானதாகவே அமைந்து விடுகிறது. அவர்களின் ஆனந்தவாசலை அடைத்துவிடுகிறது. ஒருவன் சுமந்துகொண்டிருக்கும் கனவையே இன்னொருவனும் சுமந்து கொண்டிருப்பானானால் இருவருக்குமிடையே பகைமை வளர்கின்றது. அரசியல் தலைவர்கள் தங்களைப் போல் "நாற்காலிக்கனவு" இல்லாதவர்களையே தங்களுக்கு அடுத்த நிலையில் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். அப்படி அந்தக் கனவு இருக்குமானால் அவர்களை அமுக்கி விடவும், தலையெடுக்கவிடாமல் செய்து விடவுமே ஒவ்வொரு தலைவனும் முயல்கிறான்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் பார்ப்போமானால், கனவுகள் எதிர்மறை விளைவுகளைத்தான் ஏராளமாக ஏற்படுத்தியிருக்கின்றன.

ஒருவன் காவல்நிலையத்திற்குச் சென்று, "என் மனைவியைக் கண்டுபிடித்துக் கொடுங்கள்" என்று கேட்டான்.

காவல் அதிகாரி, "உன் மனைவி எப்போது காணாமல் போனாள்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. என் வருங்கால மனைவியைக் கண்டு பிடித்துக் கொடுங்கள்" என்றான். அந்தப் போலீஸ் அதிகாரியிடம்.

இப்படித்தான், எதிர்காலக் கனவுகளைச் சுமப்பவர்கள் நிகழ்காலத்து இன்பப் பாதையைத் தவற விட்டு விட்டு வேறொங்கோ போய்விடுகிறார்கள்.

ஆதலால் -
கனவுகளைக் கலைத்து விடுங்கள்!
கற்பனைக் கோட்டைகளைத் தகர்த்துவிடுங்கள்!

நிகழ்காலத்தில் மனத்தை நிறுத்தி அதனைப் பூரணமாக அனுபவியுங்கள். வாழ்க்கை உங்களுக்கு வசப்பட்டு எப்போதும் ஆனந்த புஷ்பங்களால் அரிச்சிக்கும்.

## ஜென் கதை



இறந்து போன அந்த ஜென் துறவி பற்றி கண் பார்வையற்ற ஒரு அபிமானி சொன்னார்:

**"ஒருவரை அவரது வெற்றிக்காகவோ, வேறேதோ சந்தோஷமான நிகழ்வுக்காகவோ பாராட்டுகிறவர்கள் குரலில் தொக்கி நிற்கும் சிறிய பொறாமை உணர்வை என்னால் உணர்ந்து கொள்ள முடியும். துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் சொல்கிறவர்கள் குரலில் மறைந்திருக்கும் குரூர சந்தோஷத்தையும் நிம்மதியையும் கூட என்னால் உணர முடியும். ஆனால் அந்தத் துறவியின் வருத்தத்தில் பிசகில்லாத வருத்தமும், பாராட்டில் மனந்திறந்த பாராட்டையும் மட்டுமே நான் உணர்ந்திருக்கிறேன்".**

**மனித மனத்தைப் பற்றிய சகப்பான உண்மை இது.**

**ஐம்புலன்களின் அடக்கத்தில் ஆறாவது அறிவு அதீத சக்தியைப் பெரும் என்று ஞானிகள் சொல்வதுண்டு. ஒவ்வொரு புலனின் அடக்கமும் ஐந்தில் ஒரு பங்கு அதிக அறிவைத் தரும். கண் பார்வையற்ற பலருக்கு இந்தப் பகுத்தறியும் திறன் இருப்பதைப் பார்த்திருக்கலாம் நாம்.**

**பார்வையின்மை ஊனமல்ல, ஞானம்.**

# ஊடுருவி உலகநாதன்



சமுர்த்திதிட்டம் முழுமையாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்குபோய்ச் சேருகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். இதில் கிராமசேவகர்களுக்கு அணைவான ஆட்களுக்கு கண்டிப்பாக சமுர்த்தி போய்ச் சேருகிறது. வசதிபடைத்தவர்களுக்கும் சமுர்த்திபோய்ச் சேர்வதால் தான் வசதி படைக்காத மக்களுக்கு முழுமையாக சமுர்த்தி போய்ச் சேர்வதில்லை.

5 இலட்சம் ரூபாய் லோனை எடுத்தால் 5 ஆயிரம் ரூபாவை கழித்துக் கொடுக்கிறார்கள் என்று சமுர்த்திப் பயனாளிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். 5 இலட்சம் ரூபாய் லோனை எடுக்கிறார்கள் என்றால் அந்தப் பணத்தை வைத்து ஏதாவது தொழில் செய்து வருமானம் ஈட்டுவதற்காக என்பது சமுர்த்திக்காரர்களுக்குத் தெரியும். தெரிந்தும் முழுமையாகப் பணத்தை வழங்காமல் ஒரு பிடிபிடிப்பது என்பது பிறகு எதற்கு லோனை வழங்குகிறார்கள் என்று சமுர்த்திப் பயனாளிகள் கேட்கிறார்கள்.

அரசு சமுர்த்தித்திட்டத்தை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சமுர்த்தித் திட்டத்தின் ஊடாகப் பின்தங்கிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பலதிட்டங்களை அமுல்படுத்துகிறது. ஆனால் சமுர்த்தி அதிகாரிகள் என்ன செய்கிறார்கள். அவர்க ளால் இன்று சமுர்த்தி பின்னுக்குத்தான் செல்கிறது.

பொதுமக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய சக்தியாகச் சமுர்த்தித் திட்டம் மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனைக் கடந்த காலத்தை விடவும் மேலும் பலப்படுத்தி முன்னெடுப்பதற்கு அரசாங்கம் பொறுப்புக்களைக் குறைவின்றி நிறைவேற்றுகிறது.

பொருளாதாரரீதியில் பலப்படுத்த வேண்டிய அனைத்துச் சமூகங்களையும் பலப்படுத்தும் திட்டங்களுக்கு அரசாங்கம் புதிய உயிரோட்டத்தையும், உற்சாகத்தையும் வழங்கியிருப்பதாகவும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சிறப்பான செயற்திட்டங்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள ஏழு மாவட்டங்களில் மட்டுமே சமுர்த்தித் திட்டம் வெற்றிகரமாக இயங்கி வருவதாகவும் வெற்றி பெறாத வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்காகத் துறையிலுள்ள அனைவரினதும் அறிவு, அனுபவம் மற்றும் பங்களிப்பை எதிர்பார்க்க வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசால் மக்களுக்கு வருகின்ற திட்டங்கள் முழுமையாகப் போய்ச் சேருகுது இல்லை. சமுர்த்திஉத்தியோகத்தர் என்று கோட்டு சூட்டோடு வெளிக்கிட்டவையள் சிந்தித்தால் அதாவது தமது கடமையைச் சரிவரச் செய்தால் யாழ்ப்பாணத்திலும் சமுர்த்தித் திட்டம் வெற்றியளித்திருக்கும். அவர்கள் சிந்திக்க எங்கநேரம்.

நடைமுறைதெரியாத அப்பாவிமக்கள் பேக்காட்டப் படுகிறார்கள். அவர்களுக்குச் சமுர்த்தித் திட்டம் தொடர்பில் முழுமையாக விளக்கம் அளிப்பதில்லை. இது தான் அரச நடைமுறை என்று திருப்பிக் கேட்பதற்குச் சக்தியில்லாத மக்கள் என்றைக்கும் சமுர்த்தியில் பயனடைய மாட்டார்கள்.

சமுர்த்தி வங்கியில் கணக்கைத் திறந்து பணத்தை வைப்பில் இட்டவர்களில் எத்தனைபேர் பயனடைந்துள்ளார்கள் என்று சொல்ல முடியுமா என்பது கேள்விக்குறியே.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டின் ஊடாகச் சமூகமேம்பாட்டைக் கருத்தில் கொண்டு சமுர்த்தித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. எனினும் இதன் மூலம் ஏழை எளிய மக்கள் ஏமாற்றப்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சமுர்த்தி வங்கிக்கும் வீட்டுக்கும் தினமும் அலையும் ஏழை மக்கள் இதனாலேயே பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சமுர்த்தி வங்கிகளில் நிதி மோசடிகள் கண்டறியப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சமுர்த்தி வங்கிகளில் பணியாற்றும் அலுவலர்கள் சிலர் மக்களின் பெயரைப் பயன்படுத்தி அவர்களின் சேமிப்பில் உள்ள நிதியைக் கடன் பெற்றுத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டும் உள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்படும் நிதியில் இவ்வாறு சட்ட விரோதமாக ஊழல் செய்வதும், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகாரிகளை மிரட்டும் செயற்பாடுகள் வேலியே பயிரைமேயும் செயற்பாடுகளுக்கு ஒப்பானது.

பல்வேறு தரப்புக்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதும் உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் எப்படி சமுர்த்தி பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவவுள்ளது.

சமுர்த்தித் திட்டம் வடக்கில் வெற்றியளிக்காதற்குக் காரணம் சில அதிகாரிகளே. இவர் கள் சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றிநிச்சயம்.

# சித்தர் கூறும் மழை பற்றிய சகுனங்கள்...!!!

மலைக்க வைக்கும் நம் முன்னோர்களின் சாதனை!!! குறிப்பாக
நம் சித்த முன்னோர்களின் அறிவை நினைத்தாலே வியக்க வைக்கிறது.
புலிப்பாணி ஆருடம் என்ற வானவியல் நூலில் புலிப்பாணிச் சித்தர்
சொன்ன அபூர்வ இரகசியங்கள்
கீழ்கண்ட சகுனங்கள் தோன்றினால் மழை வரும்.



1. தும்பி பறந்தால் தூரத்தில் மழை
2. தட்டான் தாழப் பறந்தால் மழை
3. அந்தி ஈசல் அடை மழை
4. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை.
5. தவளை கத்தினால் மழை
6. மாடு மயங்கி வானம் பார்த்தால் மழை
7. கொக்கு மேடேறினால் மழை
8. பகற்பொழுதில் சேவல் கூவி வானத்தைப் பார்த்தால் மழை
9. கழுதை காதை உயர்த்தினால் மழை
10. ஈசல் பறந்தால் மழை
11. புற்றிலே ஈசல் பறந்தாலும், மண்ணிலே கரையான் கூடினாலும் மழை
12. பாம்புகள் மரத்தில் ஏறினாலோ அல்லது திறந்த வெளியில் புணர்ச்சியில் ஈடுபட்டாலோ மழை
13. பசு மாடுகள் கன்றைத் தேடி வீட்டிற்கு ஓடினால் மழை.
14. பூனைகள் நிலத்தை பிராண்டினால் மழை
15. குழந்தைகள் அணைக்கட்டி விளையாடினால் மழை
16. மலைகள் நீல நிறமாக காட்சியளித்தால் மழை
17. குகைகள் பனிமூட்டத்தால் மறைக்கப்பட்டிருந்தால் மழை
18. ஓணான்கள் வானத்தைப் பார்த்தால், மரத்தில் ஏறி விளையாடினால் மழை
19. பூனை, எலி, பாம்பு முதலிய பிராணிகள் காரணமின்று அங்குமிங்கும் ஓடினால் மழை.
20. மயில்கள் நடனமாடினால் மழை
21. பசுக்கள் சூரியனையும் ,வானத்தையும் பார்த்தால் மழை
22. பச்சோந்திகள் மரத்தின் மீது அமர்ந்து தன் நிறத்தை மாற்றிக் கொண்டால் மழை
23. பசுக்கள் நிழலிடங்களை விட்டு நகர மறுத்தால் மழை
24. நாய்கள் வீட்டிற்கு வெளியே செல்ல மறுத்தால், வானத்தைப் பார்த்து குரைத்தால் மழை
25. சிட்டுக்குருவிகள் மண்ணில் புரண்டு விளையாடினால் மழை
26. மீன்கள் நீரில் துள்ளி விளையாடினால் மழை.
27. பறவைகள், மிருகங்கள் நுனிப்புல் உண்பதைக் கண்டால் மழை.
28. நீரின் சுவை மாறுதல், உப்பு நீர்த்துப் போதல், மோர் புளித்து போதல் நடந்தால் மழை.
29. இரும்பு பொருட்களிலிருந்து மாமிச வாடை வந்தால் மழை
30. சந்திரனைச் சுற்றி சிவப்பு நிற வளையம் காணப்பட்டால் அல்லது சந்திரனின் நிறம் கோழியின் கண் போன்று காணப்பட்டால் மழை.
31. வட கிழக்கில் மின்னல் தோன்றினால் மழை
32. மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரனிலிருந்து பிரதி சந்திரன் தோன்றினால் மழை
33. இரவு நேரங்களில் இடி முழங்கினால், பகல் நேரத்தில் மின்னல் அடித்தால், கிழக்கு திசையிலிருந்து குளிர்ந்த காற்று வீசினால் மழை.

நம் இயற்கையை ஆய்ந்தறிந்த இயற்கை ஞானிகளான சித்தர்களைப் போற்றி, அவர்கள் நமக்களித்த கட்டற்ற அறிவியலைக் காத்து, அவர்தம் வழி நடப்போம்.





# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

## டிசம்பர் 01 முதல் 07 வரை (கார்த்திகை 15 முதல் 21 வரை)

**கணித்தவர்**
ஜோதிட மாமணி,
முனைவர் முருகு பால முருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
இல. 19/13 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை 600026 தமிழ்நாடு, இந்தியா.
தொ.இல : 00917200163001, 9383763001

இவ்வார சுப முகூர்த்த நாட்கள்

01.12.2019 கார்த்திகை 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி உத்திராடம் நட்சத்திரம் அமிர்தயோகம் காலை 07.30 மணி முதல் 09.00 மணிக்குள் தனுசு இலக்கினம். வளர்பிறை

02.12.2019 கார்த்திகை 16 ஆம் தேதி திங்கட்கிழமை சஷ்டி திதி திருவோணம் நட்சத்திரம் அமிர்தயோகம் காலை 09.30 மணி முதல் 10.30 மணிக்குள் மகர இலக்கினம். வளர்பிறை

06.12.2019 கார்த்திகை 20 ஆம் தேதி வெள்ளிக்கிழமை தசமி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.00 மணி முதல் 10.30 மணிக்குள் மகர இலக்கினம். வளர்பிறை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | திருக்கணித கிரக நிலை | | |
| சந்திரன் | | | |
| கேது சனி குரு சுக்கி | சூரியன் | செவ்வாய் புதன் | |



**மேஷம்**

**மேஷம், அசுவனி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்.**

சிரிக்க சிரிக்க பேசி எல்லோரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் ஆற்றல் கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு குரு, சுக்கிரன் பாக்கிய ஸ்தானமான 9ல் சஞ்சரிப்பதால் தொழில் பொருளாதார நிலை மிகச் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடையின்றி வெற்றி கிட்டும். பணவரவுகள் சிறப்பாக இருப்பதால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். சொத்துக்கள் வாங்கும் எண்ணம் நிறைவேறும். உடல் ஆரோக்கிய பாதிப்புகள் நீங்கி அன்றாட பணிகளை சுறுசுறுப்புடன் செய்து முடிக்க முடியும். கணவன், மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். திருமண சுப காரியங்களுக்கான முயற்சிகளில் சாதகமான பலன்களை அடைய முடியும். சிவ வழிபாடும் முருக வழிபாடும் செய்வது உத்தமம்.

**வெற்றி தரும் நாட்கள் : 1, 2, 3, 4.**



**ரிஷபம்**

**ரிஷபம், கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்.**

பிறருக்கு உதவி செய்வதில் தன்னலம் கருதாது செயலாற்றும் பண்பு கொண்ட ரிஷப ராசி நேயர்களே, ஜென்ம ராசிக்கு 6ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் எந்தவித தடையையும் எதிர்கொள்ளக்கூடிய பலம் உங்களுக்கு கிடைக்கும். சூரியன் 7ல், குரு, சனி 8ல் சஞ்சரிப்பதால் பண விஷயத்தில் சிக்கனமாக இருப்பது. குடும்பத்தில் உள்ளவர்களிடமும் உற்றார் உறவினர்களிடமும் பேச்சில் நிதானத்தைக் கடைபிடித்து விட்டு கொடுத்து செல்வது உத்தமம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எடுக்கும் முயற்சிகளில் வெற்றி பெற எதிர்நீச்சல் போட வேண்டியிருக்கும். திருமண சுபகாரியங்களில் தடைகளுக்குப்பின் அனுகூலம் உண்டாகும். பண வரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் எதிர்பாராத உதவிகள் கிடைக்கப் பெற்று தேவைகள் பூர்த்தியாகும். தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்தால் குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் : 3, 4, 5, 6, 7.**



**மிதுனம்**

**மிதுனம் ,மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.**

நிதானமான அறிவாற்றல் இருந்தாலும் சமயத்திற்கேற்றார் போல குணத்தை மாற்றிக் கொள்ளும் குணம் கொண்ட மிதுன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5 ல் புதன், 6 ல் சூரியன், 7 ல் குரு சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்க கூடிய இனிய வாரமாக இவ்வாரம் இருக்கும். உங்களது செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். பணவரவுகள் சிறப்பாக இருக்கும். குடும்ப தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கடன்கள் படிப்படியாகக் குறையும். கணவன், மனைவியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒற்றுமை குறையாது. உற்றார் உறவினர்களை அனுசரித்து நடந்து கொள்வர். விநாயகர் வழிபாடும் பார்வதி தேவி வழிபாடும் செய்வது மிகவும்,நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் 5, 6, 7.**



**கடகம்**

**கடகம் புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

எந்த ஒரு காரியத்திலும் தீர ஆலோசித்து செயல்படும் பண்பு கொண்ட கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 4 ல் புதன், 6ல் சனி, கேது சஞ்சரிப்பதால் பல்வேறு வகையில் ஏற்றத்தை தருவது மட்டுமின்றி தொழில் வியாபாரத்தில் லாபகரமான பலன்களை அடைவீர்கள். எந்தவித எதிர்ப்புகளையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். சிலருக்கு புதிய தொழில் தொடங்க கூடிய யோகம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அமையும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்தினால் அன்றாட பணிகளில் திறம்பட செயல்பட முடியும். துர்கை வழிபாடும் முருக வழிபாடும் செய்தால் சகல நன்மைகளும் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் 1, 2.**



**சிம்மம்**

**சிம்மம் மகம், பூரம். உத்திரம் 1 ஆம் பாதம்.**

இருந்த இடத்திலிருந்தே அனைவரையும் ஆட்டி வைக்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 3 ல் செவ்வாய், 5 ல் குரு, சுக்கிரன், 11 ல் ராகு சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகளில் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபங்களை அடையும் யோகம் உண்டாகும். திருமண வயதை அடைந்தவர்களுக்கு சுபகாரியங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புகள் அமையும். உடல் ஆரோக்கியம் ஓரளவுக்கு சிறப்பாகவே இருக்கும். அன்றாட பணிகளில் திறம்பட செயல்பட முடியும். புத்திர வழியில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உற்றார் உறவினர்களின் வருகை மகிழ்ச்சி அளிப்பதாக அமையும். சிவ வழிபாடும் விநாயகர் வழிபாடும் செய்வது உத்தமம்.

**வெற்றி தரும் நாட்கள் 1, 2, 3, 4.**



**கன்னி**

**கன்னி உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்.**

பேச்சிலும் செயலிலும் முடிந்தவரை பிறர் மனதை புண்படுத்தாமல் செயல்படும் கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி புதன் 2ல் சஞ்சரிப்பதும், சூரியன் 3ல், சுக்கிரன் 4ல் சஞ்சரிப்பதும் வலமான பலன்களை தரும் அமைப்பாகும். எதிர்பாராத உதவிகள் கிடைத்து எல்லா வகையிலும் ஏற்றங்களை அடைவீர்கள். எடுக்கும் முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். அசையும் அசையா சொத்துக்கள் வாங்கும் எண்ணமும் நிறைவேறும். உடல் ஆரோக்கியத்தில் மந்தநிலை சோர்வு போன்றவை ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பு இருக்காது. குடும்பத்தில் ஒற்றுமை ஓரளவு சிறப்பாக இருக்கும். உற்றார் உறவினர்களை அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினைகளை தவிர்க்கலாம். விநாயகர் வழிபாடும் முருக வழிபாடும் செய்தால் சிறப்பான பலன்களை அடையலாம்.

**வெற்றி தரும் நாட்கள் 3, 4, 5, 6, 7.**



**துலாம்**

**துலாம் சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.**

வசீகர தோற்றமும், உறுதியான பேச்சாற்றலும் கொண்ட துலா ராசி நேயர்களே, உங்களுக்கு ஜன்ம ராசியில் புதன், 3ல் சனி, கேது சஞ்சரிப்பதால் உங்களுடைய செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். சூரியன் 2ல் இருப்பதால் முன் கோபத்தை குறைத்துக் கொள்வது, பேச்சில் நிதானத்துடன் இருப்பது நல்லது. உற்றார் உறவினர்களிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. கணவன், மனைவி வீண் வாக்குவாதங்களை தவிர்த்து விட்டு கொடுத்து நடந்து கொள்வது நல்லது. தடைப்பட்ட சுபகாரியங்கள் எளிதில் கைகூடி குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் எதிர்பாராத உதவிகள் கிடைக்கப்பெற்று குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

**வெற்றி தரும் நாட்கள் 5, 6, 7.**



**விருச்சிகம்**

**விருச்சிகம் விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் தளராது, அயராது முயன்று பாடுபடும் குணம் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2ல் குரு, சுக்கிரன் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி, தாராள தனவரவுகள் உண்டாகும். ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் உணர்ச்சிவசப்படாமல் எதிலும் நிதானமாக இருப்பது நல்லது. எடுக்கும் முயற்சிகளில் எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். உங்கள் ராசிக்கு 2ல் சனி, கேது சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்திலும் உணவு விஷயத்திலும் கவனமுடனிருப்பது நல்லது. கணவன், மனைவி இடையே உண்டாக கூடிய வாக்குவாதங்களால் குடும்பத்தில் நிம்மதி குறைவு உண்டாகும். பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது, உற்றார் உறவினர்களை அனுசரித்து செல்வது உத்தமம். சிவ வழிபாடும் அம்மன் வழிபாடும் மேற்கொண்டால் நன்மைகள் பல உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் 1, 2.**



**தனுசு**

தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

பல சாதனைகளைப் படைக்கும் வல்லமையும், தற்பெருமையும் அதிகம் கொண்ட தனுசு ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சுக்கிரன், லாப ஸ்தானமான 11ல் செவ்வாய், புதன் சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாக ஓரளவுக்கு மேன்மைகளை அடைய முடியும். எதிர்பாராத உதவிகள் சில கிடைத்து உங்களுடைய அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். கணவன், மனைவி வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் ஒற்றுமை ஓரளவுக்கு சிறப்பாக இருக்கும். உடனிருப்பவர்களையும் உற்றார் உறவினர்களையும் அனுசரித்து செல்வது நல்லது. ஆடம்பர செலவுகளை குறைத்து கொண்டால் கடன்கள் ஏற்படுவதை தவிர்க்கலாம். சிறு சிறு மருத்துவ செலவுகள் செய்ய நேரிடும் என்பதால் ஆரோக்கியத்தில் சற்று அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபட்டால் சகல நன்மைகள் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் 3, 4, 5.**

## மகரம்

**மேஷம், அசுவனி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்.**

எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலும், வாழ்க்கையில் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் அதை பொருட்படுத்தாத குணமும் கொண்ட மகர ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6ல் ராகு, 10ல் செவ்வாய், புதன், 11ல் சூரியன் சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். தொழில் வியாபார ரீதியாக பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். தொழிலாளர்களும் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். பணவரவுகளில் இருந்த நெருக்கடிகள் குறையும். கடன்களும் குறையும். பணம் கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாக இருக்கும். சனிப்ரீதியாக விநாயகரையும் ஆஞ்சநேயரையும் வழிபட்டால் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் 1, 2, 3, 4.**

## கும்பம்

**கும்பம் அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்.**

அன்பும் சாந்தமும் அமைதியான தோற்றமும் கொண்டிருந்தாலும் நியாய அநியாயங்களை பயமின்றி எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்ட கும்ப ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சனி, குரு, சுக்கிரன், கேது சேர்க்கைப் பெற்று லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பல்வேறு வகையில் முன்னேற்றங்களை எளிதில் அடைவீர்கள். சூரியன் 10ல் சஞ்சரிப்பதால் உங்களுடைய மதிப்பும் மரியாதையும் மேலோங்கும். நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். தொழில் ரீதியான போட்டிகளை சமாளித்து முன்னேறி விடுவீர்கள். உடனிருப்பவர்களின் ஆதரவும் சிறப்பாக இருக்கும். துர்கையம்மனை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் 3, 4.**

## மீனம்

**மீனம் பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.**

தயாள குணமும், பொறுமையும் தன்னம்பிக்கையும் கொண்டு திறமைசாலிகளாக விளங்கும் மீன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 8ல் செவ்வாய், புதன், 10ல் குரு, சனி சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாக நெருக்கடி, தேவையற்ற அலைச்சல் உண்டாக கூடிய காலம் என்பதால் எதிலும் பொறுமையுடன் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சோர்வு ஏற்பட்டு அன்றாட பணிகளை செய்து முடிப்பதில் சிரமம் ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் தடைகளுக்கு பின்பே அனுகூலம் உண்டாகும். பணவரவுகள் தேவைகேற்றபடி அமைந்து தேவைகள் பூர்த்தியாகும். உற்றார் உறவினர்களிடம் விட்டு கொடுத்து செல்வதன் மூலம் அவர்களால் அனுகூலப்பலனை அடைய முடியும். சிவ வழிபாடும் முருக வழிபாடும் செய்து வந்தால் சகல நன்மைகளும் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் 1, 2, 6, 7.**

### கிரக மாற்றம்

- **5-12-2019 விருச்சிகத்தில் புதன் காலை 10.34 மணிக்கு**

**இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்**

- **மகரம் 30-11-2019 பகல் 02.30 மணிமுதல் 03-12-2019 அதிகாலை 00.55 மணி வரை.**
- **கும்பம் 03-12-2019 அதிகாலை 00.55 மணிமுதல் 05-12-2019 பகல் 01.20 மணி வரை.**
- **மீனம் 05-12-2019 பகல் 01.20 மணிமுதல் 08-12-2019 அதிகாலை 01.30 மணி வரை.**

எதிரி இல்லை
என்றால்
நீ இன்னும்
இலக்கை நோக்கி
பயனிக்கவில்லை
என்று அர்த்தம்

# அரசியலில் இதெல்லாம் சகஜமுங்க..!

துருவன்




"எனக்கு தான் வாக்கு போடுவதாக வாக்குறுதி தந்துவிட்டு மக்கள் ஏமாற்றி விட்டார்கள்"

"எங்களுக்கு என்னென்னவோ செய்வதாக போன தேர்தலில் வாக்குறுதி அளித்துவிட்டு நீங்கள் எங்களை ஏமாற்றவில்லையா"



"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்று முழங்கிய எங்கடை தலைவர் இப்போ என்ன செய்கிறார்"

"உயிர் கட்சிக்கு உடல் பதவிக்க என்று கட்சி மாறி அமைச்சராகி விட்டார்"



" ஏன் நம்ம தலைவர் ஒரு ஓரமாய் ஒதுங்கி நிற்கிறார்..

தேர்தலில் தோற்றதால் பேரம் பேசும் சக்தியை இழந்து விட்டாராம்




தலைவர் ஜனநாயகத்தில் தான் நம்பிக்கை இழந்து விட்டதாக பேட்டி கொடுத்திருக்கிறாரே..!

ஓ... தன்னிடம் கை நீட்டி காசை வாங்கி விட்டு, வேறு ஒருவருக்கு வாக்களித்து ஏமாற்றி விட்டார்களாம். அது தான் ஜனங்களே..



அமைச்சர் ஐந்து வருஷத்துக்கு முன் கொடுத்த வாக்குறுதிகளை இப்பவும் சொல்கிறாரே!

ஆமாம்! அவர் ஒருக்கா சொன்ன சொன்னது தான் ஒரு போதும் வாக்கு மாறமாட்டார்!



"அடுத்த தேர்தலில் நம்ம தலைவர் உண்டியல் சின்னத்தில் நிற்கப் போகிறாராம்"

எதுக்கு?

"வாக்கு கேட்டு போகும் போது உண்டியலையும்கொண்டு போய் தேர்தல் நிதியையும் சேர்க்கலாமல்லவா?"



# அங்கதன் பதில்கள்

❓ ஆட்சி மாறிவிட்டதே பொதுதேர்தலுக்க முன் மாற்றம் ஏதும் ஏற்படுமா?
திருமதி.பாக்கியலட்சுமி அச்சுவேலி
✍ கட்சி மாறுவோர் அதிகரிப்பர்

❓ அதாவுல்லா மீது மனோ கனேசன் தண்ணீர் எத்தியது குறித்து என்ன சொல்கிறீர்கள்?
து.சதாசிவம் - மஸ்கெலியா
✍ பாதகம் செய்பவரைக் கண்டால் பயங் கொள்ளல் ஆகாது பாப்பா மோதி மிதித்து விடு பாப்பா அவர்முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்று பாரதி பாடியது சரியானது தான் என நினைக்கிறேன்

❓ மாவை புதிய வியூகம் அமைக்கப் போகிறாராம் என்னவாக இருக்கும் ?
த.சிவனேசன் கேணியடி கொக்குவில்
✍ மதியூகிகளால் தான் வியூகம் அமைக்க முடியும்

❓ கூட்டமைப்பின் எதிர்காலம் எப்படி இருக்கும்?
க.பிரான்ஸிஸ் சேவியர் – குருநகர்
✍ கூடாத அமைப்பாக இருக்கும் அதாவது என்றைக்கும் ஒற்றுமையாய் கூடாத அமைப்பகவே இருக்கும்

❓ சொல்லத்தான் நினைக்கிறேன் ஆனால் சொல்ல முடியவில்லை என சிவாஜிலிங்கம் எதனை நினைக்கிறார்?
செ.நிலானி சாவகச்சேரி
✍ தன் அரசியல் எதிர்காலத்தை பற்றிதாக இருக்கலாம்

❓ கடந்த காலத்தில் அரச திட்டங்களால் மக்கள் மேன்மையடைந்தார்களா? புதிய பணக்காரர்கள் தான் உருவானார்களா?
போ.குணதாசன் - மாவடி
✍ பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் (இலங்கையுட்பட்ட) ஜனநாயகம் புதிய பணநாயகர்களையே உருவாக்குகிறது

❓ கம்பெரலியா நீடிக்குமா, என்ரர்பிறைசஸ் சிறிலங்கா போல் செத்து விடுமா?
பொ.பார்த்தீபன் புதுமாத்தளன்
✍ கம்பெரலியா புதிய அரசுக்கு எந்த வகையிலாவது லாபகரமானதா என்பதை பொறுத்த விடயம் அது மக்கள் நலனை விடவும் அரசின் நலன் அடிப்படையாகக் கொண்டதே அரச திட்டங்கள்

❓ இனியும் மக்கள் தம்மை நம்புவாடகள் என்ற நம்பிக்கையில் சுமந்திரன் கட்சியில் இயங்குவாரா?
பா.செல்வம் மருதங்கேணி
✍ மக்களை ஏமாற்றி அரசியல் நடத்தலாம் என்ற நம்பிக்கை உடையவர்கள் எப்படியும் இயங்கலாம் தானே

❓ பாம்பின் கால் பாம்பறியும் என்று எனத் தைச் சொன்னார்கள்?
சே.முத்தையா பரந்தன்
✍ காலில்லாமல் நகரும் பாம்பின் காலை பாம்பை தவிர எவரும் அறியார் உள் நோக்கத்துடன் இயங்கும் அரசியல்வாதியின் மனதை இன்னொரு அரசியல் வாதியே அறிவர்

❓ அதிகரித்து வரும் போதைப் பாவனைகள் தற்கொலைகள் வாள்வெட்டுக்கள் சமூக அராஜகங்கள் இவற்றுக்க ஒன்றோடு ஒன்று தொடர்பு உள்ளதா?
ஏ.டிலக்சன் வவுனியா
✍ எல்லாமே மனக்குழப்பம் மிக்க மந்த புத்தியால் நிகழ்த்தப்படுவது தானே

❓ துன்பம் வரும் போது என்ன செய்யலாம்?
கி.வைரமுத்து முள்ளியவளை
✍ அடுத்து வரப்போகும் இன்பத்தை எப்படி அனுபவிப்பது என்று திட்டமிடுங்கள்

❓ வரும் பொதுத்தேர்தலில் ஆளும் கட்சி தான் பெரும்பான்மை பலம் பெறுமோலிருக்கிறதே
கே.சுமன் அராலி
✍ ஆளப்படும் பெரும்பாண்மை இனத்தவரின் விருப்பம் அதுவாக இருந்தால் அது சாத்தியமே

❓ தமிழ் மக்களுக்கு பதிய அரசியல் தலைமை ஒன்றின் அவசியம் பற்றி பேசப்படுகிறதே
வ.சிந்துஜா மந்துவில்
✍ பேசப்படுகிறதது உண்மை தான் தலைமை தாங்கும் ஆளுமை எவருக்கு உண்டு என்பதுதான் விடை காண முடியாத வினா தமிழ் மக்கள் மத்தியில் அரசியல்வாதிதான் குப்பையாக கிடக்கிறார்கள் அரசியல் ஆளுமை மிக்க தலைவர் எவருமில்லை

❓ அதிகாரிகள் அசமந்தப் போக்கோடு பணியாற்றுவதாக சொல்கிறார்களே ஏன்?
செ.றொக்சன் உடுவில்
✍ அதிகாரிகள் தமக்குள்ள அதிகாரத்தை அதி காரமாக பயன்படுத்துபவர்கள்

❓ தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றம் ஒரு புதுவித மாற்றத்தை கொண்டுவரும் என என் நண்பன் சொல்கிறான் நம்பலாமா?
பொ.மயில்சாமி கற்றன்
✍ எந்த மாற்றமும் எதிர்பார்த்த மாற்றமாக இல்லாதது ஏமாற்றம் தருவதாக இருந்தால்

❓ புதிய அரசு இன்னும் 20 வருடங்கள் நீடிக்க உள்ளதாக ஆருடம் சொல்கிறார்களே
பாலா மாணிக்கதாசன் வடலியடைப்பு
✍ ஆக இன்னும் 20 வருடத்திற்கு நாட்டின் தலைவிதி இப்படியே தான் தொடரப் போகிறதா?

❓ வீடுகளில் முடங்கி கிடக்கும் பெண்களைப் பொது வெளிக்கு கொண்டுவர நல்ல ஆலோசனை என்ன?
தர்ஷிகா பரம்நாதன் கரந்தன்
✍ தொலைக்காட்சி மெகா சீரியல் நாடகங்களுக்கு தடை போடுங்கள் போதும்

❓ அதிகரித்து வரும் தொலைபேசி பாவனைகள் வாகனப் பாவனைகள் எல்லாம் உளவியல் சார்ந்த சிக்கல்கள் என்பது உண்மையா?
மு.திருச்செல்வம் பெரியகடை மன்னார்
✍ தொலைபேசிப் பாவனை ஆயுளைக் கொல்கிறது வாகன பாவனை ஆட்களை கொல்கிறது இரண்டுமே மனக்கட்டுப்பாடு இன்மையால் நிகழ்கிறது என்பது உண்மையே

❓ புதிய அரசில் முஸ்லீம்கள் ஒதுக்கப்படுகிறார்கள் போல் தெரிகிறதே!?
இ. சுதர்மன் இளவாலை
✍ அவர்கள் தாங்களும் இந்த நாட்டில் சிறுபான்மை இனம்தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டிய காலம் வந்திருக்கு!

❓ உங்களுக்கு எப்போதாவது நீங்கள் இலங்கையர் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளதா?
சபா. தமயந்தி வசாவிளான்.
✍ எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் அரசு என்னை இலங்கைத் தமிழர் என்றுதான் பதிந்து தந்துள்ளது.

❓ பல்கலைக்கழக அதிகார பீடத்தின் தடையை மீறி மாவீரர் நினைவேந்தல் நடந்துள்ளதே!
சி. குமரகுரு நல்லூர் வடக்கு.
✍ அநீதியான அதிகாரத்திற்கு மாவீரர் உறவுகள் கட்டுப்படமாட்டார்கள் என்பதை உணர்த்தியிருக்கிறார்கள்.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கு அல்லது இல.151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப்பரிசில் வழங்கப்படும்.**

பெயர் : ........................................

........................................

முகவரி : ........................................

........................................

தொ.இல : ........................................



# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

சந்தேகங்கள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மத்தியிலும் அவற்றை புறந்தள்ளி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் அரசியல் பிரமுகர்களின் பிரசன்னங்களை புறந்தள்ளி உணர்வு எழுச்சியுடன் நிறைவடைந்துள்ளன.

வீரம் விதைக்கப்பட்ட மண்ணின் மக்கள் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியார் என்பது மாவீரர் சந்நிதிகளில் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடைசியில் தேர்தலுக்குப் பின்னர் சுமந்திரன் தனது அரசியல் இருப்பை வெளிப்படுத்தும் வகையயிலான ஒரு அறிக்கையை வெளியிட்டு விட்டார் அதாவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணை அனுசர ணையுடன் நிறைவேறிய இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கான அரசின் முடிவு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என சுமந்திரன் ஐயா எச்சரித்துள்ளார்.

இதுவும் அவரதும் கட்சியினதும் வழமையான பொழுது போக்கு அதிரடி அரசியல் அறிவிப்புதான் என மக்கள் முணுமுணுத்துக் கொள்வது ஐயாமார்களுக்கு போய்சேருமோ தெரியாது

போருக்கு பின்னரான கடந்த 10 ஆண்டுகாலப் பகுதிக்குள் அரச ஆதரவு நாடுகளுனும் பின்பலமாக நின்று ஐ.நா மனித உரிமை அமர்வுகளில் இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல் விவகாரங்களின் போது அரசுக்கு முண்டு கொடுத்து கால அவகாச நீடிப்புக்கு ஆதரவு வழங்கி காப்பாற்றிய கைங்கரியத்தை நாடறியும்

தமிழ் மக்களை காப்பாற்றினார்களோ இல்லையோ அரசையும் தமது அரசியல் இருக்கைகளையும் வசதிகள் சலுகைகளையும் எவ்வாறு பயன்படுத்தினர் வளர்த்துக் கொண்டனர் என்பது ஒன்றும் ரகசியமான விடயமல்ல

கடந்த வாரம் வரை அரசு அழைத்தால் அமைச்சுப் பதவியையும் ஏற்கத் தயார் என்று ஐயா அறிவித்து விட்டு பதிலுக்கு காத்திருந்ததாகவும் செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தது. அழைப்பில்லை எனவே அறிக்கை விட்டு அசர வைக்க முயன்றுள்ளார் போலும்.

மந்திரமில்லை மாயமில்லை சுமந்திரன் இருக்கிறார் பயமே இல்லை என்று தமிழ் மக்கள் இனியும் நினைப்பார்களேயானால் தமிழ் மக்கள் பரிதாபத்திற்குரிய அப்பிராணிகளேயாவார்.

★★★

பொது இடத்தில் பொது மேடைகளில் பொது ஊடகங்களில் எப்படி உரையாடுவது என்ற ஜனநாயக பண்பு தெரியாதவரெல்லாம் இந்த நாட்டில் கட்சி தலைவராக பாராளுமன்ற உறுப்பினராக ஏன் அமைச்சராகக் கூட இருந்திருக்கிறார் என்றால் இந்த நாட்டில் மானுட நேயம் மத இன வெறி பிடித்தோரின் காலடியில் போட்டு மிதிக்கப்படுகிறது என்பதை சுலபமாக புரிந்து கொள்ள முடியும்

அதாவுல்லா என்ற நபரின் ஊடகத்தினூடான உரை பற்றித்தான் சொல்கிறேன் அவரை தமது பிரதிநிதியாக தேர்ந்தெடுத்து நாடாளுமன்றம் அனுப்பிய மக்கள் தான். அவருக்கு முன்னர் அமைச்சுப் புதவி வழங்கி அழகு பார்த்த அரசு தான். அவரை ஒரு கட்சியின் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள அவரது கட்சி தொண்டர்கள் தான் இவரின் செயலுக்காக வெட்கப்பட வேண்டும்.

★★★

புதிதாக நியமனம் பெற்றுள்ள பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களில் தமிழரோ முஸ்லீம்களோ எவருமில்லை என்ற செய்தியானது இந்த நாட்டில் பெரும்பாலும் முழுமையாக ஒரு பௌத்த சிங்கள அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது என்ற செய்தியை துல்லியமாக பதிவு செய்துள்ளது. அடுத்த வாரம் வரப் போகும் தேர்தல்களில் சிறுபான்மை இனத்தவர்கள் எந்த பெரும்பான்மை கட்சிகளுடன் எந்த கொள்கை மற்றும் கோட்பாட்டின் அடிப்படையில் சேர்ந்து கோரஸ் பாடப் போகிறார்கள் ?

தேசியம்பாடி தனித்துவத்தை இழக்கப் போகிறார்களா? தனித்துவத்தை காக்க பெரும்பான்மையுடன் போராடப் போகிறார்களா?

★★★





## யாழ். பல்கலைக்கழகம்






## யாழ். கோப்பாய்








## யாழ். சாட்டி





## படுவான்கரை

## வாகரை




## மன்னார்




## முழங்காவில்




## தேராவில்




## வன்னிவிளாங்குளம்





## கனகபுரம்















இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 01.12.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.